
நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயம்

தண்ணீர்மலை, பினாங்கு



திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்

குரோதி வருடம் ஐப்பசி 28–ஆம் நாள்

(14 - 11 - 2024)





அருள்மிகு கற்பக விநாயகர்
பிள்ளையார்பட்டி

அற்புதக் கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற் பொருள் குவிதல் வேண்டின் நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தித் தெய்வக் களஞ்சியத்து இருக்கைசென்று பொற்பதம்
பணிந்து பாரீர்பொய்யில்லை கண்ட உண்மை

பிள்ளையார் பட்டியெனும்பேரருட் சுரங்கத்தின் கண்
உள்ளவன் மலையில் பூத்த உருவத்தின் இயற்கைத் தோன்றல்
தெள்ளிய மனத்தற்கெல்லாம் திருவருள் வழங்கும் தெய்வம்
கள்ளமில் பக்தர் தந்தை கற்பக மூர்த்தியன்றோ

– கவிப்பேரரசர் கண்ணதாசன்



அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிகள்
தண்ணீர்மலை, பினாங்கு

பினாங்கு தண்ணீர்மலையான்
(கவிஞர் கண்ணதாசன்)

வாஞ்சையுடன் மீனாட்சி மதுரையிலே தேடுகிறாள்
மகன் முகத்தைக் காணவில்லை
வண்ணமயில் விசாலாட்சி காசியிலே வாடுகிறாள்
மைந்தனிடம் கருணையில்லை
காஞ்சிநகர் காமாட்சி மகன் முகத்தைக் காண்பதற்குக்
கவலுருகிறாள், கிட்டவில்லை
காடுநடமாடு சிவன் கன்னி இளந்தென்னகத்தில்
கண்கலங்கல் தீரவில்லை
தீஞ்சுவைத்தேன் பூமலரும் தெளிவான பினாங்குநகர்
தேடியவன் வந்து விட்டான்
திருக்கோவில் கொண்டபடி மலையடியில் சிலையானான்
தென்னாடன் தண்டபாணி

தண்முகில்கள் குடை போட்டுத் தாலாட்டுப் பொங்கருவி
தளிர் நடையில் ஆடி அசையும்
தலைநிமிர்ந்த குன்றத்தில் நிலையுயர்ந்த பன்மரங்கள்
தளபதிகளாக உலவும்
தண்ணீர் மலையடியில் வெண்ணீறு பூசியவன்
தண்டங்கை ஏந்தி நின்றான்
தமிழ் நாட்டு மக்களுக்கு மலை நாட்டுக் காவலெனத்
தனியாக ஆளுகின்றான்
வெண்ணீறு பூசுங்கள், வேந்தன் முகம் பாருங்கள்
விளக்கேற்றிப் பூசியுங்கள்
விடிவுவரும், வேதனைக்கு முடிவு வரும், எப்போதும்
வினை தீர்ப்பான் தண்டபாணி

– கவிப்பேரரசர் கண்ணதாசன்

பொருளடக்கம்

உ

சிவமயம்

குமரா முருகா குக ஓம் சரணம்

நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயம்,
தண்ணீர்மலை, பினாங்கு.







ஸ்ரீ விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

ஸ்ரீ அம்பாள் துதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

ஸ்ரீ தண்ணீர்மலையான் துதி

தண்ணீர்மா மலையானே தமிழ்தந்த பெருமானே
கண்ணீரா(று) உடையவனே கவின்தண்டு கையேந்தி
வெண்ணீறு பூசியவா வெல்லரிய திருமுருகா
விண்ணாளும் வேலவனே விரைந்தருள வருவாயே!

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா
அழைப்பிதழ்

14-11-2024 - வியாழக்கிழமை

காலை மணி 8.50 முதல் 10.20 வரை



முழுமுதற்கடவுளாகிய இறைவன் சிவசக்தி வடிவமாய் நமக்குத் திருவருள் செய்கிறார். சிவ ரூபத்தில் இருந்து தோன்றிய முருகப்பெருமான் ஞான ரூபமாகவும், சக்தியின் அம்சமாக சக்திவேல் வடிவிலும் அருள்பாலித்து வரும் வேல்முருகன், இச்சா, கிரியா, ஞானம் என்று சொல்லக்கூடிய வகையில் ஆறுபடை வீட்டில் தனக்கு நிகரில்லா தெய்வமாக தரணியில் அருள்புரிகிறார். "செட்டி திலகம் திலக கட்டிமணி" என்று தன் பக்தர்கள் புகழுக்குரிய தமிழ் கடவுள், முத்தமிழ் சங்க தலைவனாகவும், எங்கள் குல தெய்வமாகத் திகழும் முருகன் பல வடிவங்களில் எங்கும் நிறைந்தவனாய் திகழும் எம்பெருமான் நீர்வளம், நிலவளம், மலைவளம் மிக்க சொர்ண பூமி லெட்சுமி கடாக்ஷம் நிறைந்த மலேசியத் திருநாட்டில் அலைகடல் மத்தியில் அனைவரும் போற்றக்கூடிய சரித்திர பெருமைக்குரிய பினாங்கு மாநிலத்தில் வேண்டுவோருக்கு வேண்டிய வரம் தரும் தண்ணீர்மலை நகரத்தார் ஸ்ரீ தண்டாயுதபாணி திருவருளால் நிகழும் மங்களகரமான சுபஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசி மாதம் **28**ம் தேதி **(14-11-2024)** வியாழக்கிழமை அஸ்வதி நட்சத்திரம் வளர்பிறை, திரயோதசி சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை **8.50** மணிக்கு மேல் **10.20** மணிக்குள் தனுர் லக்னத்தில் எல்லாம் வல்ல முருகப்பெருமான் விமானம் (கோபுரம்) ஸ்ரீ மகா கணபதி, ஸ்ரீ தண்டாயுதபாணி பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. பக்த பெருமக்கள் அனைவரும் யாகசாலை பூஜை மற்றும் கும்பாபிஷேக வைபவத்தில் கலந்துகொண்டு மகிழ்ந்து எல்லாம் வல்ல முருகப்பெருமான் ஸ்ரீ தண்டாயுதபாணி திருவருள் பெற்று பேரானந்த பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

தேதி/கிழமை	நேரம்	நிகழ்ச்சிகள்
8-11-2024 வெள்ளிக்கிழமை ஐப்பசி **22**	காலை **7.00-8.00** காலை **10.15** காலை **11.00** மாலை **5.30**	அனுக்ஞை - விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், எஜமானர் அனுக்ஞை, பஞ்சகவ்ய பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், ஜப பாராயணம், வடுக பூஜை, பூர்ணாகுதி தீபாராதனை. மகா கணபதி அபிஷேகம் தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், பிரவேச பலி, ரட்சோக்ன ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
9-11-2024 சனிக்கிழமை ஐப்பசி **23**	காலை **9.15** மாலை **5.30**	விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், சுப்ரமண்ய மூல மந்திர ஜெபம், சுப்ரமண்ய சத்ருசம்ஹார திரிசதி ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், கிராம சாந்தி, திசாஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
10-11-2024 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி **24**	காலை **10.00** மாலை **4.15**	வாஸ்து சாந்தி விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், விமான (கோபுரம்) கலச ஸ்தாபனம் ஸ்ரீ ஸூக்த ஹோமம், தன பூஜை, அஷ்ட லெஷ்மி தீப பூஜை.
11-11-2024 திங்கட்கிழமை ஐப்பசி **25**	காலை **10.00** மாலை **4.30** மாலை **5.30** மாலை **6.15-7.15** இரவு **9.00**	விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், ம்ருத்ஸங்கிரகணம், மண் எடுத்தல், சூர்யாக்னி ஸங்கிரகணம், யாகசாலை நிர்மாணம், தீபஸ்தாபனம்,தான்ய ஸ்தாபனம். விக்னேஷ்வர பூஜை, அங்குரார்பண பூஜை, ரக்ஷாபந்தனம் காப்பு கட்டுதல். கும்ப அலங்காரம். கலாகர்ஷனம், கும்பங்கள் யாகசாலை பிரவேசம், முதற்கால யாகசாலை பூஜை ஆரம்பம் பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்
12-11-2024 செவ்வாய்க்கிழமை ஐப்பசி **26**	காலை **9.00** மாலை **5.30**	விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், விசேட சந்தி, இரண்டாம் கால யாகசாலை பூஜை, யந்திர ஸ்தாபனம்,பக்தர்கள் தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் வைத்தல், மாலை **6.00** மணி வரை திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், விசேட சந்தி, மூன்றாம் கால யாகசாலை பூஜை, மூல மந்திர ஹோமம், திரவ்யாகுதி, அஷ்டபந்தன மருந்து சாற்றுதல், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
13-11-2024 புதன்கிழமை ஐப்பசி **27**	காலை **8.00** மாலை **5.30**	விக்னேஷ்வர பூஜை, கோ பூஜை, அஸ்வ பூஜை, புண்யாகவாசனம், விசேட சந்தி, நான்காம் கால யாகசாலை பூஜை, (பக்தர்கள் தைலகாப்பு-எண்ணெய் வைத்தல்), மாலை **6.00** மணி வரை திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், விசேட சந்தி, ஐந்தாம் கால யாகசாலை பூஜை, அஸ்த்ர மந்திர ஜப ஹோமம், விசேஷ திரவ்யாகுதி, பூர்ணாகுதி, வேத சிவாகம இதிகாச, புராண, தேவார, ஆசீர்வாத விசேஷ உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
14-11-2024 வியாழக்கிழமை ஐப்பசி **28**	காலை **5.00** காலை **9.00** காலை **9.45** காலை **10.05** காலை **11.00** மாலை **5.00** மாலை **6.30**	விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், ஆறாம் கால யாகசாலை பூஜை, நாடிசந்தானம், ஸ்பருசாகுதி, திரவ்யாகுதி, மகா பூர்ணாகுதி, தீபாராதனை. யாத்ராதானம், கடம் புறப்பாடு. நகரத்தார் தண்ணீர்மலை ஸ்ரீ தண்டாயுதபாணி விமானம் (கோபுரம்) திருக்குட நன்னீராட்டு. மூலஸ்தான ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ தண்டாயுதபாணி விமான பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம், பட்டு சாற்றுதல் அன்னதானம். மகாபிஷேகம். விசேஷ சோடச உபசார தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

குறிப்பு: யாகசாலை பூஜை காலத்தில் வேத பாராயணம் தேவார திருப்புகழ் மேள நாதஸ்வர இன்னிசை நடைபெறும்.

15-11-2024 வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து **48** நாட்களுக்கு மண்டலாபிஷேக பூஜை நடைபெறும்.

சர்வசாதகம்: பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில் தலைமைக் குருக்கள்
விகாஸ் ரத்னா சிவஸ்ரீ K. பிச்சை சிவாச்சாரியார் அவர்கள்

சிற்பக் கலாநிதி, சிற்பக்கலைச் செம்மல்
S. நாகராஜன் ஸ்தபதி, தேவகோட்டை

இங்ஙனம்
பதிவுபெற்ற அறங்காவலர்கள்,
நாட்டுக்கோட்டை செட்டியார்
கோவில்கள், பினாங்கு.



உ
சிவமயம்

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை

அறங்காவலர் உரை

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.
– கந்த புராணம்

எழில்மிகு பினாங்கு நகரில் வாட்டர்ஃபால் சாலையில், பசுமை நிறைந்து பூத்துக்குலுங்கும் சோலையில் அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ தண்ணீர்மலையானுக்கு நடைபெறும் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருஞ்சாந்தி விழாவை முன்னிட்டு வெளியீடு காணும் இந்த மலருக்கு பினாங்கு நாட்டுக்கோட்டை ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலய அறங்காவலர்கள் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் சார்பாக அறங்காவலர் உரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்ற முது மொழிக்கிணங்க, நம் முன்னோர்கள் பாய்மரக்கப்பலில் இந்நாட்டிற்கு வாணிபம் செய்ய வந்த சமயம் ‘செட்டி கப்பலுக்கு செந்தூரான் துணை’ என்ற கருத்துடன் தம்மோடு கூடவே ஸ்ரீ தண்டாயுதபாணிப் பெருமானை அழைத்து வந்து, அவருக்கு ஆலயம் கட்டி, அவரை பிரதிஷ்டை செய்து வழிபட்டு தைப்பூசம், கந்த சஷ்டி மற்றும் பல திருவிழாக்கள் எடுத்து, வழி வழியாக பொருள் ஈட்டி சிறப்பாக தொடர்ந்து நிர்வாகம் செய்து வந்தனர். அந்த ஈடு இணையற்ற சேவையை என்றும் நம் சமூகம் மறக்க இயலாது.

இவ்வாலயத்தின் முதல் குடமுழுக்கு 1857ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் தேதி அன்று நடைபெற்றது. வருகின்ற 14-11-2024 இல் 8வது திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுகிறது.

தற்சமயம் பாலாலயம் செய்து ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு புதிய கோபுர பொலிவுடன் எட்டு மாதத்தில் பலரின் உன்னதமான உழைப்பின் பேரில் திருப்பணிகள் பூர்த்தியாகி மங்களகரமான குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுவது நமக்கெல்லாம் பேரானந்தத்தையும் பெருமகிழ்ச்சியையும் கொடுக்கிறது.

இந்த ஆலயத் திருப்பணிகள் நல்ல முறையில் நடைபெற அயராது வேலை செய்து முடித்த ஸ்தபதி எஸ். நாகராஜன் குழுவினர்க்கும், குடமுழுக்கு நல்ல முறையில் நடைபெற உடனிருந்து எல்லா நிகழ்வுகளிலும் பெரும் உதவி செய்த அறங்காவலர் உயர் திரு. உ.மு.சுப.லெ.அழ.லெட்சுமணன் (எ) சண்முகம் அவர்களுக்கும் அன்னாரது மகன் மெய்யப்பன் (எ) மணிகண்டனுக்கும் மற்றும் எனக்கு பக்க பலமாக இருந்து சளைக்காமல் அனைத்து காரியங்களையும் செவ்வனே செய்து வந்த என் மகன் நாராயணன் அண்ணாமலை (எ) ரவிக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மலரை சிறப்பாகத் தயாரித்து மணம் பரப்பச் செய்த திரு. கும.லெ.தண்ணிமலை, டாக்டர் புனிதவதி நாராயணன் மற்றும் திருமதி. தேன்மொழி நாகப்பன் அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆலயத் திருப்பணிகள் நல்ல முறையில் நடைபெற எல்லா வகையிலும் உதவி புரிந்த நல்ல உள்ளங்கொண்ட பெருமக்களுக்கும், ஆலய உதவியாளர்களுக்கும், சிப்பந்திகளுக்கும், ஸ்ரீ தண்ணீர்மலையான் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருஞ்சாந்தி விழாவை காண வந்திருக்கும் பக்தகோடி பெருமக்களுக்கும், ஆலய அறங்காவலர்கள் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் சார்பாக எங்களின் அன்பையும் பாராட்டையும் சமர்ப்பிக்கின்றேன்.

ஸ்ரீ தண்ணீர்மலையான் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெறும் இந்த நல்ல தருணத்தில் அனைத்து மக்களும் சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ அவர் திருவடிகளில் சமர்ப்பித்து அருள் புரிய வேண்டுகிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

டாக்டர் அ. நாராயணன்
அறங்காவலர்
பதிவுபெற்ற நாட்டுக்கோட்டை செட்டியார் கோவில்கள், பினாங்கு

மலர் குழு முகவுரை

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இப்பெரும் பாக்கியம் கிட்டுதற்கு
தன்னிகரில்லா தண்ணீர்மலையான் தாள்களுக்கு
திருக்குட நன்னீராட்டு விழா மலர் புனையும் பேறு மாபெரும் பேறே.
இப்பேற்றினை எமக்கு உவந்து அளித்த அறங்காவலர்களுக்கு எமது நன்றி.

கீழை நாடுகளின் ஒளிரும் முத்தாகத் திகழும் இந்த பினாங்கு மாநகரத்தில், பன்னெடுங்காலமாக பக்தர்களைக் காத்து அருள் புரியும் தண்ணீர்மலை தண்டாயுதபாணியின் திருத்தாள் வணங்கி இத்திருப்பணியைத் தொடங்கினோம்.

இம்மலரில் எளிமையாக, சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் பொருட்டு அன்றாட வாழ்வில் நிகழும் ஆன்மீக சிந்தனைகளை அனைவரும் படித்து சிந்தித்து பயன் பெறுமளவிற்கு எளிமையாக தமிழிலும் ஆங்கிலத்திலும் தொகுத்து வழங்கியுள்ளோம். அறங்காவலர்களின் விருப்பத்திற்கிணங்க முடிந்த வரை பினாங்கு மற்றும் அதன் சுற்று வட்டார மக்களிடமும், தண்ணிர்மலையானுக்கு பரிச்சயமானவர்களிடமுமே கட்டுரைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நம் தண்ணீர்மலையானின் குடமுழுக்கு மலரில் நம் எழுத்தோவியமும் இடம்பெற்றுள்ளதே எனும் ஏற்றத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதே குறிக்கோள்.

எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இம்மலருக்கு கட்டுரைகள், கவிதைகள் வழங்கி உதவிய படைப்பாளர்கள் அனைவருக்கும், ஐயங்கள், திருத்தங்கள் குறித்து தொடர்பு கொண்டபொழுது, சிரமம் பாராமல் திருத்தம் செய்து உதவியதற்கும் எங்கள் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்ற பலவகைகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும், மலரை சிறப்பாக வடிவமைத்துக் கொடுத்த மாருதி அச்சகத்திற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலர் குழுவில் சேவையாற்றப் பணித்தது தண்ணீர்மலையான் எங்களுக்கு அளித்த தன்னிகரில்லாத தனிப்பெருங்கருணை எனப் போற்றி, இம்மலரை அவன் அருளாலே அவன் தாளில் சமர்ப்பிக்கிறோம்.

டாக்டர் புனிதவதி நாராயணன்
திரு. கும. லெ. தண்ணிமலை
திருமதி. தேன்மொழி நாகப்பன்

Message from The Right Hanourable
Chief Minister of Penang
Y.A.B. CHOW KON YEOW



The Chief Minister's Message for Nattukottai Chettiar Community

I would like to extend my sincere greetings to the Nattukottai Chettiar Community. Thank you for allowing me to pen a message in this souvenir.

The Sri Thandayuthapani Temple, Penang, was built in 1857 and to date, it is regarded as one of the oldest Hindu temples in Malaysia. The temple not only serve as a place for worship but also a centre for cultural and social activities. Over the decades, this temple has attracted thousands of devotees from different communities and ethnicities with its cultural activities and festivals, one of which is Thaipusam. Attributing this flourishment would be the Nattukottai Chettiar Community who had been in the forefront of the erections as well as the maintenance of temples.

After extensive renovations and rebuilding, I am pleased to acknowledge that the *'Maha Kumbhabhishegam'* (Consecration) ceremony of this temple is set to be slated on 14 November 2024. It is understood that funds for the renovation and rebuilding of the temple are solely contributed by the Nattukottai Chettiar Community without any assistance from outside. With that, I would like to congratulate them on their efforts.

As both a multi-ethnic and multi-cultural state, the Penang state government is committed to upholding and promoting various cultural and religious beliefs while respecting their differences. We believe nothing symbolizes this commitment more than the *'The Street of Harmony'* that lies in Georgetown, a recognised UNESCO World Heritage City as well as Bayan Baru.

On this grand occasion of the *'Maha Kumbhabhishegam'* of the temple, I wish to congratulate the trustees, and the members of the Chettiar community in the management of the temple for their tireless efforts and dedication.

Wishing you a grand success.

Thank You.

Warm regards,

THE RT HON CHOW KON YEOW

Chief Minister of Penang

YB JAGDEEP SINGH DEO
Timbalan Ketua Menteri II Negeri Pulau Pinang
Pembangunan Modal Insan dan Sains & Teknologi



பினாங்கு அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டு விழாவின் சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வேளையில் இவ்வாலயத்தின் கட்டுமானப்பணிகளை சிறப்பாக நடத்தி முடித்திருக்கும் இவ்வாலய நிர்வாக அறங்காவலர்களுக்கும், ஆலய கட்டடக்குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பினாங்கு மாநிலத்தின் சரித்திரத்தில் இவ்வாலயத்திற்கு சிறப்பான ஒரு இடமுள்ளது. பினாங்கில் அமைந்திருக்கும் தண்ணீர்மலை முருகன் ஆலயத்திற்கு மிக அருகில் அமைந்திருக்கின்றது. பினாங்கு மாநிலத்தில் தமிழர்களின் சரித்திரத்தில் இவ்வாலயத்தின் பங்கு யாராலும் மறைக்க முடியாது. மறுக்கவும் முடியாது.

ஆலயங்கள் வெறும் சமயக்கூடங்களாக மட்டுமில்லாமல், சமுதாயக்கூடங்களாகவும் மாற வேண்டும் என்பது தான் நமது விருப்பம். ஆகவே அந்த அடிப்படையில் அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயமும் சமய சேவையோடு, சமுதாய சேவையையும் சிறப்பே செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பினாங்கு மாநிலத்தில் சமயங்களுக்கிடையான நல்லுறவும், சமய சுதந்திரமும் நீடித்து சுபிட்சம் பெற இந்த திருக்குட நன்னீராட்டு விழாவும் ஒரு தொடக்கமாக அமைய வேண்டுமென விரும்புகிறேன். இவ்வாலயத்தின் திருக்குட நன்னீராட்டு விழா சிறப்போடு நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(YB JAGDEEP SINGH DEO)

: Tingkat 52, KOMTAR, 10503 Pulau Pinang
04-262 9930 / 04-650 5134 jagdeepsinghdeo@penang.gov.my

PENANG 2030



DATUK SERI M. SARAVANAN
Ahli Parlimen Tapah

ம.இ.கா தேசியத் துணைத்தலைவர்

மாண்புமிகு டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன் அவர்களின்
வாழ்த்துச்செய்தி

‘கோபுர தரிசனம் கோடி புண்ணியம்’

தண்ணீர் மலை பினாங்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத்தின், திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு, வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி. மலேசியாவில் பிரசித்தி பெற்ற முருகன் திருத்தலங்களில் ஒன்றான பினாங்கு தண்ணீர் மலை ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற மனமார்ந்த வாழ்த்துகள்.

‘நீறில்லா நெற்றி பாழ்; கோயில் இல்லா ஊர் பாழ்’. இதற்கு ஆன்மீக ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் காரணம் உண்டு. கோயில் கலசங்கள் மின்னலை தாக்கும் சக்தியை கொண்டுள்ளதால் அந்த ஊர் இடி மின்னல் தாக்குதலில் இருந்த பாதிக்கப்படாமல் காக்க முடியும். எனவேதான் நம் முன்னோர்கள் ‘கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்று கூறியுள்ளார்கள்.

தமிழகத்தில் முருகனுக்கு அறுபடை வீடுகள் என்றால் மலேசியாவில் மூன்று படை வீடுகள். அதில் ஒன்றுதான் இந்த தண்ணீர் மலை. இங்கு ஞான ரூபமாகவும் சக்தியின் அம்சமாகவும் இருக்கும் வேல்முருகன். பக்தர்கள் கேட்கும் வரம் தரும் கடவுளாக இருக்கிறார்.

PUSAT KHIDMAT AHLI PARLIMEN TAPAH
No. 21, Tingkat 1, Wisma Sengoden, Jalan Raja, Tapah Perak.
No. Tel : 05-401 3101 / Faks : 05-401 3102 Email : parlimentapah@gmail.com

தொன்மை வாய்ந்த அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்குட நன்னீராட்டு விழாவிற்குப் பக்தர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு முருகன் திருவருள் பெற வேண்டும். பக்தர்களின் நம்பிக்கையாக விளங்கும் முருகன் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே

வாழ்த்துகளுடன்,

டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன்

24/10/2024

உ


ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் தேவஸ்தானம்

SRI MAHA MARIAMMAN TEMPLE DHEVASTHANAM

163. ஜாலான் துன் எச். எஸ். லீ. 50000 கோலாலம்பூர். 163, Jalan Tun H.S. Lee, 50000 Kuala Lumpur.
Tel: 20785323/20317250 Fax: 20310272 E-mail: srimaha163kl@gmail.com Website: www.batucavesmuruga.org

SRI MAHA MARIAMMAN TEMPLE, KUALA LUMPUR TEL: 20783467
SRI GANESAR TEMPLE, JALAN PUDU LAMA, KUALA LUMPUR TEL: 20789825
SRI SUBRAMANIASWAMY TEMPLE, BATU CAVES TEL: 61896284
BATU CAVES TAMIL SCHOOL TEL: 61890354
APPAR TAMIL SCHOOL TEL: 26984792

ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் தேவஸ்தானத்தின் தலைவர் மதிப்புமிகு டான்ஸ்ரீ டத்தோ டாக்டர் ஆர்.நடராஜா அவர்களின் வாழ்த்து செய்தி.



உலகப் பிரசித்தி பெற்ற பத்து மலை முருகன் ஆலயத்தை அடுத்து, மலேசியாவில் மிகவும் புகழ் பெற்றது பினாங்கு தண்ணீர் மலை முருகன் ஆலயம். பினாங்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத்தின், திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு, வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி.

ஞான ரூபமாகவும் சக்தியின் அம்சமாகவும் விளங்கும் வேல்முருகன். தமிழ்க் கடவுளாகவும் பக்தர்கள் கேட்கும் வரம் தரும் கடவுளாகவும் இருக்கிறார்.

நமது வாழ்வு செழுமையடையவும், முழுமையடையவும் சமயம் ஒரு சிறந்த வழிகாட்டல். தெளிவான, முறையான சமய அறிவை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் பொறுப்பு நமக்கிருக்கிறது.

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது..

இறைவனை மனமுருகி வணங்க வேண்டும் என்கிறார் திருஞானசம்பந்தர். அப்பொழுதுதான் அவனது அருளை முழுமையாகப் பெற முடியும்.

மிகவும் தொன்மை வாய்ந்த அருள்மிகு பாலதண்டாயுதபாணி மகா கும்பாபிஷேகத்துக்கு பக்தர்கள் அனைவரும் திரளாகக்

கலந்து கொண்டு முருகனின் திருவருள் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும். பக்தர்களின் நம்பிக்கையாக விளங்கும் முருகன் அருளை அனைவரும் பெற வேண்டும்.

12 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் திருக்குட நன்னீராட்டு விழாவைக் காண்பது மிகவும் நன்மை பயக்கும் என்று ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். அந்தப் பயனை அனைத்து பக்த கோடிப் பெரு மக்களும் அடைய வேண்டும்.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்

என்றும் இறைபணியில்,

டான்ஸ்ரீ டத்தோ டாக்டர் ஆர்.நடராஜா

தலைவர், அறங்காவலர்
ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் தேவஸ்தானம்
கோலாலம்பூர்.

உ
Sivamayam

Koviloor Madalayam
Koviloor - 630 307
Madurai Road, Koviloor
Sivagangai Dist

☎ 04565 - 238783, 94433 35312
Email : slnaiyar@gmail.com

Sri La Sri
Narayana Gnana Desiga Swamigal
Madathipathy

ஆசியுரை

கோவிலூர் ஆண்டவர் தம் குருவருளும், கோவிலூர் அருள்மிகு திருநெல்லையம்மன் உடனாய கொற்றவாளீசர் திருவருளும் கோவிலூர் சிவகாமி உடனாய ஆனந்த நடராசர் திருவருளும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

பினாங்கு மாநகரில் தண்ணீர்மலையில் அமர்ந்து அருள்பாலித்து வரும் அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் குடமுழுக்கு விழா நடைபெறுவதை அறிந்து மகிழ்கிறோம். கோவிலூர் மடத்தின் ஐந்தாம் பட்டமாக விளங்கிய சீர் வளர் சீர் வீரப்ப சுவாமிகளின் திருவுளப் பாங்கின்படி வரையப்பெற்ற திருக்கோயில் வரைபடத்தின்படி அமைக்கப்பெற்ற கோயில் தண்ணீர்மலையான் கோயில் ஆகும். இக்கோயிலின் குடமுழுக்கு விழா என்பது கோவிலூர் மடத்தின் திருவிழா என்றே கருதத்தக்கது. கி.பி. 1850 ஆம் ஆண்டு வாக்கில் கோவில் விட்டில் வைத்து வணங்கப்பெற்ற தங்க தண்டாயுதபாணி கி.பி. 1857 ஆம் ஆண்டில் தண்ணீர்மலை தண்டாயுதபாணியாக அருள்மணம் ஏற்றார். இப்புதிய கோயில் நேர்கோடு, குறுக்கோடி என்ற அளவில் கூட்டல் குறிபோன்று அமைந்து நகரத்தார் தம் வாழ்வினை கூட்டிக் கொண்டே இருக்கின்றது. கூட்டி வந்த முருகன் கூடவே இருந்து அருள்புரிகிறான்.

தண்ணீர் மலை இயற்கை எழில் சிறந்த மலை. அடிவாரக் கோயிலும், மலைக் கோயிலும் ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழனி மலையை எண்ணவைக்கும் சிறப்புடையது. உன்ன முருகனின் உலகப் படைவீடுகளில் முதலாவதாக எண்ணிப் போற்றத்தக்கது தண்ணீர் மலையாகும்.

இம்முருகனின் உடலில் உள்ள மச்சக் குறி மாணிக்கக் குறியாக நின்று அவன் அருள் பேசும். தென்னாட்டுக் கட்டடக் கலைச் சிறப்பும், ஓவியச் சிறப்பும் ஒருங்கே கொண்ட அருமைத் திருக்கோயில் தண்ணீர் மலையான் திருக்கோயில். இக்கோயிலின் குடமுழுக்கு விழா 14-11-2024 அன்று பெருஞ்சிறப்புடன் நடைபெறுகிறது. நகரத்தார் குலம் வாழ்வாங்கு வாழ்ந்த குலமாக கவிஞர் கண்ணதாசனால் போற்றப்பட்ட குலம். இக்குலத்தின் சிறப்பினை உலக அளவில் வெளிப்படுத்திக் கொண்டு இருப்பது பினாங்கு நகரத்தார் தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகும். இக்கோயிலின் அருள் தன்மையும், தெய்வீகத் தன்மையும் இன்னும் இக்குடமுழுக்குவிழாவால் சிறப்பு பெறும். வளரும். பெருகும்.

இக்குடமுழுக்கு விழாவிற்கு உதவிய அனைத்து பெருமக்களுக்கும், குடமுழுக்கு விழாக் குழுவினருக்கும். மலேசிய தமிழ் மக்களுக்கும் எமது பாரட்டும் வாழ்த்தும் நன்றியும்.

வேணும்
ஸ்ரீ சற்குருநாதன் துணை

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்
இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517
வேலூர் மாவட்டம், தமிழ்நாடு

STD 04172 - 266350
267350
மருத்துவமனை 266320
பள்ளி 266420

10-10-2024



அன்புடையீர்
அருளாசி

பக்தியும், ஞானமும் பரவிடும் மார்க்கமும் எத்தனையோ வகை இருப்பினும் இகத்தில் முக்தி தந்து அனுதினமும் முழுப்பலன் நல்க சாத்தியமாவது சரவணபவனே.

உலகனைத்தும் புகழ் திருப்பழனிமலை மேவும் ஓங்கார குருநாதனாகிய பழனி தண்டாயுதபாணியின் திருவருளையே தங்களது மூலதனமாக வைத்துத் தன்னம்பிக்கையுடன் துணிவுடன் தங்களது தளராத முயற்சியில் அயராத உழைப்பால் திரைகடல் ஓடியும் திரவியம் சேர்த்தவர்கள் கோவில்களை நிர்மாணித்து நடத்தி மேன்மை தரும் சைவ நீதியை மேல் நாடுகளில் பரவிடச் செய்தவர்கள் நகரத்தார்கள்.

தாங்கள் சம்பாதித்த செல்வங்களில் ஒரு பகுதியை அருட் பணிகளுக்கும் அறப்பணிகளுக்கும் செலவு செய்து வருவதைத் தங்களது வாழ்நாளில் தலையாய கடமையாகக் கருதுபவர்கள். அந்த வகையில் வணிகம் சம்பந்தமாக மலேசியா நாட்டின் பினாங்கு நகரில் கி.பி. 1818ஆம் ஆண்டில் குடியேறிய காரைக்குடி சுற்றுவட்டார பெருமக்கள் ஐம்பொன்னாலான தண்டாயுதபாணி சிலையை உருவாக்கி வழிபாடு நடத்தி மகிழ்ந்தனர் என்பது வரலாற்றுச் செய்தியாகும். அன்று முதல் இன்று வரை நகரத்தார் சமுதாய மக்கள் வாழையடி வாழை எனத் தொய்வின்றி முறையான வழிபாடுகளைத் தினமும் செய்து வருவதும், ஆண்டுதோறும் வரும் முக்கிய விழாக்கள் மற்றும் தைப்பூசத் திருநாளில் பிரமிக்க வைக்கும் திருவிழாவினையும் வெகு விமரிசையாக நடத்தி வருவதையும் அறிந்து மனம் மகிழ்கின்றேன். பழனி அருள்மிகு தண்டாயுதபாணியின் திருவருளால் பழமையும் வரலாற்றுப் பிரசித்தியும் பெற்ற இத் திருக்கோயில் வரும் 14-11-2024 வியாழக்கிழமை அன்று வெகு விமரிசையாக மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதை அறிந்து மகிழ்கிறேன்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் திருக்கோயில் அறக்கட்டளை அன்பர்கள், அறச் செல்வர்கள் ஒத்துழைப்புடன் நடத்தும் மகா கும்பாபிஷேக விழாவிற்குத் தங்களது உடலால், மனதால், உழைப்பால், பொருளால் தங்களை அர்ப்பணித்தவர்கள் அனைவரும், அறங்காவலர் குழுவின் தலைவர் திருமிகு. டாக்டர் . நாராயணன் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகளும் எல்லா நலன்களையும் வளங்களையும் பெற்று இன்புற்று வாழ்வாங்கு வாழ்க வாழ்க என வாழ்த்தி மகிழும்

10-10-24

....


பாலமுருகனடிமை

உ



SIVASRI K. PITCHAI GURUKKAL

Chief Priest, Sri Karpaga Vinayagar Temple
Principal, Karpaga Vinayagar Veda Agama Vidhyalayam
Founder, Sivaneri Kazhakam
Secretary, Karpaga Vinayagar School,
Founder, Global Hindu Spiritual & Cultural Center
Pillaiyarpatti - 630 207, Sivagangai District, Tamilnadu, South India



ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

வாழ்த்துரை

" சண்முக கடவுள் போற்றி சரவணத் துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
தன்மலர்க் கடம்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி"


பன்னெடுங்காலமாக பயணம் செய்து பல துறைகளில் வெற்றிக்கொடி நாட்டிய பெருமை நம் நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களுக்கு உண்டு. இந்தியத் திருநாட்டிலும், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பர்மா மற்றும் பல நாடுகளில் ஆன்மீக வளர்ச்சிக்காக ஸ்ரீ தண்டாயுதபாணியை வழிபட்டு அழகிய கோயில்களை அமைத்ததனை அனைவரும் அறிவார்.

இன்றும் நகரத்தார் வாரிசுகள் முன்னேறி தர்மங்களை கட்டிக் காத்து வருவது பெருமைக்குரியது. பினாங்கு தண்ணிர் மலை ஆண்டவர் கோயிலை நன்கு நிர்வாகித்து தைப்பூச விழாவினை உலகம் வியக்கும் வண்ணம் கொண்டாடி வருகின்றனர். பல திருப்பணிகள் நடந்து கும்பாபிஷேகமும் சிறப்புற நடந்துள்ளது. தற்போதும் 14/11/2024 மஹாகும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்று நகரத்தார் பெருமக்களும் மலேசியா மற்றும் உலகம் முழுவதும் வாழும் அனைவரும் எல்லா நலன்களும் வளமும் பெற்று வாழ்வாங்கு வாழ ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியை பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

Sivasri K. PITCHAI KURUKKAL
PILLAIYARPATTI - 630 207.

சிவஸ்ரீ K. பிச்சைக்குருக்கள்
பிள்ளையார்பட்டி

Ph: 04577 - 290591 | H/P: 00919443362320 | E-mail: pitchaianna@gmail.com



அருள்மிகு தண்டாயுதபாணி ஜோடனையுடன்







முகூர்த்தக்கால் நிகழ்வு 2024



கிருஷ்ணப் பறவை
காட்சி தந்தது



டாக்டர் சா. நா. அ. சொ. அ. நாராயணன் செட்டியார்



சா. நா. அ. அழ. சித. அருணாசலம் செட்டியார்



அ. மு. க. மு. அழ. மு. மு. ரவி முத்துக்கருப்பன் செட்டியார்



மு. ராம. சொ. பெரி. சொ. வீரப்பன் செட்டியார்



மு. ராம. சுப. சாமி. சுவேதாரண்யம் செட்டியார்



உ. மு. சுப. மெ. அழ. லெட்சுமணன் (எ) சண்முகம் செட்டியார்



சிவா குருக்கள் மற்றும் ஆலய சிப்பந்திகள்



தலைமை ஸ்தபதி நாகராஜன் மற்றும் ஸ்தபதிகள்



நகரத்தார் தொண்டர் குழு



குடமுழுக்கு நன்னீராட்டு விழா மலர்க் குழு



தொண்டர் குழு












புதுப்பொலிவு பெறும் கோபுரத்தின் தோற்றங்கள்




1890s



1900s



1900s




1910s



2023







[187]
Hindu Silver Car, Penang
Cancellation: PENANG/1914
Back: Divided
Publisher: No. 53, A. Beach Street, Penang







The Penang Thaipusam has it's beginnings at the Waterfall Temple which was located at the foot of the Waterfall in the Botanical Gardens. The founding of Penang as a British Settlement in 1786 provided the impetus for the arrival of Indians. The first Indians to arrive with Captain Francis Light included domestic servants, sepoys and camp followers[5]. By 1790, there were 1,000 Indians on the island. Due to the scarcity of fresh water in the ever growing George Town, there was a dire need to locate a clean and reliable water source and soon after, the Waterfall was discovered. Based on oral tradition, the *Vel* was installed circa 1795 and the shrine was expanded upon by Indians who built the early aqueduct from the Waterfall to George Town in 1804. This painting by Captain Charles Henry Cazalet shows the temple in existence in 1856[6].



A later image from the 1900s

The Daily Advertiser

SINGAPORE THURSDAY, JAN. 11, 1894.

THE CHITTIES.

THE Chitty community of Singapore intend to petition His Excellency the Acting Governor for a public holiday on Monday, 22nd current. These enterprising gentlemen have brought out from India a silver car which has been very costly. Special men have come from India to fix up the car in a house, made for the occasion, adjoining the Hindoo temple in Tank Road. It is the intention of the Chitties to invite His Excellency and the leading members of the various communities to witness the celebration of the Thaipusum—a Hindoo religious rite. This is the greatest of Hindoo festivals, and it is held once a year.

THE CHITTY PROCESSION.


LAST night the Chitty procession took place agian, but on this occasion it only went round the Police Parade Ground several times, and about nine o'clock the god was removed from the Silver Pyramid and brought into the temple and placed in the left aisle. The temple of course, on an occasion like this was crowded to such an extent that one could scarcely inhale the breath of life, so all visitors whether Europeans or Asiatics had to leave early after having seen all that was to be seen. The guests and visitors of the evening were very courteously received by the Chitties, who poured lavender water freely on the handkerchiefs of the European visitors and on their going near the shrine were each presented with a little bouquet. Mr. John Anderson, of Messrs. Guthrie & Co., was made a Lord Mayor on the occasion; for a large string of flowers was put over his neck. He wore it with much pride and satisfaction. Outside the temple some ladies and gentlemen were seen buying cakes from the stalls owned by the Klings. The cakes looked very neat and attractive, and the stall owners called out now and then

"Very good! very good!
Banyak putch! banyak bagus!"

Some military officers with ladies, were also seen buying oranges and eating them on the spot, so to some ladies and gentlemen, a very enjoyable evening must have been spent.

The Silver Pyramid is said to have cost $30,000. It was constructed by their own countrymen in Madras and took six years to complete. The god which is a small image was decorated with diamonds. A similar pyramid was also built for the Chitties in Penang at the same cost. The Chitties would have let off fire-works, but they say the Police refused to grant them permission to do so. The expenses connected with the three or four days' festivity will amount to $19,000.





Chetty Temple, Penang





ஆடிப்பூரத்தன்று முத்துமாரியம்மன் உட்பிரகாரம் வலம் வரும் காட்சி



காவடிப் பொங்கலன்று நகரத்தார் காவடிகள்



தைப்பூசத்தில் நகரத்தார் காவடிகள்



வெள்ளி இரத ஊர்வலத்தில் எண்ணிலடங்கா
சிதறு தேங்காய்கள் உடைக்கப்படும் காட்சி



தைப்பூச அன்னதானம்



சமூகநல அமைப்புகளுக்கு நன்கொடைகள்





கோவில் கோபுரமும், வெளிப் பிரகாரமும்
புதுப்பொலிவுபெறும் தோற்றங்கள்

தந்தைக்கு உபதேசம் சிற்பம்




இடும்பன் சன்னிதியிலிருந்து கோவிலின் உட்புற தோற்றம்





தூரிகை சித்திரங்கள்

ரவி வர்மாவின் ஓவியங்கள்




உற்சவமூர்த்தி தண்ணீர்மலை கோவில் வந்து சேருதல்



கட்டியம் கூறுதல்



PENANG THAIPUSAM 2024
NATTUKKKOTTAI NAGARATHAR KAVADI PILLAIGAL



பினாங்கு நாட்டுக்கோட்டை நகரத்தார்

அருள்மிகு தண்ணீர்மலை தண்டாயுதபாணி ஆலயம் தோற்றமும் வளர்ச்சியும்

(டாக்டர் வ. ஜெயபாலன் வள்ளியப்பன், ஈப்போ)

நகரத்தார்கள்

'ஒரு நாட்டுக்கு கோட்டைக் காப்பு வீரர்கள் இருப்பது போல், இந்து மதம் என்னும் கோட்டைக்கு தனவணிக நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் கோட்டைக்காப்பு வீரர்களாக இருக்கிறார்கள்' – காஞ்சிப் பெரியவர்.

நகரத்தார் சமூகம் – கோவிலை மையாக வைத்துத் தங்கள் வாழ்க்கை முறையை கட்டமைத்துக் கொண்ட ஒரு தமிழ்ச்சமூகம்.

கடல் பயணம் பாதுகாப்பாக இல்லாத காலத்தில் கூட பாய்மரக் கப்பலிலே, கடவுளே துணையென்று கடலோடி மலைநாடும் பிறநாடும் சென்றவர்கள். அவர்கள் பெண்டு பிள்ளைகளை தனியாகத் தாயகத்தில் விட்டு வந்தாலும், செந்தூர் முருகனின் வேலையும், விபூதிப் பையையும் வழித்துணையாக எடுத்து வந்தார்கள். சென்ற இடங்களில் அவர்களுக்கு நிறையப் பொருள்கள் கிடைத்தது. அந்தப் பொருளை அருளாக மாற்றினார்கள். முருகனைத் தன் வியாபாரத்தில் பங்காளியாக மாற்றியவர்கள் இந்த நகரத்தார்கள். வருமானத்தில் ஒரு பங்கை அந்த ஆண்டி முருகனுக்கு மகமையாகக் கொடுத்தார்கள். உலகமெல்லாம் சுற்றினாலும் அவர்கள் சிவமதத்தை விட்டு வேறு மதத்திற்கு மாறியதில்லை. அந்த அளவுக்கு சைவத்திலும், தமிழிலும் பற்றுள்ளவர்கள்.

அவர்கள் வாணியம் செய்ய வந்த இடங்களில் முதலில் எளிமையாக வேலை மட்டும் வைத்து வழிபட்டார்கள். பிறகு வருமானம் சேர்ந்ததும் தண்டாயுதபாணிக்குக் கோவில் எழுப்பினார்கள். இப்படித்தான் 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1810) பர்மாவில் வணிகம் செய்யத் துவங்கியவர்கள், கிட்டதட்ட 40-50 வருடங்களுக்குள் 50ஆலயங்களைக் கட்டி விட்டார்கள். இன்றைக்கு இவற்றில் 24 ஆலயங்கள் நிலைத்துள்ளன.

ஆலய வரலாறு

நகரத்தார்கள் 1810ஆம் ஆண்டில் மலாயாவிலுள்ள மலாக்கா நகருக்கு வருகிறார்கள். அவர்கள் வருவதற்கு முன்பே கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பொய்யாத விநாயகர் கோவில் இருந்தது, மலாயாவில் முதன்முதலில் மலாக்கா மாநிலத்தில் கால்பதித்த நகரத்தார் பொய்யாத விநாயகரை வழிபட்டு தங்கள் வணிகத்தைத் துவங்கினர். அதே நேரத்தில் 1970இல் கேப்டன் பிரான்சிஸ் லைட் துரையுடன் 1,000 இந்தியர்கள் பினாங்குத் தீவில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து நகரத்தார் 1818 ஆம் ஆண்டு அன்றைய பினாங்கு ஜோர்ஜ்டவுன் துறைமுகத்திற்கு வந்தனர். அவர்கள் வருவதற்கு முன்பு 1804ஆம் ஆண்டில் தண்ணீர்மலை அருகிலுள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகில் வேல் ஒன்றை நிறுவி, அதற்குச் சிறிய கோவிலும் கட்டி, அங்குள்ள தென்னிந்தியத் தொழிலாளர்கள் வழிபட்டு வந்தனர். நகரத்தாரும் அந்த வழிபாடுகளில் பங்கு கொண்டனர்.

பிறகு 9.8.1850இல் பினாங்கு வீதியில், 111ஆம் எண் கொண்ட கோவில் வீட்டில் தண்டாயுதபாணியின் தங்க உற்சவ மூர்த்தியை நிறுவி வழிபடத் துவங்கினர். அதன் பிறகு அதே வீதியில் 138ஆம் எண் கொண்ட வீட்டிற்கு மாற்றப்பட்டது. அதுதான் இன்றைய கோவில் வீடு அதன் பின்னர், 1854அம் ஆண்டு பினாங்கு வாட்டர்பால் ரோட்டில் (தண்ணீர்மலை சாலை) 9 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைக் கோவில்கட்ட வாங்கினர். சுற்றிலும் மலைகளும், சோலைகளும் நிறைந்த இயற்கை எழில்மிக்க இடத்தில் இந்த இடம் அமைந்திருந்தது. இங்கே அழகன் முருகனுக்கு அற்புதமான ஒரு கோவில் அமைக்க வேண்டுமென்று நினைத்தனர்.

காரைக்குடி அருகிலுள்ள கோவிலூர் ஆதீனம் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வேதாந்தத் திருமடம். அதன் ஆதீனத் தலைவர் நகரத்தார்களுக்குத் தீட்சை அளிக்கும் குருவாக விளங்கக் கூடியவர். அந்த காலகட்டத்தில் கோவிலூர் ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஞானப் பேரொளி தவத்திரு வீரப்ப சுவாமிகள். பினாங்கு நகரத்தார்கள் சுவாமிகளிடம் மடல் வழியாக வேண்டுகோள் விடுத்து, செட்டிநாட்டு கட்டிடப் பாணியில் அமைந்த வரைபடத்தைக் காரைக்குடியில் சுவாமிகள் ஆலோசனைப்படி கட்டிட வரைகலை நிபுணர்கள் வரைந்தனுப்பினார்கள்.

அந்த வரை படத்தின்படியே இந்த ஆலயத்தை நிர்மாணித்தார்கள். கட்டிடக் கலைஞர்களும், சிற்பிகளும் காரைக்குடியிலிருந்து வந்தார்கள். சொக்கட்டான் காய் ஆட்டத் தளத்தின் வடிவத்தில் ஆலயத்தை அமைத்தார்கள். அவர்கள் அமைத்த கூட்டல் (+) குறி வடிவம், முருகனின் அருள் கூட்டலையும், பக்தர்கள் எண்ணிக்கைக் கூட்டலையும் குறிப்பதைப்போல அமைந்துள்ளது. 12.12.1857 தண்ணீர்மலை தண்டாயுபாணி ஆலயம் குடமுழுக்கு கண்டது.

ஆலய வடிவம்

தண்டாயுதபாணியின் கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையுள்ளே கந்தன் தண்டாயுதமேந்தி தண்ணீர்மலையானாய் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறான்.

தண்ணீர்மலை தண்டாயுதபாணியின் வலத் தொடையின் மேல் அழகான மரகதம் பதித்தாற்போல மச்சம் ஒன்றுள்ளது. அற்புதமான இந்த மச்சம் தண்ணீர்மலையானின் அளவற்ற அருட்சக்தியின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. கனிவான புன்சிரிப்பும் காந்தமென இழுக்கும் கண்களோடும், கருணைக்கடல், பக்தசகாயன் பழனி முருகனாய் காட்சிதரும் தண்ணீர்மலையானைக் காணக் கண்கோடி வேண்டும். கருவறையைச் சுற்றி உட்பிரகாரம். உட்பிரகாரத்தின் பின்புறமிருந்து பார்த்தால் பாலதண்டாயுதபாணி வீற்றிருக்கும் மலைக்கோவிலைப் பார்க்கலாம்.

உட்பிரகாரத்திற்கு அடுத்து வெளிப்பிரகாரம், அதையடுத்து நந்தவனம், பின்புறம் தென்னந்தோப்பு, அர்த்த மண்டபம் என்ற அமைப்பில் அமைந்துள்ளது.

ஆலய மண்டபங்கள் முழுவதும் பர்மாவிலிருந்து தருவிக்கப்பெற்ற தேக்கினால் ஆனவை. மண்டபத்தின் மேல் பகுதியில் தேக்கு மரப்பலகையில் நம் பாரம்பரியமிக்க சித்திர வேலைப்பாடுகளை இயற்கை வண்ணத்தில் வடிவமைத்துள்ளார்கள். அடுத்து கீழ் வரிசையெங்கும் உலகப் புகழ்பெற்ற ரவி வர்மா ஓவியங்கள். இவையெல்லாம் செட்டி நாட்டின் கலை நுணுக்கத்தைப் பறை சாற்றும் பொக்கிஷங்கள்.

முருகனின் சன்னிதிக்கு நேர் எதிரே, தென்னந்தோப்புக்கு வெளியாகும் இடத்தில் இடும்பனுக்கு தனிச்சந்நிதியும் உண்டு. இடும்பன் வேல் வடிவில் வழிபடப்படுகிறார். ஆலய நுழைவாயிலில் இரு மருங்கிலும் திண்ணை வைக்கப்பட்டிருக்கின்றது. முகப்பின் மேல்

ஆறுமுகக் கடவுள் வள்ளி தெய்வானையோடு மயில் மீதமர்ந்த சுதை சிற்பம் அழகாகக் காட்சியளிக்கின்றது. மயில் மீதமர்ந்த சுதைச் சிற்பம் பக்தர் மனங்களைக் கொள்ளைக் கொள்ளக்கூடியது. தண்ணீர்மலையான் திருக்கோவிலின் நுழைவாயிலும், அதன் இருபுறமுள்ள திண்ணைகளும், மேற்கூரையில் தொங்கும் அலங்கார விளக்குகளும், முற்றம், சமையல்கட்டு, உணவுமண்டபம் என்று ஆலயத்தில் பார்க்குமிடமெல்லாம் செட்டி நாட்டின் செல்வச் செழிப்புமிக்க புனிதமான மாடமாளிகையில் இருப்பது போன்ற ஒரு உணர்வைத் தருகின்றன.

கோவில் திருவிழாக்கள்

தண்ணீர்மலை முருகன் கோலாகலன். நாளெல்லாம் அவன் சன்னிதி விழாக் கோலத்திலிருக்கும். தண்டாயுதபாணியின் அருள்வேண்டி அனுதினமும் பக்தர்கூட்டம் அவனை நாடி வருகின்றார்கள். இருப்பினும், தைப்பூசத்தன்று தண்ணீர்மலை மட்டுமல்ல, பினாங்கு நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும். தனவணிகர்கள் தங்கள் வீட்டுத் திருமணம்போல் கந்தனின் பெருவிழாவை விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

தைப்பூசத் திருவிழா

இங்குள்ள மக்கள் தைப்பூசத்தின் முதல்நாளை செட்டிப்பூசம் என்றழைக்கிறார்கள். 1935ம் ஆண்டு வரை ஐந்து நாட்களுக்கு நடைபெற்ற தைப்பூசத் திருவிழா தற்போது மூன்று நாட்களாகக் குறைக்கப்பெற்றிருந்தாலும் சிறப்பாகவே நடைபெறுகிறது.

தைப்பூச விழாவின் முதல் நாள், பினாங்கு ஸ்திரீட்டிலுள்ள கோவில் வீட்டிலிருந்து காலை ஐந்து மணிக்கெல்லாம் பக்தர்கள் புடைசூழ வெள்ளிரதத்தில் தண்ணீர்மலையானின் ஊர்வலம் புறப்படும். நகரத்தாரின் பாரம்பரியமான மயில் தோகைகளால் அலங்கரிக்கப்பட்ட சர்க்கரைக் காவடிகள் முன்செல்ல, மேளதாளங்களோடு கட்டியங்கள் முழங்க, தண்ணீர்மலையான் வெள்ளிரதத்தில் புறப்படும் அழகே அழகு. 2017 ஆம் ஆண்டு முதல் மாரியம்மன் கோவிலிலிருந்து வேலை ஏந்திய தங்கரதம் பாலதண்டாயுதபாணி கோவிலுக்கு ஊர்வலமாகச் செல்கிறது. இதற்கு முந்திய காலங்களில் இந்த வேல் சிறிய மரச் சகடையில் வைத்து அதிகாலையில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. இப்பொழுது தங்கரதம் வந்த பின் இரண்டு ரதங்களும் அரை மணி இடைவெளியில் புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக தண்ணீர்மலை நோக்கி பவனிக்கிறது.

வழிநெடுக, சீனர்களும், இந்தியர்களும் மலைமலையாக குவிக்கப்பெற்ற சிதறு தேங்காய்களை முருகனுக்குக் காணிக்கையாய் உடைப்பதும், அர்ச்சனைகள் செய்வதும், அவர்களின் பத்தியை ஏற்று எம்பெருமான் புன்முறுவல் பொங்க நகர்வலம் வருவதும் காணக்கிடைக்காத அருட்காட்சி.

தண்ணீர்மலையான், மதியம் கொளுத்தும் வெயிலில் டத்தோ கிராமாட் சாலை சிவன் கோவில் வந்தவுடன், அங்கு சிறிது இளைப்பாறியபின் மீண்டும் தண்ணீர்மலை நோக்கி ரதத்துடன் புறப்படுவார். நகரத்தார் காவடிகளும், ரதத்துடன் நடக்கும் பக்தர்களும் வெயிலில் கால் சுட்டு வருந்தாமல் இருக்க பினாங்கு நகராட்சியின் வாகனங்கள் சாலை நடுவே தண்ணீர் ஊற்றிக் கொண்டே போவது வழக்கமான ஒன்று. மனதளவில் தண்ணீர்மலையான் அருளூற்றும், கால்களில் வாகனங்களின் நீரூற்றும் முருகனடியார்களுக்கு இதமளிப்பவை. வழி நெடுக தனியார் மற்றும் தொண்டார்வ நிறுவனங்களின் தண்ணீர் பந்தல்கள் பினாங்கு மக்களின் மனப்பான்மைக்குச் சான்று பகரும் அடையாளங்கள்.

மாலை வேளையில் நகரத்தார் காவடிகள் தண்ணீர்மலை வந்து சேரும். தண்ணீர்மலையான் தன் வீடு வந்து சேர நள்ளிரவாகும். காவடிப்பிள்ளைகள் கட்டியத்தடி தூக்கி, சாமரம் வீச கட்டியங்கள் பாட சூழ்ந்துவரும் பக்தர்கள் கண்களில் நீர் பெருக, தண்ணீர்மலைக் கோவில் சன்னிதியில் எழுந்தருவான் தண்ணீர்மலைத் தண்டாயுதபாணி.

மறுநாள் தைப்பூசம் அன்று அதிகாலையில் சிவன் கோவிலில் புறப்பட்ட பால்குடங்கள் தண்ணீர்மலைக் கோவில் வந்து சேரும். அன்றைய தினம் அலங்காரக் காவடிகள், முடி இறக்குதல், குழந்தைகளுக்குத் தொட்டி கட்டுதல், மகேசுவர பூஜை என்று பலவிதமான நிகழ்வுகள் விமரிசையாக நடைபெறும். இரவு பன்னிரண்டு மணிக்கு கோவில் வரும் நூறு கிலோ எடையுள்ள மிகப்பெரிய அலங்காரக் காவடியோடு தைப்பூச நாள் நிறைவுபெறும்.

மூன்றாம் நாள் காலை, காவடிப் பொங்கலுக்குப் பின் நகரத்தார் காவடி செலுத்தும் நிகழ்ச்சி. தண்ணீர்மலைக் கோவிலிலிருந்து அருகிலுள்ள முனீஸ்வரர் கோவிலுக்குச் சென்று பக்தியுணர்ச்சி மேலிட முருகா! முருகா! என்று ஆடிக்கொண்டு காவடிகளைத் தண்ணீர்மலையான் சன்னிதியில் செலுத்துவதைக் காண்பவர்களுக்கும் மெய் சிலிர்க்கும். கைகள் குவியும், கண்களில் நீர் பெருகும்.

அன்று இரவு தண்ணீர்மலையிலிருந்து தண்டாயுதபாணி இரதத்தில் புறப்பட்டு அடுத்தநாள் காலை கோவில் வீடு வந்து சேர்வார்.

பினாங்குத் தைப்பூசம் உலக அதிசயங்களில் ஒன்று. அற்புதமான இந்தப்ருவிழாவை தம்முடைய வாழ்நாளில் ஒருதடவையாவது உலகிலுள்ள முருக பக்தர்கள் ஒவ்வொருவம் கண்டுகளித்து முருகனின் அருள்பெற வேண்டும்.

தைப்பூச விடுமுறை

சமீப காலமாக அரசாங்கம், தைப்பூச தினத்தைப் பொது விடுமுறையாக அறிவித்துள்ளது. ஆனால் 1879ம் ஆண்டு அன்றைய பிரிட்டீஷ் அரசாங்கம் பினாங்கு மாநிலத்தில் தைப்பூச நாளை அதிகாரப்பூர்வ விடுமுறை நாளாக அறிவித்துள்ளது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தி. 1856ஆம் ஆண்டு முதற்கொண்டு எல்லாக் காலகட்டங்களிலும், பலவித சவால்களையும் தாண்டி பினாங்குத் தண்ணீர்மலைத் தைப்பூசம் மிக சிறப்பாக நடைபெறுவதும் முருகப்பெருமானின் திருவருள் என்றே கூறவேண்டும்.

வெள்ளி இரதம்

1894ஆம் ஆண்டு பினாங்கு நகரத்தார் ஆலயத்திற்கும், சிங்கப்பூர் நகரத்தார் ஆலயத்திற்கும் இரண்டு வெள்ளி இரதங்கள் காரைக்குடியில் செய்யப்பெற்று, ‘ எஸ். எஸ். ரோனா’ என்ற கப்பலில் அனுப்பி வைக்கப்பெற்றன. 25 அடி உயரமான சிங்கப்பூருக்குச் செல்ல வேண்டிய வெள்ளி இரதம் பினாங்கில் இறக்கப்பெற்றது. பினாங்குக்கு வர வேண்டிய 23 அடி இரதம் சிங்கப்பூர் வந்து சேர்ந்தது. இதுவும் முருகன் திருவிளையாடலே என்று மாறிய இரதத்தை பினாங்கு – சிங்கை நகரத்தார்கள் ஏற்றுக்கொண்டார்கள். 1894க்கு முன்பு பினாங்கில் இருந்த மரத்தால் ஆன இரதத்தை மேடான் நகரத்தார் கோவிலுக்கு அனுப்பினார்கள். வெள்ளி இரதத்தின் சக்கரம் தவிர முழுப் பகுதியும் கனமான வெள்ளி தகடுகளால் பூட்டப்பெற்றது. இன்றைய நாளில் இப்படி வேலைப்பாட்டுடன் வெள்ளி இரதம் செய்வது அரிதான ஒன்று. ஒவ்வொரு வருடமும் இதை மெருகிட்டுத் துடைத்துப் பாதுகாப்புடன் நிர்வாகத்தினர் வைத்திருக்கிறார்கள்.

வெள்ளி இரத பவனி தடைபடுவது பினாங்கு நகரத்திற்கும், நாட்டுக்கும் நல்ல சகுனமில்லை என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கை. 1941ஆம் ஆண்டு வருட ஆரம்பத்தில் பினாங்கு டத்தோ கிராமட் சாலை சிவன் கோவிலுக்கு அருகில் வெள்ளி இரதம் வரும் சமயம், வீதியிலுள்ள மின்சாரக் கம்பி மோதி இரதத்தின் மேலுள்ள கலசங்கள் விழுந்து விடுகின்றன. அந்த ஆண்டு உலக மகா யுத்தம் வருகின்றது.

ஜப்பானியர்கள் பினாங்குக்கு வருகிறார்கள். அவர்களின் சர்வாதிகார ஆட்சியால் பினாங்குத் தீவிலுள்ளவர்கள் அல்லலுறுகிறார்கள். அந்த வருடம் நடந்த போரின் விளைவால் பினாங்கு தெருவிலுள்ள கோவில் வீட்டைத் தவிர, மற்ற கட்டிடங்கள் பெரும் சேதமுறுகின்றன. இப்படி இந்த ஊர்வலத்தில் தடை நேரும் காலந்தோறும் பினாங்கு நகரம் சில பல அசம்பாவிதங்களைச் சந்தித்ததை இந்நகரின் வரலாறு கூறும். தண்ணீர்மலையானை பினாங்கிலுள்ள இந்தியர்கள் மட்டுமல்ல, சீனர்களும் தம்மைக் காக்கும் கடவுளாக நம்புகிறார்கள். இலட்சக்கணக்கான சீன அன்பர்கள் தண்ணீர்மலையான் வெள்ளி ரதத்தில் வருவதற்காகக் காத்திருந்து தேங்காய் உடைத்து காணிக்கை செலுத்துவது கண்கூடு. தைப்பூச விழா பினாங்கு மக்களின் வாழ்வியலோடு கலந்துவிட்ட பெருவிழாவாக விளங்குகின்றது.

கொரோனாவின் தாக்கம்

பினாங்கு தைப் பூசம் மற்றும் வெள்ளி ரத நகர் வலத்தில் குறிப்பிடத் தக்க சம்பவம் 2019இல் ஏற்பட்ட கோவிட் 19 எனும் கொள்ளை நோயின் தாக்கம். கோவிட் 19, 2019ஆம் ஆண்டே பல நாடுகளில் பரவத் தொடங்கி இருந்தாலும், மலேசியாவின் முதல் தொற்று 2020 ஆண்டுத் துவக்கத்தில்தான் ஏற்பட்டது. எனவே 2020 ஆண்டு தைப் பூசமும் இரத ஊர்வலமும் பெரிய தடைகள் ஒன்றும் இல்லாமல் நிகழ்ந்தேறியது. 2021ஆம் ஆண்டு தொற்றுநோய் உலகெங்கிலும் பரவத் தொடங்கி மனிதர்களின் அன்றாட வாழ்க்கையையும், நடமாட்டத்தையும் முடக்கிப் போட்டது. அரசு, நடமாட்டக் கட்டுப்பாட்டை அறிவித்திருந்ததால், நூறு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நடைபெறும் வெள்ளி இரத ஊர்வலம் தடைப்பட்டு விடுமோ என்ற அச்சம் நிலவியது. எப்பொழுதும் சொல்லுவார்கள், தண்ணீர்மலையான் தன் திருவிழாக்களை தங்கு தடையின்றித் தானே நடத்திக் கொள்வான் என்று. அதற்கேற்ப, கோவிட் 19 கொள்ளைக் காய்ச்சல் நடமாட்டக் கட்டுப்பாடுகளின் மத்தியில், நாட்டுக்கோட்டை நகரத்தார், புத்ராஜெயா மத்திய அரசிடமிருந்தும் காவல் துறையிடமிருந்தும் சிறப்பு அனுமதி பெற்று தங்கள் வருடாந்திர வெள்ளி ரத ஊர்வலத்தை அதிகாலையில் பொழுது விடிவதற்கு முன்பே திறம்பட நடத்தி முடித்தனர்.

127 வருடப் பழமையும் பெருமையும் வாய்ந்த முருகப்பெருமானின் திரு உருவச் சிலையைத் தாங்கிய வெள்ளி இரதம் பினாங்கு வீதியிலுள்ள கோவில் வீட்டிலிருந்து காலை மூன்று மணி அளவில் புறப்பட்டு, காலை 5.55 மணிக்கு எந்த வித அசம்பாவிதமுமின்றி தண்ணீர்மலைக் கோவிலை வந்துஅடைந்தது. பத்து செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமே பின்தொடர, நடமாட்டக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டு, தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் கொரோனா நுண்கிருமி தொற்றைத் தடுப்பதற்குரிய சுகாதார அமைச்சின் விதி முறைகளையும் பின்பற்றி, விழா சிறப்பாக நடைபெற்றது. பொது மக்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. நூறாண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நடைபெறும் தைப்பூச ஊர்வலத்தின் சங்கிலித் தொடர் தடை படாமல் காப்பாற்றப்பட்டு இத்தனை கட்டுப்பாட்டுடன் இந்த தைப்பூசம் நிகழ்ந்தது அவனருளாலேதான் என்பதில் ஐயமும் உண்டோ?

இதர திருவிழாக்கள்

கந்தர் சஷ்டித் திருநாள்

கந்தர் சஷ்டி விழாவின் ஏழு நாட்களும் பினாங்கு தண்ணீர்மலைக் கோவில், மலேசியாவில் மற்றொரு திருச்செந்தூரைப் போலக் காட்சியளிக்கும். கந்தர் சஷ்டி விழாவின் ஏழு நாள் இரவிலும் தண்ணீர்மலை ஆண்டவன், பாலசுப்பிரமணியனாகவும், சுவாமிநாதனாகவும், வேலனாகவும், வேடனாகவும், விருத்தனாகவும், தெய்வானை மணாளனாகவும், வள்ளி மணாளனாகவும் திருக்காட்சி அளிப்பதைக் காணக் கண்கோடி வேண்டும். விரதமிருக்கும் பக்தர்கள் ஆலயத்திலேயே தங்கியிருந்து முருகனின் அருளை வேண்டுவார்கள். சமீப காலங்களாக, கந்த சஷ்டி நாட்களில் பேராசிரியர் சொ.சொ.மீ.சுந்தரம் போன்ற அறிஞர்களின் சொற்பொழிவும் இடம்பெறுகின்றது.

சித்திரைப் பூசைவிழாவும் சித்திரா பௌர்ணமியும்

தமிழ் ஆண்டுப் பிறப்பான சித்திரை முதல் நாளில் சித்திரைப் பூசை விழா கொண்டாடப் படுகின்றது. இதற்கடுத்து வரும் பௌர்ணமியில் சித்திரை பௌர்ணமி பூசை விழா மகேஸ்வர பூசை – அன்னதானத்தோடு சிறப்பாக நடைபெறுகிறது.

ஆடி அமாவாசை

ஆடி அமாவாசையிலும் சிறப்பு வழிபாடுகளோடு மகேஸ்வர பூசை செய்து அன்னதானம் வழங்கப்படுகிறது.

திருக்கார்த்திகையும் - மாத கார்த்திகையும்

கந்த சஷ்டியின்பொழுது திருச்செந்தூரைப் போல் காட்சியளிக்கும் தண்ணீர்மலைக் கோவில், திருக்கார்த்திகையின் பொழுது திருவண்ணாமலையாய் மாறுகின்றது. கோவில் முழுக்க தீப விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, தீபத்திருவிழாவாக சிறப்புப் பூசை, அன்னதானம், இரவில் சொக்கப்பனை கொளுத்துதல் என பல நிகழ்வுகளுடன் கொண்டாடப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் வரும் சோமவாரங்கள் தோறும் சங்கு நீராட்டும், சண்முக அர்ச்சனையும் நடைபெறும். மாதந்தோறும் வரும் கார்த்திகைகளில் சிறப்பு வழிபாடும் அன்னதானமும் நடைபெறும்.

குதிரை வாகனத்தில் முத்துமாரியம்மன் புறப்பாடு

தைப்பூசத்திற்கு கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்பு, பினாங்கு தெருவிலுள்ள கோவில் வீட்டிலிருந்து அருள்மிகு முத்துமாரியம்மன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி புறப்பாடு செய்வதும் சிறப்பாக நடந்து வருகின்றது. இது திருவிழாவிற்கு கிராமத்து காவல் தெய்வம் வழிவிடும் வகையில் அமைகிறது. 2009 ஆம் ஆண்டு முதல் ஆடிப்பூரத்தன்று அம்மன் குதிரை வாகனத்தில் கோயில் பிரகாரம் வலம் வருகிறாள்.

ஆலயத்தின் சமுதாயம் - ஆன்மிக - தமிழ்ப் பணிகள்

பக்தியை வளர்ப்பதை மட்டும் நோக்கமாக கொள்ளாமல் பல சமுதாயப் பணிகளையும் ஆன்மீக வளர்ச்சி மற்றும் தமிழ் வளர்ச்சிக்கான பல நற்பணிகளையும் ஆலய நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. ஆண்டுதோறும் தைப்பூசத் திருவிழாவின் பொழுது பல பொது இயக்கங்களுக்கு ஆலயத்தின் சார்பாக உதவித்தொகை வழங்கப்படுகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக ஆண்டு தோறும் டிசம்பர் மாதத்தில், சிறப்பான முறையில் அருணகிரிநாதர் விழா ஆலய நிர்வாகத்தினர் ஆதரவோடு இங்குள்ள அருணகிரிநாதர் மன்றத்தினரால் நடத்தப்படுகின்றது.

பூசை

ஆலய பூசைகள் ஆகம முறைப்படி தங்கு தடையின்றி, செம்மையாக நடைபெற்று வருகின்றன. காலையில் காலசந்தி பூசையும், மதியம் உச்சிக்கால பூசையும், மாலையில் சாயரட்சை பூசையும், இரவு அர்த்த சாம பூசையும் நாள் வழிபாடுகளாக நடைபெறுகின்றன. காலை 6.15 மணியளவில் பூசை தொடங்கி மதியம் 12.30 மணியளவில் ஆலயம் திருக்காப்பு இடப்படுகிறது. பின்னர் மாலை 4.15க்குப் பூசைகள் தொடங்கி இரவு 8.45க்கு மீண்டும் திருக்காப்பு இடப்படுகின்றது.

ஆலய நிர்வாகம்

'கோவில் கூரையில் விரிசலா? கூப்பிடு செட்டியாரை 'என்ற ஒரு சொலவடை உண்டு. நாட்டுக்கோட்டை நகரத்தார் கோவில் நிர்வாகத்திற்கென்றே பிறந்தவர்கள். ஆலய சொத்துக்களைப் பராமரிப்பதில் அவர்களுக்கென்று ஒரு தனி பாணியை வகுத்துக்கொண்டு செயல்படுபவர்கள்.

பினாங்கு தண்ணீர்மலை தண்டாயுதபாணி ஆலயத்தையும் 1960ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி நிறுவப்பட்ட பினாங்கு நாட்டுக்கோட்டை செட்டியார்கள் கோயில்களின் அறவாரியத்தின் அறங்காவலர்கள் திறம்பட நிர்வகித்து வருகின்றனர். பினாங்கு நகரத்தார்களுக்கென்று நான்கு கிட்டங்கிகள் இருந்து வருகின்றன. கிட்டங்கிகளின் கடைகள் எல்லாம் அறவாரியத்தில் பதிந்து கொண்டு மொத்தம் 60 பேர் கொண்ட உறுப்பினர்களோடு இந்த அறவாரியம் இயங்குகின்றது. அறவாரிய உறுப்பினர்கள் ஒருவர் தலைவராகவும், மற்றொருவர் செயலாளராகவும் நியமிக்கப்பெற்று முறையே டத்தோ கிராமட் சாலை சிவன் கோவிலையும், தண்ணீர்மலைத் தண்டாயுதபாணி கோவிலையும் பராமரித்து வருகிறார்கள். இவர்கள் கிட்டங்கிகளின் சுற்று முறைப்படி ஆண்டுதோறும் மாறி மாறி மேற்கண்ட இரு கோயில்களையும் பராமரித்து வருகிறார்கள்.

தைப்பூச விழாவிற்கு முன்பாக அறவாரிய உறுப்பினர்கள், தைப்பூச விழாவுக்காகப் பினாங்கு தெருவிலுள்ள 138ஆம் எண் கோவில் வீட்டில் கூடி அவரவர் வருமானத்திற்கு ஏற்பக் கணக்கிட்டு மகமை (அறக்கொடை) எழுதுவார்கள். அந்த மகமைப் பணத்தை பின்னொரு நாளில் கோவில் நடப்புக் காரியக்காரரிடம் (காப்பாளர்) கொடுத்து விடுவார்கள். ஆரம்ப காலம் முதல் கோவிலுக்கென்று பல சொத்துக்கள் உள்ளன. இந்த சொத்துக்களிலிருந்து வரும் வாடகை போன்றவை, வைப்பு நிதி வட்டி வருமானம், மகமை என்ற காணிக்கைத் தொகை போன்றவை மாதாந்திர ஆலய பராமரிப்புச் செலவுகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றன.

பொதுவாகவே, நாட்டுக் கோட்டை செட்டியார் ஆலயங்கள் அரசு மானியங்களையோ, தனியார் உதவிகளையோ நன்கொடைகளாகப் பெறும் வழக்கமில்லை. பொது மக்களிடமிருந்து நிதி வசூல் செய்வதுமில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கோவில் அறவாரியத்தின் முடிவுகள் கூட்டங்களில் ஏகமனதாக எடுக்கப்படுவது அவர்களின் ஒற்றுமையை பறைசாற்றுகின்றது. இந்த ஒற்றுமையும், திட்டமிட்ட வரவுசெலவும், நேர்மையான கணக்கு வழக்குகளும் ஆலய நிர்வாகத்தின் பெருமைக்குக் காரணங்களாக விளங்குகின்றன.

இதுவரையில் நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு விழாக்கள்

முதலாவது திருக்குட நன்னீராட்டு விழா 12-12-1857ஆம் ஆண்டில் நடைபெற்றது. பிறகு 71 ஆண்டு கால இடைவெளியில் நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு விழாக்களின் ஆவணங்கள் அகப்படவில்லை. அதன்பின்னர் நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு விழாக்கள் பின்வரும் திகதிகளில் நடந்தேறின.

02-09-1928	(விப வருடம் ஆவணி மாதம் 18ஆம் திகதி
08-02-1935	(பவ வருடம் தை மாதம் 26ஆம் திகதி
28-01-1955	(ஜய வருடம் தை மாதம் 15ஆம் திகதி
13-07-1981	(துன்மதி வருடம் ஆனி மாதம் 29ஆம் திகதி
27-11-1995	(யுவ வருடம் கார்த்திகை மாதம் 11ஆம் திகதி
13-11-2011	(கர வருடம் ஐப்பசி மாதம் 27ஆம் திகதி

தற்பொழுது 14-11-2024இல், (குரோதி வருடம் ஜப்பசி மாதம் 28ஆம் திகதி அடுத்த திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற ஏற்பாடுகள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. சிதலமடைந்த சிற்பங்களைச் செப்பனிட்டு, கோபுரம், தூண்கள் ஆகியவற்றிக்கு புது வண்ணம் தீட்டி, ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

பக்த மெய்யன்பர்கள் யாவரும் இத்திருக்குட நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொண்டு, தண்ணீர்மலையான் தண்ணருள் பெறுவார்களாக!!

தண்ணீர்மலையான் மலரடி போற்றி! போற்றி!

உ

நகரக் கோயில்கள்
(நகரக் கோயில்களும், நகரத்தார் வாழ்க்கை முறையும்)

தமிழகத்தில் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் எழுபத்து ஆறு ஊர்களை உள்ளடக்கிய பகுதி செட்டி நாடு என்று அழைக்கப்படுகிறது. இந்த ஊர்கள் நாட்டுக்கோட்டை செட்டியார் எனப்படும் நகரத்தார்கள் வாழ்ந்துவரும் இடமாகும். நகரத்தார் சமூகம் குறித்த வரலாறு கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இவர்கள் முதலில் நாக நாட்டில் இருந்ததாகவும், பிறகு காவிரிப் பூம்பட்டினத்திற்கு குடி பெயர்ந்ததாகவும் கூறப்படுகிறது. சைவ பக்தர்களாகிய இவர்கள் மரகத விநாயகரை வணங்கி வந்தனர். பின்னர் பூவந்தி சோழனுக்கும் நகரத்தாருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பாலும், பாண்டிய மன்னன் சில நல்ல குடிமக்களைத் தன் நாட்டுக்கு தந்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்கியும், நகரத்தார்கள் பாண்டிய நாட்டுக்கு சென்றனர். காவிரிப் பூம்பட்டினத்தில் கிழக்குத்தெரு, மேற்குத் தெரு மற்றும் தெற்குத் தெருவைச் சேர்ந்த இளைஞர்கள் மூன்று வெவ்வேறு வேளாள குலப் பெண்களை மணந்து பாண்டி நாட்டிற்கு குடி பெயர்ந்தனர். கோவில் சார்ந்த குடிகள், குடிகளைத் தழுவிய கோவில்கள் என தமிழ் சமுதாய மரபில் வந்த சமூகமாதலால், பாண்டிய மன்னனிடம் தங்களுக்கு தனித்தனி ஊர்களும், தனித்தனி கோவில்களும் வேண்டுமென கேட்டுப் பெற்றனர். பாண்டிய மன்னன் இந்த மூன்று குலவழி வந்த மூவருக்கும் பிரான்மலைக் கோயிலையும், அரியூர் நகரம், அவ்வூர் கோயிலையும், இளையாற்றங்குடி நகரத்தையும், அவ்வூர் கைலாச நாதர் கோயிலையும், கொடுத்தான். இந்த மூன்று குலத்திலிருந்து, முதலில் ஏழு கோவில்களாக இருந்தவர்கள் பிறகு ஒன்பது கோவில்களாக பிரிந்து ஒன்பது கோவில்களைப் பெற்றனர். நகரத்தார் அனைவரும் இன்று வரை இந்த ஒன்பது கோவில்களைச் சேர்ந்தவர்களே.

அந்த ஒன்பது கோயில்களாவன :

1. இளையாற்றங்குடி கோவில்
2. மாற்றூர் கோவில்
3. இலுப்பைக்குடி கோவில்
4. பிள்ளையார்பட்டி கோவில்
5. வைரவன் கோவில்
6. நேமம் கோவில்
7. சூரக்குடி கோவில்
8. இரணியூர் கோவில்
9. வேலங்குடிக் கோவில்


நகரக் கோவில்கள் ஆதியில் மரத்தடியில் மண்ணால் கட்டப்பட்ட கோவில்களாக இருந்தன. நகரத்தார் படிப்படியாக அவற்றைக் கற்கோவில்களாக மாற்றினர். இதற்காக பர்மாவில் தங்கள் சுவாமி பெயரில் கொடுக்கல் வாங்கல் செய்து, அதில் ஈட்டிய பொருளைத் திருப்பணிக்காக செலவிட்டனர். ஆலயம் இறைவன் திருமேனி என்று உணர்ந்தவர்களாதலால், நகரத்தார் திருப்பணிக்கு முதலிடம் கொடுத்தனர். இப்பொழுது அந்த ஒன்பது கோவில்களைப் பற்றிச் சிறிது சிந்திக்கலாம்.


இளையாற்றங்குடி கோவில் :

நகரத்தார்களின் முதல் கோயில் இது. இக்கோயில் பாண்டிய மன்னனால் கி.பி. 707இல் நகரத்தார்க்கு வழங்கப் பெற்றது. காரைக்குடியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் கீழச்சிவல்பட்டி

வழியாக ஆவினிப்பட்டி செல்லும் சாலையில் உள்ளது. அசுரர்களுக்குப் பயந்து தேவர்கள் அனைவரும் இந்தத் தலத்தில்வந்து தங்கினர். இங்கு மன நிம்மதி கிடைக்காததால், மணல் லிங்கம் அமைத்து வழிபட்டனர். தேவர்களின் இளைப்பை ஆற்றியதால் இளைப்பாற்றுக் குடி என்று பெயர் கொண்டு பின்னாளில் இளையாத்தங்குடி என பெயர் பெற்றதாக தல புராணங்கள் கூறுகின்றன. இக்கோயில் நகரத்தார் ஏழு உட்பிரிவுகளாக உள்ளனர்.அவை முறையே ஒக்கூருடையார், பட்டினசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசக்குடியார், கிங்கிணிக் கூருடையார், பேரசெந்தூருடையார், சிறு சேத்தூருடையார் ஆகியனவாகும். இந்த ஏழு உட்பிரிவினரும் சமூக உறவுமுறைகளில் தனித்தனி கோயில் போல நடந்து கொள்வர்.

இளையாற்றங்குடி கோவில்





ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீ நித்யகல்யாணி
இளையாற்றக்குடி

இக்கோயிலில் அருள்பாலிக்கும்


இறைவன் : அருள்மிகு கைலாச நாதர்

இறைவி : அருள்மிகு நித்திய கல்யாணி

மாற்றூர் கோவில் :

கி.பி. 712இல் பாண்டிய மன்னனால் நகரத்தார்களுக்கு வழங்கப்பட்ட கோவில் இது. காரைக்குடியில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கோயிலைச் சார்ந்த நகரத்தார்கள் உறையூருடையார், அரும்பாக்கூருடையார், மணலூருடையார், மண்ணூருடையார், கண்ணூருடையார், கருப்பூருடையார், குளத்தூருடையார் என்ற ஏழு பிரிவுகளாக உள்ளனர். இளையாத்தங்குடி நகரத்தார்களை போன்றே இவர்களும் சமூக உறவுமுறைகளில் தனித்தனி கோயில் போல நடந்து கொள்வர்.





ஸ்ரீ ஐநூற்றீஸ்வரர் மாத்தூர் ஸ்ரீ பெரியநாயகி

இக்கோயிலில் அருள்பாலிக்கும்
இறைவன் : அருள்மிகு ஐநூற்றீஸ்வரர்
இறைவி : அருள்மிகு பெரியநாயகி

இலுப்பைக்குடி கோவில் :

கி.பி. 714இல் பாண்டிய மன்னனால் நகரத்தார்களுக்கு வழங்கப்பட்ட கோவில் இது. காரைக்குடியில் இருந்து கிழக்கே மாத்தூர் செல்லும் சாலையில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இலுப்பை மரங்கள் இப்பகுதியில் நிறைந்திருந்தமையால் இவ்வூர் இலுப்பைக்குடி என பெயர் பெற்றது.







ஸ்ரீ சுயம் பிரகாசேஸ்வரர் ஸ்ரீ சௌந்தரநாயகி
இலுப்பக்குடி

இக்கோவிலில் அருள்பாலிக்கும்

இறைவன் : அருள்மிகு தான்தோன்றி ஈசர்

இறைவி : அருள்மிகு சௌந்தர நாயகி

பிள்ளையார்பட்டி கோவில் :

காரைக்குடியிலிருந்து குன்றக்குடி வழியாக 14 கி.மீ. தொலைவில் உள்ள குடைவரைக் கோவில் பிள்ளையார்பட்டி நந்திராசனால் பிரதிட்டை செய்யப்பெற்றது. இக்கோவிலை 13ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனிடமிருந்து பெற்று இளையாற்றங்குடியிலிருந்து பிரிந்து வந்த, திருவேட்பூருடையார் என்ற சகோதரர்களில் இளைய சகோதரர்கள் இக்கோயிலை தங்களுக்குரிய தனிக் கோவிலாகக் கொண்டனர்.


சிவன் கோவிலாக இருந்தாலும், மூலவராக கற்பக விநாயகர் என்ற திருநாமம் தாங்கிய விநாயகர் அருள்பாலிக்கிறார். கருவறையில் இரண்டு கரங்களில் ஒன்றில் லிங்கத்தையும், மற்றொரு கரத்தால் இடுப்புக் கச்சையையும் பிடித்தபடி இருக்கிறார். துதிக்கை வலது பக்கம் சுழன்று உள்ளது. இது ஒரு குடவரைக் கோயில். விநாயகர் சிலை அந்த குகைப் பாறையிலேயே செதுக்கப் பட்டிருக்கிறது. ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி விழா இங்கு வெகு விமரிசையாக நடைபெறும்.



பார் புகழும் கற்பக விநாயகர் இத் திருக்கோவிலில், இரண்டு திருக்கரங்கள் கொண்டு வலம்புரி விநாயகராக வடக்கு நோக்கி அமர்ந்து அருள் பாலிக்கிறார். மேலும் இவர் தனது வலக் கையில் சிவலிங்கத்தை ஏந்தி பூசை செய்யும் அமைப்புடன் இருப்பது கூடுதல் சிறப்பு அம்சம்.

இக்கோவில் நகரத்தார் இளையாற்றங்குடியிலிருந்து பிரிந்த திருவேட்பூருடையார் என்ற பிரிவைச் சார்ந்தவர்கள். ஆதலால் இன்றும் இக்கோவிலைச் சார்ந்த நகரத்தார் முதலில் இங்கு திருமணத்திற்குப் பாக்கு வைத்து, பின் இளையாற்றங்குடியிலும் பாக்கு வைத்து கோவில் மாலை பெற்றுக் கொள்கிறார்கள். இவர்களின் மூத்த வழியினரான இரணிக்கோயிலாரை சகோதர உறவுடையவர்களாக கருதுவதால் அவர்களோடு திருமண உறவு கொள்வதில்லை. அந்தமுறை தற்பொழுது மாற்றப்பட்டுள்ளது. எனவே இருகோயிலாரும் அவர்களுக்குள் திருமண உறவு வைத்துக் கொள்ளலாம்.





ஸ்ரீ மருதீசர் ஸ்ரீ வாடாமலர்மங்கை
பிள்ளையார்பட்டி

இக்கோவிலில் அருள்பாலிக்கும்

இறைவன் : அருள்மிகு திருவீசர்

இறைவி : அருள்மிகு சிகவாமி மற்றும்
அருள்மிகு வாடாமலர் மங்கை உடனுறை மருதீசர்

வைரவன் கோவில் :

வளவேந்திர ராசனால் பிரதிட்டை செய்யப்பெற்ற இக்கோயில், காரைக்குடியில் இருந்து குன்றக்குடி வழியாக 15 கி.மீ. தொலைவில் வைரவன் பட்டியில் உள்ளது. இக்கோயிலை கி.பி. 712இல் பாண்டிய மன்னரிடமிருந்து நகரத்தார்கள் பெற்றனர். இக்கோயிலில் வைரவர் வழிபாடு சிறப்பு பெறுவதால் இக்கோயில் வைரவன் கோயில் எனவும் தீர்த்தம் வைரவ தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலை சார்ந்த நகரத்தார்கள் சிறுகுளத்தூருடையார்,

கழனிவாசலுடையார், மருதேந்திரபுரமுடையார் என மூன்று பிரிவுகளை சார்ந்தவர்களாவர். இவர்கள் பிரிவு மாற்றித் திருமணம் செய்யும் வழக்கமில்லை. இவற்றுள் சிறு குளத்தூருடையார் என்னும் பிரிவு பெரிய வகுப்பு, தெய்யனார் வகுப்பு, பிள்ளையார் வகுப்பு என மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.








ஸ்ரீ வளரொளிநாதர் ஸ்ரீ வடிவுடையம்மை
வைரவன்கோவில்

இக்கோவிலில் அருள்பாலிக்கும்
இறைவன் : அருள்மிகு வளரொளி நாதர்
இறைவி : அருள்மிகு வடிவுடையம்மை

நேமம் கோவில் :

நேமராசனால் பிரதிட்சை செய்யப் பெற்ற இக்கோயில், காரைக்குடியில் இருந்து 12 கி.மீ. தொலைவில் குன்றக்குடி, கீழசீவல்பட்டி சாலையில் உள்ளது. கி.பி. 714இல் சௌந்தர பாண்டியனால் இக்கோயில் நகரத்தாருக்கு வழங்கப்பெற்றது. செட்டிநாட்டுப் பகுதியில் கிடைத்தற்கரிய வெள்ளைக் கற்களைத் தருவித்து இக்கோவில் கட்டப்பட்டுள்ளது.

நியமம் என்ற பெயரே நேமம் என்று மருவியது. நியமம் என்றால் தீது அகற்றுதல், ஒழுக்கம் பேணுதல் என்ற பொருளும், வணிகர் குழு என்ற பொருளும் உண்டு. வணிகர் குழுவுக்கு அரசால் அளிக்கப்பட்டதால் நியமங்கோவில் எனப் பெயர் பெற்றது. இந்த ஊருக்கு நந்திபுரம், மதுநதிபுரம், ஜெயங்கொண்ட சோழபுரம் என்ற பெயர்களும் உண்டு.







ஸ்ரீ ஜெயங்கொண்ட சோளீசர் ஸ்ரீ சௌந்தரநாயகி
நேமங்கோவில்

இக்கோவிலில் அருள்பாலிக்கும்

இறைவன் : அருள்மிகு செயங்கொண்ட சோழீசர்

இறைவி : அருள்மிகு சௌந்திர நாயகி

சூரக்குடி கோவில் :

கி.பி. 718இல் நகரத்தாருக்கு வழங்கப்பெற்ற இக்கோயில், காரைக்குடியில் கழனிவாசல் வழியாக கானாடுகாத்தான் சாலையில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. சூரை மரங்கள் நிறைந்த பகுதியாதலால் இக்கோயில் இப்பெயர்பெற்றது. பழமை வாய்ந்த இந்த ஆலயம், நான்கு நிலை கொண்ட சிறிய கோபுரத்துடன் கம்பீரமாக நிற்கிறது. மதுரை மீனாட்சிக்கு அமைந்தது போல, இங்கு அம்மன் நான்கு திருக்கரங்களுடனும், மூன்று கண்களுடனும் காட்சி தந்து அருள் பாலிக்கிறாள்.







ஸ்ரீ தேசிகநாதர் சூரக்குடி ஸ்ரீ ஆவுடையநாயகி

இக்கோவிலில் அருள்பாலிக்கும்

இறைவன் : அருள்மிகு தேசிக நாதர்

இறைவி : அருள்மிகு ஆவுடை நாயகி

இரணியூர் கோவில் :

கி.பி 714இல் காருண்ய பாண்டிய அரசனால் பிரதிட்டை செய்யப்பெற்ற இக்கோவில், காரைக்குடியிலிருந்து பிள்ளையார்பட்டி வைரவன்பட்டி வழியாக விராமதி செல்லும் சாலையின் இடதுபுறம் பிரியும் கிளைச் சாலையில் 24 கி.மீ. தொலைவில் உள்ளது. இரணியனைக் கொன்ற பாவம் நீங்க நரசிம்ம பெருமாள் வழிபட்ட தலம் இது எனக் கூறுவர். இக்கோவிலின் சிற்ப வேலைப்பாடுகள் இக்கோவிலை செட்டிநாட்டின் சிற்பக் களஞ்சியம் என அழைக்கும் அளவிற்கு மனதைக் கவரும் வகையில் அமைந்திருக்கும். பெரிய ஐந்து நிலைகள் கொண்ட கோபுரம். கோபுரத்தையும், ஈசனையும் ஒரு சேரக் கண்டு வணங்கலாம்.அப்படி ஒரு விசேஷ அமைப்பு. சிற்ப வேலைப்பாடுகளை விவரிக்க வார்த்தைகள் இல்லை. அவ்வளவு அழகு. கோயில் மேல் உத்திரத்தில் மூலிகைச் சாறு கொண்டு தீட்டப்பட்ட ஓவியங்கள்.

இக்கோவில் நகரத்தார் இளையாற்றங்குடியிலிருந்து பிரிந்த திருவேட்பூருடையார் என்ற பிரிவைச் சார்ந்தவர்கள். இன்றும் இக்கோவிலைச் சார்ந்த நகரத்தார் முதலில் இங்கு திருமணத்திற்குப் பாக்கு வைத்து, பின் இளையாற்றங்குடியிலும் பாக்கு வைத்து கோவில் மாலை பெற்றுக் கொள்கிறார்கள். இவர்களின் இளைய வழியினரான பிள்ளையார்பட்டி கோயிலாரை சகோதர உறவுடையவர்களாகக் கருதுவதால் அவர்களோடு திருமண உறவுகள் வைத்துக் கொள்வதில்லை.







ஸ்ரீ ஆட்கொண்டநாதர் ஸ்ரீ சிவபுரந்தேவி
இரணிக்கோவில்

இக்கோவிலில் அருள்பாலிக்கும்


இறைவன் : அருள்மிகு ஆட்கொண்ட நாதர்

இறைவி : அருள்மிகு சிவபுரந்திரதேவி

வேலங்குடி கோவில் :

கி.பி. 718இல் பாண்டிய மன்னனால் இக்கோவில் நகரத்தார்களுக்கு கொடுக்கப்பட்டது. நகரத்தார் கோவில்களில் புள்ளிகள் மிகக் குறைவாய் உள்ள கோவில் இது. காரைக்குடியிலிருந்து பள்ளத்தூர் செல்லும் வழியில் 9 கி.மீ. தொலைவில் வேலங்குடி உள்ளது. வேலமரங்கள் மிகுதியாக இருந்ததால் இவ்வூர் இப்பெயர் பெற்றது. இக்கோயில் சார்ந்த நகரத்தார் கருங்குளம், காரைக்குடி, தேவகோட்டை, பட்டமங்கலம் ஆகிய ஊர்களில் வசிக்கின்றனர்.





ஸ்ரீ கண்டீசுவரர் வேலங்குடி ஸ்ரீ காமாட்சி

இக்கோவிலில் அருள்பாலிக்கும்

இறைவன் : அருள்மிகு கண்டீசுவரர்

இறைவி : அருள்மிகு காமாட்சியம்மை

நகரத்தார் பாரம்பரியம் :

ஒரே கோவிலை சேர்ந்த நகரத்தார் அனைவரும் உடன் பிறப்புகளாக, சகோதரர்களாக கருதப்படுவர். எனவே ஒரே கோவிலுக்குள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். எந்தெந்த கோவில் பிரிவுகளுக்கு விதி விலக்கு என்பதை அந்தந்த கோவில் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விஞ்ஞானம் வளர்ந்த காலத்தில், மருத்துவ ரீதிப்படி, உறவு முறைகளில் திருமணம் செய்வது ஏற்புடையதல்ல எனக் கூறுகிறார்கள். இதை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நகரத்தார் உணர்ந்து, அதற்கு வழிமுறையாக கோவில்களைப் பிரித்து, எத்தனை தலைமுறைகள் ஆனாலும், பங்காளிகள் என்றால் சகோதர உறவு முறை என்று வரையறுத்து வாழ்ந்திருக்கிறார்கள். என்ன ஒரு விவேகம்!

கோவில் சார்ந்த குடிகள், குடிகளைத் தழுவிய கோவில்கள் என்ற மரபில் வந்த நகரத்தார்கள், எதைச் செய்தாலும் அதை இறைவனை முன் நிறுத்தியே செய்வார்கள். இதை அவர்கள் திருமணத்திற்கு அழைக்கும் முறையில் தெளிவாகக் காணலாம்.

திருமண அழைப்பிதழில் தத்தம் கோவில் இறைவி, இறைவன் பெயரைக் குறிப்பிட்டு பத்திரிக்கையை துவங்குவார்கள். இறைவி, இறைவன் பெயரை வைத்து அவர்கள் எந்த கோவிலைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் கண்டு கொள்ளலாம்.

அதே போல இசை பிடிமானத்தில் தங்கள் கோவிலை வைத்து தங்களை அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.

இசை பிடிமானம் : திருமண வீடுகளில் எழுதப் பெறும் திருமண ஒப்பந்தத்திற்கு இசை பிடிமானம் என்பது பெயர். இவ்வொப்பந்தம் மணமகனின் தந்தை, மணமகளின் தந்தை ஆகிய இருவருக்குமிடையே அமைவதால் இருவரும் கையெழுத்திடுகின்றனர். "இது திருமணத்திற்கு மணமக்களின் தந்தையர் இசைந்து உடன்பட்டதற்கு ஆதாரமாக, பிடிமானமாக அமைவதால் இசை பிடிமானம் எனப்பட்டது". இசைவுக்குரிய பிடிமானம் ஆதலின் இசை பிடிமானம் என்பர். (இசைப் பிடிமானம் டாக்டர். சு.ப. திண்ணப்பன்)

"ஸ்ரீ..... மீ.... உ. கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான் அருணாச்சலஞ் செட்டி ராமநாதரோ, கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையான கண்ணப்பசெட்டி நாராயணரோ இவர் மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளியம்மையை பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு" என்று எழுதுவர். இதிலிருந்து எந்த கோவில் மாப்பிள்ளைக்கு, எந்த கோவில் பெண்ணை மணம் முடிக்கிறார்கள் என்பதை அறியலாம். இந்த நகரத்தார்களை ஏனைய செட்டியார்களில் இருந்து இனம் பிரித்துக் காட்டுவது அவர்கள் சார்ந்துள்ள கோயிற் பிரிவுகளேயாகும்.

இளையாத்தங்குடி கோவில்காரர்கள் - திருமண அழைப்பை அருள்மிகு ஸ்ரீ நித்திய கல்யாணி அம்பாள் உடனுறையும் கைலாசநாதர் சுவாமி திருவருளால் என்று துவங்குவார்கள்.
இசை பிடிமானம் - கல்வாசல் இளையாற்றங்குடி குலசேகலபுரம் எனத் துவங்கி பிறகு அவரவர் பிரிவுகளான ஒக்கூர், பெருமருதூர் போன்றவற்றைக் குறிப்பிடுவார்கள்.

மாத்தூர் கோவில்காரர்கள் - திருமண அழைப்பை அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் சமேத ஐநூற்றீசுவரர் திருவருளால் என்று துவங்குவார்கள்.
இசை பிடிமானம் - கேரளசிங்க வளநாட்டுப் பிரம்பூர் நாட்டு மாத்தூரான வீரபாண்டியபுரத்தில் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.

இலுப்பைக்குடி கோவில்காரர்கள் - திருமண அழைப்பின் துவக்கம் – அருள்மிகு சௌந்தரநாயகி அம்பாள் உடனுறையும் தாந்தோன்றி ஈசர் திருவருளால் என்று துவங்கும்.
இசை பிடிமானம் - கேரள சிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகலிடம் கொடுத்த பட்டினத்தில் சூடாமணிபுரமுடையார் என்று அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.

பிள்ளையார்பட்டி கோவில்காரர்கள் - திருமண அழைப்பின் துவக்கம் – ஸ்ரீ கற்பக விநாயகர் திருவருளாலும், அருள்மிகு வாடாமலர்மங்கை உடனாய மருதீசர் திருவருளாலும் என்று துவங்கும்.
இசை பிடிமானம் - கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில், இரணியூர் மரதங்குடியான இராச நாராயணபுரத்தில், பிள்ளையார்பட்டியான திருவேட்புடையார் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொள்கிறார்கள்.

வைரவன் கோவில்காரர்கள் - திருமண அழைப்பு அருள்மிகு வடிவுடையம்மை உடனாய வளரொளிநாதர் திருவருளால் எனத் துவங்கும்.
இசை பிடிமானம் - கேரள சிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் என்று தொடங்கி தம் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு எழுதுவார்கள்.

நேமம் கோவில்காரர்கள் - திருமண அழைப்பிதழ் அருள்மிகு சௌந்தரநாயகி அம்பாள் உடனுறை செயங்கொண்ட சோழீசர் திருவருளால் எனத் துவங்கும்.
இசை பிடிமானம் - கேரள சிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனாறு பாயும் இளநலமுடையார் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.

சூரக்குடி கோவில்காரர்கள் - திருமண அழைப்பு அருள்மிகு ஆவுடை நாயகி அம்பாள் உடனுறையும் தேசிகநாதர் சுவாமி திருவருளால் எனத்துவங்கும்.
இசை பிடிமானம் - கேரள சிங்க வளநாட்டில் சூரக்குடியான தேசிக நாராயணபுரத்தில் புகழ்வேண்டிய பாக்கமுடையார் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.


இரணியூர் கோவில்காரர்கள் - திருமண அழைப்பு அருள்மிகு சிவபுரந்திரதேவி அம்பாள் உடனுறையும் ஆட்கொண்டநாதர் திருவருளால் எனத்துவங்கும்.
இசை பிடிமானம் - கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராச நாராயணபுரத்தில் இரணியூர் திருவேட்பூருடையார் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.

வேலங்குடி கோவில்காரர்கள் - திருமண அழைப்பு அருள்மிகு காமாட்சி அம்மன் உடனுறையும் கண்டீசுவரர் சுவாமி திருவருளால் எனத்துவங்கும்.
இசை பிடிமானம் - கேரள சிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில் கழனி நல்லூருடையார் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொள்வார்கள்.

“சைவமும் தமிழும் – தமது இரு கண்கள்” என போற்றிவாழும் நகரத்தார் சமூகத்தினர் எங்கிருந்தாலும் இறைப்பணியை மறப்பதில்லை.

எங்கெங்கிருந்தாலும் எவ்விடத்திற்குச் சென்றாலும் துங்க மயிலும் வேலும் அவர்கள் முன் தோன்றி அவர்களை வழி நடத்தும்.

வேலும் மயிலும் துணை!



சைவசித்தாந்த நோக்கில் கந்தர் கலிவெண்பா

சித்தாந்த செல்வர் டத்தோ டாக்டர் வ. கதிரேசன்
தலைவர், மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்,
கோலாலம்பூர், மலேசியா

முன்னுரை :

கந்தர் கலிவெண்பாவின் ஆசிரியர் குமரகுருபர அடிகள். இவர் தென்பாண்டி நாட்டின் தாமிரபரணி நதிக்கரையில் திருவைகுண்டத்தின் ஒரு பகுதியாக தென் கைலாயத்தில் வேளாளர் குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமி அம்மையாருக்கும் ஆண்மகவாகத் தோன்றினார். இவர் தோன்றிய ஆண்டு கிபி 1625. தந்தையார் ஒரு சிறந்த முருக பக்தர். அவர் ஐந்தாம் ஆண்டு வரை ஊமையாய் விளங்கினார். ஆதலால் கவிராயரும் அவர்தம் மனைவியாரும் குழந்தையுடன் திருச்செந்தூருக்கு சென்றனர். செந்தூர் செந்தில் ஆண்டவரை வேண்டி குழந்தைக்கு பேசும் ஆற்றலைக் கொடுக்கும்படி பிரார்த்தித்தனர். முருகப்பெருமானின் அருள் கிட்டியது. பேசும் ஆற்றல் மட்டும் இன்றி, புலமையும், பாடல் பாடும் ஆற்றலும் வாய்த்தது. அப்போது முருகப் பெருமான் தம் தோளினின்று ஒரு பூவை வீழ்த்தியருளினார். வீழ்த்திய பூவையே முதல் சொல்லாக கொண்டு பூமேவு என்று தொடங்கி இவர் பாடிய முதல் நூல் கந்தர் கலிவெண்பா. இவர் இயற்றிய மொத்த நூல்கள் 14.

1. கந்தர் கலிவெண்பா
2. (பிள்ளைத்தமிழ் 2) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
3. முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
4. (கலம்பங்கள் 2) மதுரைக் கலம்பகம்
5. காசிக் கலம்பகம்
6. நீதிநெறி விளக்கம்
7. (மும்மணிக்கோவை 2) சிதம்பரம் மும்மணிக்கோவை
8. பண்டார மும்மணிக்கோவை
9. (இரட்டை மணிமாலை 2) மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
10. தில்லை சிவகாமியம்மை இரட்டை மணிமாலை
11. மதுரை மீனாட்சியம்மை குறம்
12. சிதம்பரச் செய்யுட் கோவை
13. சகலகலாவல்லி மாலை
14. திருவாரூர் நான்மணிமாலை

சைவசித்தாந்தம் :

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன். சித்தாந்தம் என்ற சொல் சிந்தித்து ஆராய்ந்து கண்டறிந்த முடிவான உண்மை என பொருள் படும். அந்தம் – முடிவு – சைவர்களாகிய நமக்கு தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் இரண்டு கண்களைப் போன்றது. தோத்திர நூல்கள் இறைவனின் புகழைப் போற்றிப் பாடும் நூல்கள். சைவசித்தாந்த நூல்கள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை விளக்கிக் கூறும் தத்துவ நூல்களாகும். பதி – இறைவன், பசு – ஆன்மா, பாசம் – ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை குறிக்கும். பதியாகிய இறைவன் யார்? எத்தன்மையன், ஆன்மாவாகிய நான் யார் ? இந்த ஆன்மாவை பற்றி இருக்கும்

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் எத்தகையது? இந்த மும்மலங்களின் பிடியிலிருந்து இந்த ஆன்மா விடுபட்டு எவ்வாறு இறைவனின் திருவடியை அடைந்து முக்தி என்ற பேரின்ப நிலையைப் பெற முடியும் என்ற கேள்விகளுக்கு விடையளித்து, விளக்கிக் கூறும் நூல்களே 14 சைவ சித்தாந்த சாத்திர நூல்களாகும்.

கந்தர் கலிவெண்பா :

முருகப் பெருமான் மீது கலிவெண்பாவால் பாடப் பெற்ற நூல் கந்தர் கலிவெண்பாவாகும். வெண்பா ஐந்து வகைப்படும். குறள் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சிந்தியல் வெண்பா எனப்படும். கந்தர் கலிவெண்பா நேரிசைக் கலிவெண்பாவில் பாடப்பெற்றுள்ளது. இந்த நூல் 122 கண்ணிகளை (244 வரிகளை) உடையது.

சிவனே முருகன் :

ஒன்று முதல் 36 வரிகள் வரை சிவனே முருகன் என்று விளக்கி கூறுகின்றது. இருவருக்கும் வேற்றுமை இல்லாததால் இவ்வாறு கூறப்பட்டது. கந்தர் கலிவெண்பாவில் மொத்தம் 122 கண்ணிகள் அல்லது 244 அடிகள் உள்ளது.

முதல் ஏழு கண்ணிகள் அல்லது 14 வரிகள் இறைவனது தன்னியல்பு அல்லது சொரூப இலக்கணத்தை பற்றி கூறுவது. அடுத்த 8 முதல் 17 கண்ணிகள் வரை இறைவனது பொது இயல்பு அல்லது தடத்த இலக்கணம் கூறப்பட்டது. 18 முதல் 33 வரை உள்ள கண்ணிகள் இறைவன் உயிர்கட்கு வீடுபேறு அருளுவதை கூறுகின்றது.

சைவசித்தாந்தக் கோட்பாட்டின்படி பதியாகிய சிவனே உயிர்களுக்கு அருளும் பொருட்டுப் பலவித வடிவங்களை எடுக்கின்றார். அவன் எடுக்கும் உருவம் அருள் வடிவம், அது நம் உடம்பு போல் மாயையினால் ஆகிய உருவம் அல்ல.

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்'
– சிவஞானசித்தியார் சுபக்கம் செ 115

இக்கருத்தை குமருகுருபரர்

".... கண் மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானமுடன் மால்விடைமேல் –
மின்னிடத்துப் பூத்த பவளப் பொருப்பொன்று
வெள்ளி வெற்பில் வாய்த்தனைய தெய்வவடிவாகி"
– (கந்தர் கலிவெண்பா வரி 59 – 62)

என்று கூறுகின்றார்.

கந்தபுராணம் மகேந்திர படலத்தில் கச்சியப்பர்

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினாலளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுகவுருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்தருளினாளே"
என்று கூறுகின்றார்.

பதி இயல்புகள் - சொரூப இலக்கணம்

இறைவன் எதிலும் தொடர்பு இன்றி தன்னளவில் இருப்பது சொரூப இலக்கணம் என்னும் சிறப்பு இயல்பு (காரண வடிவு). பிற பொருள்களாடு தொடர்பு கொண்டு நிற்கும் நிலை தடத்த இலக்கணம் என்னும் பொது இயல்பு (காரிய வடிவு).

"குறியும் குணமும் ஒரு கோலமும் அற்று எங்கும்
செறியும் பரமசிவமாய்" (கந்தர் கலிவெண்பா வரி , 8)

என்று கூறுகின்றார் குமரகுருபரர். குறி – பெயர், கோலம் – வடிவம்.
இறைவனுக்கு இட்டு வழங்கிவரும் பெயரும், வடிவும் இல்லை.

"ஒருநாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"
– திருவாசகம்.

குணம் 3 வகைப்படும். 1. தாமதம் 2. இராசதம் 3. சாத்வீகம். இவை உயிர்களுக்கு மட்டுமே, இறைவனுக்கு இல்லை. பரமசிவம் என்பது அவனே மேலான உயர்ந்த பொருள் என்பதை உணர்த்துகின்றது.

"ஆதி நடு அந்தம் கடந்த" (கந்தர் கலி வெண்பா வரி 4–5)

பதி அநாதி, தோற்றமும், முடிவும் அற்றவன். எனவே அவன் நடுவும் அற்றவன் என்கின்றார் குமரகுருபரர்.

'போக்கு வரவும் புணர்வும் காரணமும் இல்லாக் கதியாகித்"

(கந்தர் கலிவெண்பா வரி 13–14)

"போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே" (திருவாசகம்)

இறைவன் இறப்பும் பிறப்பும் பற்றான தொடர்பும் தனக்கொரு மூலமும் அற்றவன்.

'முந்தும் கருவின்றி நின்ற கருவாய்" (கந்தர் கலிவெண்பா வரி – 17)

இவ்வுலகத்தில் உள்ள அனைத்துப் பொருள்களின் தோற்றத்திற்கும் மூலப் பொருள் ஒன்று உண்டு. செடியின் தோற்றத்திற்கு ஆதாரம் விதை. உலகம் மாயையாகிய மூலத்திலிருந்து தோன்றியது. அம்மாயையை இயக்குபவன் இறைவன். இறைவன் எப்பொருளின் தோற்றத்திற்கும் கருவாய் இருப்பவன். ஆனால் அவன் தனக்கு மூலப்பொருள் ஒன்று எதுவும் இன்றி எல்லாப் பொருட்களுக்கும் தானே மூலமாய், வினை வயத்தால் அன்றி அருள் வடிவாய் நிற்பதாய் கூறுகின்றார்.

பதியின் தடத்த இலக்கணம் (பொது இயல்பு) :

இறைவன் உயிர்களின் மீது உள்ள அளவில்லாத கருணையினால் உயிர்களுக்கு அருள்புரிவதற்காக உருவம், அருவம், அருஉருவம் என்ற மூவகைத் திருமேனிகளை எடுக்கிறார் என்பதை குமரகுருபரர்

"உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவும் பலவாய்" (கந்தர் கலிவெண்பா வரி 21-22)

என்று குறிப்பிடுகின்றார். ஆனால் இறைவனின் வடிவம் உயிர்களைப் போல் மாயாகாரிய வடிவம் அன்று அவன்அருளே வடிவானவன் என்பதை

"அருளே உருவின்றி நின்ற உருவாய்" (வரி - 18)
"கருணைத் திருவுருவாய்" (வரி - 47)

என்று குமரகுருபரர் கூறுகின்றார்.

பதியின் தொழில்கள் :

இறைவன் தனது அளப்பருங் கருணையினால் உயிர்கள் உய்யும் பொருட்டு படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களை பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்ற ஐவகை வடிவத்தில் ஆற்றுகின்றான் என்பதை

'ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய் - தனாதருளின்
பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சம் என நிற்கும் தனிப்பொருளாய்
- (வரிகள் 9-12)

என்று குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் கூறுகின்றார்.

பதியின் பண்புகள்

"பூரணமாய் நித்தமாய்" - (வரி 13)

பதி எங்கும் வியாபித்துள்ள நித்தமாயுள்ள பொருள் என்பதைக் குறிக்கும்.

"நித்தியானந்த போதமாய்
பந்தம் தணந்த பரஞ்சுடராய்"
- (வரி 5, 6)

நித்தயானந்த போதம் என்பது இறைவன் சச்சிதானந்த சொரூபி என்பதையும், பந்தம் தணந்த பரஞ்சுடர் இயல்பாகவே வினையினின்றும் நீங்கிய பேரொளிப் பிழம்பு என்பதையும் குறிக்கும்.

இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள உறவு :

இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள உறவைச் சைவசித்தாந்தம் அத்துவித உறவு என்று கூறும். அத்துவிதம் என்றால் இரண்டற்றது ஆனால் ஒன்றல்ல, இரண்டுக்கு மேற்பட்டதையும் குறிக்கும் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. பதியாகிய சிவன் பசுவாகிய உயிருடன் ஒன்றாய், உடனாய் வேறாய் உள்ளான் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதனை குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில்

'எவ்வுயிர்க்கும் பின்னம் அற நின்ற பெருமாளே"
- வரி (71-72)

இறைவன் உயிருடன் கலப்பினால் ஒன்றாயும், ஆனால் பொருள் தன்மையால் உயிரினின்று வேறாயும், உயிரின் உள்ளிருந்து இயக்குவதால் உடனாயும் இருப்பதாக கூறுகின்றார். உயிர் இன்றி உடல் இயங்காது. இறைவன் இன்றி உயிர் இயங்காது. உடலை இயக்குவது உயிர், அந்த உயிரை இயங்கச் செய்பவன் இறைவன்.

இறைவன் பசு, பாச ஞானத்தால் அறியப்படாதவன் :

இதனை குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில்

"போதமும் காணாத போதமாய்" (வரி - 4)
"மனாதிகளுக்கு எட்டா வடிவாய்" (வரி - 10)
"அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா" (வரி - 45)

இடைவிடாமல் உயிரின் அறிவுக்கு அறிவாகி அவ்வுயிரின் அறிவுக்கு எட்டாத நிலையில் இருப்பவன் என்று கூறுகின்றார்.

இறைவன் பதிஞானத்தால் மட்டுமே அறியப்படுபவன் :

'காணரிய மெய்ஞானக் கண் காட்டி - பூணும்
அடிஞானத்தால் பொருளும் ஆன்மாவும் காட்டி" (வரி 52-53)

உயிர்கள் உடம்பில் உள்ள கருவிகள் மூலம் அறியும் அறிவு பாசஞானம் எனப்படும். உயிர் பாச பந்தம் நீங்கி, தான் வேறு, தன் உடம்பு வேறு என்று உணர்ந்த நிலையில் அறியும் அறிவு பசு ஞானம் எனப்படும். பசு, பாச ஞானத்தால் இறைவனை அறிய முடியாது. பசு ஞானமும், பாச ஞானமும் கடந்து திருவருள் ஞானமாகிய பதிஞானத்தால் (மெய்ஞானம்) மட்டுமே இறைவனை அடைய முடியும்.

உயிர்கள் எடுக்கும் பிறப்பின் வகைகள் :

உயிர்கள் தான் செய்த வினைப் பயனை அனுபவிப்பதற்காக பல்வேறு பிறப்புக்களை எடுக்கின்றன. இவை முட்டை, வியர்வை, வித்து, கரு என்ற நான்கு வகையில் தோன்றும் தோற்றமாகவும், தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்கு, மனிதர், தேவர் என்ற எழுவகைப் பிறவிகளுடன் 84 லட்சம் யோனி பேத பிறப்பை அடையும் என்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதனை குமரகுருபரர்

"மாறிவரும்
ஈர்இரண்டு தோற்றத்து எழு பிறப்புள் யோனி எண் பால்
ஆரவந்த நான்கு நூறுஆயிரத்துள்" (வரி 28-30)

என்று கூறுகின்றார்.

முடிவுரை :

குமரகுருபரர் பிறந்தது தாமிரபரணிக்கரை (திருவைகுண்டம்)
உபதேசம் பெற்றது காவிரிக்கரை (தர்மபுர ஆதீனம்)
புகழ்கொடி நாட்டியது கங்கைக் கரை (காசி)

முக்தி அடைந்த நாள் – வைகாசி, மூலநட்சத்திரம், கிருஷ்ணபட்ச, திருதியை கி.பி. 1688 ஆம் ஆண்டு. ஐந்து வயதிலேயே செந்தில் குமரனின் திருவருளால் பாடல் பாடும் திறமையும் சைவசித்தாந்த ஞானமும் கிடைக்கப் பெற்றார். சைவசித்தாந்த சாத்திர நூல்கள் தோன்றிய பல நூறு ஆண்டுகளுக்கு பிற்பட்ட நூலாயினும் இவர் ஐந்து வயதிலேயே பாடிய முதல் நூலாகிய கந்தர் கலிவெண்பாவில் சைவசித்தாந்தத்தை எளிமையாகவும், இனிமையாகவும் கூறியிருப்பது இந்நூலின் சிறப்பாகும்.



மந்திர ஒலிகளின் மகத்துவம்

டாக்டர் புனிதவதி நாராயணன்
பினாங்கு

மந்திரங்கள் என்பவை ஒலிக்கூட்டங்களாகும். அது ஒற்றை எழுத்து, சொல் அல்லது சொற்றொடராக இருக்கலாம். அவை வார்த்தைகளில் உள்ள எந்த குறிப்பிட்ட அர்த்தத்தையும் விட அதன் ஒலி அதிர்வுகளின் சக்திக்காக அடிக்கடி உச்சரிக்கப்படுகிறது. அவை இறைவனுக்கு உகந்த சொற்களின் தொகுப்பு ஆகும். அவற்றின் மூலம் இறைவனை மகிழச் செய்யலாம் என்பது நம்பிக்கை. அறிவியல் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பு மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலத்தில் இயற்கையின் சீற்றத்தில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய சூழலில் இருந்தனர். அப்போது மனிதன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கைக்கு நம்மையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என்று நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் பலன்களைப் பெற முயற்சித்தான். பின்னர் அவ்வாற்றலைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செலுத்த வழிமுறைகளை மேற்கொண்டான். இவ்வாறு கையகப்படுத்திய ஆற்றலை சில சூத்திரங்கள் அல்லது வாய்ப்பாடுகளாக சுருக்கி உச்சரிப்பதன் மூலம் பெறலாம் என்று நம்பினான். அவன் உண்டாக்கிய சூத்திரங்கள் அல்லது வாய்ப்பாடுகளே மந்திரம் என்று அழைக்கப்படுகின்றது.

அறிவியல் வளர்ச்சியின் தாக்கம்

அறிவியல் வளர்ச்சிகள் மக்கள் நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகள் என்று முத்திரை குத்தின. அது அறிவியலின் வளர்ச்சியாலும், தொழில் நுட்பங்களின் வளர்ச்சியாலும், எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம் என்று அறுதியிட்டு கூறியது. இதன் விளைவாக மந்திரத்தில் மனிதனுக்கு இருந்த நம்பிக்கைகள், படிப்படியாக மறைய ஆரம்பித்தது. பொருள் விளக்கத்தைப் பற்றியல்லாமல், ஒலிக்கு மகத்துவம் அளிப்பதைக் குறித்து பலரும் கேள்வி எழுப்பினர்.

எடுத்துக்காட்டுக்கு,

சமண மதத்திலிருந்து சைவனாக மாறிய நாவுக்கரசரின் உளத்திண்மையை விளக்கும் அருமையான பாடல்

நாம் யார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்பட்டோம் நடலை இல்லோம்.
ஏமாப்போம், பிணி அறியோம் பணிவோம் அல்லோம்.
இன்பமே எந்நாளும் துன்பமில்லை.
தாம் யார்க்கும் குடி அல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்க வெண்குழை ஓர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே.

என்றுவரும். இதன் பொருள் என்ன, இதிலுள்ள ஆழ்ந்த இறை நம்பிக்கை என்ன என்பதைப் பற்றிக் கூறாமல், இப்பாடலை முழுவதும் பாடினால், இதில் மொத்தம் ஒன்பது ஓம் வருகிறது. " ஓம்" என்னும் பிரணவ மந்திரம், இந்தப் பாடலில் முழுவதும் ஒலிப்பதன் காரணமாகத்தான் இந்தப்

பாடலில் ஒரு மந்திர சக்தி இருக்கிறது. அதனால் இப்பாடலைப் பாடப்பாட மந்திர உச்சாடனத்தால் ஏற்படும் பலன் நமக்குக் கிடைக்கிறது என்று கூறுகிறார்கள். அதே போல

"சிவ சிவ எங்கிலர் தீவினையாளர். சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்

சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர் சிவ சிவ என்னச் சிவகதி தானே".

என்னும் திருமந்திரப் பாடலில் ஒன்பது முறை சிவ சிவ என்று வருகிறது. எனவே ஒரே பாடலைப் பாடி ஒன்பது முறை சிவ நாமத்தை உச்சரித்த பலனைப் பெறலாமே என்று மகிழ்பவர்கள் உண்டு. பாடல்களில் சொல்லும் பொருளும், பண்ணும் இசையும் எப்படி இணைந்திருக்கின்றன என்பதை உணர்ந்து, உணர்ந்து அனுபவிக்காமல், பாடலில் எத்தனை ஓம் என்று கணக்குப் போடுவதெல்லாம் சிறுபிள்ளைத் தனம் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இருப்பினும்,

மலையைப் போல பெரிய பாவங்களைச் செய்தவர்களும், இறை நாமத்தை இடை விடாது ஓதி வந்தால் கொடிய வினைகள் யாவும் நீங்கப் பெறுவதுடன், மிகுந்த செல்வச் செழிப்பையும் பெற்று இன்புறுவர் என்பதை, பின்வரும் பாடல் மூலமாக தெளிவு படுத்துகிறார் ஞானசம்பந்தப் பெருமான்

"மந்தரம் (ம்) அன பாவங்கள் மேவிய பந்தனையவர் தாமும் பகர்வரேல்,

சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால் நந்தி நாமம் நமச்சிவாயவே".

எனவே மந்திரங்களின் சொற்களின் பொருளைவிட அந்த ஒலி அதிர்வுகளுக்கு சக்தி அதிகம் இருப்பதாக உணரப்படுகிறது.

"சில ஒலிப்பண்புகளுடன் கூடிய சொல், அல்லது சொற்றொடர்களை ஒருவர் மீண்டும் மீண்டும் ஒலிப்பதன் மூலம் ஒருவருடைய கவனத்தை குவியப்படுத்தலாம் என்று கூறுகிறார்கள்". (பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் – மந்திரங்கள் என்றால் என்ன?)

மந்திர ஜபம் - தோற்றமும், அதன் சக்தியும்:

நம்முடைய முன்னோர்கள், ஞானிகள், ரிஷிகள், நிறைமொழி மாந்தர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் நாம் பேசும் குறை மொழிகளை நிறை மொழிகளாக மாற்றும் வல்லமை வாய்ந்தவர்கள். இலக்கணப் பேராசிரியர் தொல்காப்பியர், "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழிதானே மந்திரம் என்ப" என்று மந்திரத்திற்குப் பொருள் கூறுவார். ஒரு சாதாரண மனிதனுக்கு மந்திரம் என்பது வெறும் சப்தமாகத் தோன்றும். ஆனால் அதுவே ஒரு ஆத்ம சாதகனுக்கு ஆத்ம ஞானத்தையே அளிக்கக்கூடிய வல்லமை பெற்ற ஒரு சொல்.

எல்லா சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் "frequencies" என்று சொல்லப்படுகின்ற அதிர்வுகள் உண்டு. இந்த அதிர்வலைகள் ஒலிசக்திகளாகும். இந்த அதிர்வுகளை எல்லா எழுத்துக்களும் சொற்களும் பெற்றிருந்தாலும். எந்த அதிர்வுகளோடு எந்த அதிர்வுகளை சேர்த்தால் அவை பயன்படும் என்பதை ஆராய்ந்து அறிந்து பல்வேறு அதிர்வுகளை ஒன்று சேர்த்து புதியதொரு ஆற்றலை அவை பெறுமாறு செய்திருக்கிறார்கள். ஆற்றல் பெற்ற அந்த சொற்றொடர்கள் மந்திரங்களாக மாறிவிடுகின்றன. முறையான விழிப்புணர்வோடும், அதன் தன்மை என்ன என்கிற துல்லியமான புரிதலோடும் உச்சரிக்கப்பட்டால், ஒரு மந்திரம் மிகவும் சக்திவாய்ந்த கருவியாக இருக்கமுடியும்.

மந்திரம் என்பது இறை சக்திக்கு – கடவுளுக்கு நிகரான ஒலி. அதனால் ஏற்படும் ஒலி அலைகள் நம்முள் தெய்வ சக்தியைத் தோற்றுவிக்கின்றன. நாம் ஒரு மந்திரத்தை முதலில் ஜபிக்கும்போது அது நமது உள்ளில் முதலில் ஓர் அதிர்வை ஏற்படுத்துகிறது. அடுத்து இரண்டாவது முறையாக அதை நாம் உச்சாடனம் செய்யும் போது மீண்டும் ஓர் அதிர்வு அலையை எழுப்புகிறது. இவ்விதமாக அடுத்தடுத்து எழுப்பும் அதிர்வுகள் முந்தின அதிர்வுகளை மேலும் மேலும் வலுப்படுத்துகின்றன. இவ்விதமாக வலுப்பட்ட ஜபம், ஜபிப்பவனுக்கு இறை நாமத்தில் சுவையை ஏற்படுத்தி அவனை இறைவனிடம் அழைத்துச் செல்கிறது.

ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை திரும்ப திரும்ப சொல்லும் போது அந்த மந்திர ஒலியானது பிரபஞ்ச சக்தியை ஈர்த்து, உயிர் பெற துவங்கி, தெய்வீகத் தன்மை நிறைந்ததாக மாறிவிடும். இறை சக்தியையும், நம்மையும் இணைக்கும் பாலமாக மந்திரங்கள் விளங்குகின்றன.

ஜபம் செய்யச் செய்ய நம்முள் மனத்தெளிவு ஏற்பட்டு, தெய்வீக சக்தியோடு கூடிய அலைகள் எழும்புகின்றன. அவை யாவும் இறை சக்தியே! இவ்விதம் எழும்பும் தெய்வ சக்தியே சாதகன் இறை ஞானம் பெற உதவுகிறது.

பல்வேறு இறை மந்திரங்கள்

ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு மந்திரம் உண்டு. இம்மந்திரங்கள் அந்தத் தெய்வங்களின் சூக்கும வடிவம் ஆகும்.

பிரணவ மந்திரம் ஓம்

பஞ்சாச்சரம் எனும் ஐந்தெழுத்து மந்திரம் "**நமசிவாய**" (நமச்சிவாய), சிவ–மந்திரம்

சடாச்சரம் எனும் ஆறெழுத்து மந்திரம் "**சரவணபவ**", முருகன்–மந்திரம்

அட்டாச்சரம் எனும் எட்டெழுத்து மந்திரம் "**ஓம் நமோ நாராயணாய**", நாராயணாய, நாராயண மந்திரம்.

ஆறெழுத்து மந்திரத்தான்:

தமிழ் கடவுளான முருகனுக்கு "சரவணபவ" என்னும் ஆறெழுத்து மந்திரமே சிறப்பான மந்திரமாக கருதப்படுகிறது. இதில் இரு முறை 'வ' வருவதால் சரஹணபவ என்று கூறுவதும் உண்டு. இதில் வெறும் ஆறெழுத்துக்கள் தான் இருக்கிறது என்றாலும் கூட அதில் ஆறு மந்திரங்களும் ஆறு விதமான பலன்களும் ஒளிந்துள்ளன.

முருகனை வழிபட சிறந்த மந்திரம் 'ஓம் சரவண பவ' என்பதாகும் 'ஓம்' என்பது பிரணவத்தை குறிக்கிறது. 'ச' என்பது வசீகரிக்கும் சக்தி கொண்டது. 'ர' என்பது நம் வாழ்வில் வளத்தை சேர்க்கக்கூடியது. 'வ' என்பது துன்பம் வறுமை போன்றவற்றை நீக்கக்கூடியது. 'ண' என்பது நம் வாழ்வின் பிரச்சனைகளை தீர்க்கக் கூடியது. 'ப' என்பது ஈர்க்கும் ஆற்றலைக் கொண்டது மற்றும் 'வ' என்பது நம் வாழ்வின் எதிர்மறை சக்திகளை அழிக்கும் சக்தி கொண்டது.

சரவணபவ மந்திரம் விளக்கம்

அறுபத்து நான்காவது நாயன்மார் என இணைத்துக் கொள்ளப்பட்ட வாரியார் சுவாமிகள் கூற்றை நோக்குவோம்.

முருகப்பெருமான் நமக்கு வீடுபேறு அருளும் ஆற்றல் கொண்டவன். ஆனால், நாம் வீடுபேறு அடையத் தடையாக ஆறு பகைவர்கள் இருக்கிறார்கள். காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்யங்களே அந்த ஆறு பகைவர்கள். ஆறு பகைவர்களையும் வென்று, முருகக் கடவுளின் அருளால் வீடுபேறு அடைய விரும்புவர்கள், ஆறுமுகப் பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தை ஓதவேண்டும் என்று கூறுகின்றார்.

'அகங்குளிர ஓதிய ஆறெழுத்தின் பெருமை ஆரறிவார் மகிதலத்தில் சொன்னேன் கேளே' என்று பாடலை முடிக்கும் அகத்தியர் கூறுவது எந்த காரியத்திற்காகவும் கிளம்பும் முன் இம்மந்திரத்தை ஜெபித்து திருநீறு அணிந்துசெல்ல காரிய வெற்றி உண்டாகும், என்பதாகும்.

'இசை பயில் சடாட்சரமதாலே இகபர சௌபாக்கியம் அருள்வாயே' என அருணகிரி நாதர் திருப்புகழில் வேண்டுகிறார்.

ஏரகத்து உறையும் முருகனிடத்து நம்மை ஆற்றுப்படுத்தும் நக்கீரர். ஆறுஎழுத்து அடங்கிய அருமறைக் கேள்வி நா இயல் மருங்கில் நவிலப் பாட வேண்டும் என்கிறார். அந்த ஆறெழுத்து மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க உடம்பில் ஒரு சக்தி, உள்ளத்தில் ஒரு தெம்பு உண்டாகும். அழைத்த போதெல்லாம் வருவதற்கு காத்து நிற்பவன் ஆயிற்றே ஆறுமுகன்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி என்ற மஹா மந்திரத்தை அருளிய வள்ளலார் கூறுவது மகாமந்திரத்தை நாவினால் மட்டும் ஓதினாற் போதாது ஊன் ஓத வேண்டும், உள்ளம் ஓத வேண்டும், உயிர் ஓத வேண்டும், உயிர்க்கு உயிராம் ஆன்மாவும் ஓத வேண்டும்.

இறை மந்திரங்களை ஓதுவதன் பயன்

'இறைவன் நாமத்தை ஜெபம் செய்து ஆவல் ஏற்படுத்தும்படி இதயப்பூர்வமாக பகவானிடம் பிரார்த்தனை செய். நிச்சயமாக அவரும் உனது பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பார்'. 'இறை நாமம் என்ற விதையில் அதிக சக்தி இருக்கிறது. அது அஞ்ஞானத்தைப் போக்குகிறது. முளையோடு உள்ள ஒரு விதை மிகவும் மிருதுவாக இருந்தபோதிலும் பூமியைத் துளைத்துக் கொண்டு வேர் விடுகிறது என்கிறார்' பகவான் இராமகிருஷ்ணர்.

'தியானம் செய்ய இயலாவிட்டால் ஜெபம் செய்யுங்கள். ஜெபத்தின் மூலமே ஆத்ம ஞானம் கிடைக்கும். நீரில் நீயாகக் குதித்தாலும் சரி அல்லது பிறரால் தள்ளப்பட்டாலும் சரி, உனது ஆடைகள் ஈரமாகிவிடும். அதுபோல ஜெபத்தின் மகிமையை அறிந்து ஜெபம் செய்தாலும், அறியாமல் ஜெபம் செய்தாலும், அதற்குரிய பலன் நிச்சயம் உண்டு'.

மந்திரம் மனத்தையும் உடலையும் தூய்மைப்படுத்துகிறது. இறைவன் நாமத்தை ஜெபம் செய்து வர வர ஒருவன் தூய்மை அடைந்து விடுகிறான். காற்று மேகத்தைக் கலைப்பது போல இறைவன் நாமம் உலகப் பற்று என்ற மேகத்தைக் கலைத்து விடுகிறது.

'ஒரு நாளைக்கு பல தடவை இறைவன் நாமத்தை ஜெபம் செய்து வந்தால் மனமும் தானாகவே அடங்கிவிடும். அவ்விதம் நடப்பதை நான் அனுபவத்தில் பார்த்திருக்கிறேன்' என்கிறார் அன்னை சாரதா தேவி.

'ஆன்மீகப் பாதையில் செல்பவன் ஜெபத்தின் மூலமாகவே தனது இலட்சியத்தை அடைகிறான்' – மனு
'கர்மங்களில் ஜெபமே முதலிடம் வகிக்கிறது. அதுவே எல்லாப் பாவங்களையும் போக்கவல்லது' –

மகாபாரதம்

'யக்ஞங்களில் நான் ஜப யக்ஞமாக இருக்கிறேன்' – பகவத் கீதையில் கண்ணன்.

'எல்லா யக்ஞங்களின் பலன்களை ஜபத்தின் மூலமாகவே ஒரு சாதகன் அடைகிறான்' – தந்திர சாஸ்திரம்

'ஜெபத்தின் மூலமே ஒருவன் தனது இஷ்ட தெய்வத்தை அடைகிறான்' – தந்திர சாஸ்திரம்

'நெருப்பு விறகை எரிப்பது போல ஜெபம் மனிதனின் பாவங்களை எரித்து விடுகிறது. சக்தி வாய்ந்த மருந்தின் பயனை அறியாமல் அதை உபயோகப்படுத்தினாலும் அது நோயைக் குணப்படுத்துகிறது. இறைவனின் நாமத்தை ஜெபம் செய்து வருவதும் அதைப் போன்றதே'.

'அடியார்க்கெளியான் அறுமுகனை, அன்பொழுக நினைத்து, ஆறெழுத்து மந்திரத்தை அனுதினமும் ஓதி, அவன் தாள் வணங்கி, அவனருள் பெற்று உய்வோமாக!

ஓம் சரவண பவ



தண்ணீர்மலை முருகன்

மா. அரு. சோமசுந்தரம்
தேவகோட்டை
(தெலுக் இந்தான்)

அழகு மாறா பேரழகன்
அழகு தமிழ் தந்த இளைய மகன்
அலை கடலுக்கு அப்பால்,
பினாங்கு நகர் தனில்
தண்ணீர்மலையில் கொலு வீற்றிருக்கும் தங்க மகன்

குமிழ் சிரிப்பு முக அழகும்,
விண்ணளக்கும் விழியழகும்,
உச்சித் தலையிலே சடையழகும்,
நடை காட்டும் இடப் பக்கத் தொடையிலே கரு மச்ச திருவழகும்,
காண்போரின் கவனம் மாறா பேரழகாம்.

பினாங்கு வீதியிலே
அவன் அரசாங்கம்,
சொக்கட்டான் மண்டபத்தில்
அவன் திருக்கோவில்.
காண வேண்டும்
தண்ணீர்மலை ஆண்டவன் தரிசனம்.

தைப் பூசத் திருவிழாவில்
வெள்ளி ரதத்தில் அவன்
தங்கத் திருமேனி கண்டிடவே
அங்கம்எல்லாம் பூரிக்கும்.
அத்தனையும் அவன் தரும்
வாழ்வு என்று அருமை காத்து சேர்ப்பது நகரத்தார் நலமாகும்.

ஆடி வரும் காவடிகள்,
பந்தம் என்றே நடை காட்டும் காலடிகள்,
எண்ணில் அடங்கா பாற்குடங்கள்,
ரதமேறி வரும் முருகனுக்கு
தேரோடும் வீதி எல்லாம்,
சிதர் தேங்காய் காணிக்கைகள்.

சித்தம் எல்லாம் சிவன் என்றும்,
சிந்தனை எல்லாம் முருகன் என்றும்,
முற்றும் மனம் களிக்கும் முகங்களிடையே,
மொழி அறியா பண்பு நிறை
சீனர் கூட்டம் காட்டும் பக்தி,

மனம் நிறைக்கும்.
வந்தோர் எல்லாம் வழி அமர்த்தி,
அள்ளக் குறையா நிறை குடமாய்
அரு மருந்தாய் அன்னம் பாலித்து,
பெரு விருந்து படைத்திடுவார்
பினாங்கு வாழ் நகரத்தார்.

மொழியின் அழகு அதன் ஓசையிலே,
திருக்கோவிலின் அழகு
அதன் சிறப்பினிலே,
திருக்குட நன்னீராட்டுப்
பெருவிழா காண வரும்
பக்தர் மனமெல்லாம்
தெளியட்டும்,
வளமான வாழ்வும்,
நிலையான செல்வமும்,
பெருகி வரவே தண்ணீர் மலை
முருகனின் தாள் பணிவோம்.



அங்கணனுக்கு ஓர் அம்மை

திருமதி. மு. இராமாயி ஆச்சி
நடத்துநர்,
காரைக்கால் அம்மையார் திருவாசகக் குழு
மேலைச் சிவபுரி

முந்தும் நடுவும் முடிவுமில்லா அங்கணனுக்கு, ஈசனுக்கு அம்மையா? இது என்ன கூற்று? வியப்பாக இருக்கிறதே என்று நினைப்பவர்கள், கீழே தொடரும் கதையைப் படியுங்கள். இது **'இவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே'** என்று ஈசனால், உமையம்மைக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்ட புனிவதியாரின் கதை. காரைக்கால் அம்மையார் கதை.

நம் நகரத்தார் குலத்தில் பிறந்த குலக்கொடி என்று நம்பப்படும் புனிதவதியார், சோழநாட்டின் காரைக்கால் என்னும் திருத்தலத்தில், அறவழி வணிகம் செய்து வந்த தனதத்தனார் என்பவருக்கு மகளாக அவதரித்தார் என்பதை சேக்கிழார் கீழ்க்கண்டவாறு பாடியிருக்கிறார்.

வங்கமலி கடல்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்தனார் தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்.

கீழ்வரும் திருமந்திரப் பாடலுக்கு எடுத்துக்காட்டு என்று சொல்லும்படியாக புனிதவதியார் வளர்ந்து வந்தார்.

வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கனமும்பெரிதுடைப் பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்கு
தாயும் மகளும் நல் தாரமும் ஆமே

திருமணப் பருவம் வந்ததும், தற்போது நாகபட்டினம் எனப்படும் நாகையம்பதியில் வசித்துவந்த நிதிபதி என்ற மற்றொரு வைசிய குலப் பெருமகனுடைய புத்திரன் பரமதத்தனுக்கு திருமணம் செய்துவைத்தனர் பெரியோர். தமக்கு வேறு பிள்ளை இலாததால், மகளும் மாப்பிள்ளையும், நாகைப்பதியில் புகுந்த வீடு செல்லாமல் காரைக்காலிலேயே இருக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, பெரும் செல்வத்தையும் கொடுத்து தம் வீட்டுக்குஅருகிலேயே குடியமர்த்தினார் தனதத்தன். மாப்பிள்ளை பரமதத்தன் அந்தச் செல்வத்தை விருத்தி செய்து இல்லறத்தையும் ஒழுங்குபெற நடத்தி வந்தான்.

புனிதவதியார் பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும் பெருக, இல்லறத்திற்கு வேண்டுவனவற்றை வழுவாது செய்வாராயினார். தம்முடைய வீட்டுக்குச் சிவனடியார்கள் வந்தால், அவர்களைத் திருவமுது செய்வித்து, அவரவருக்கு உற்றபடி செல்வங்களையும் கொடுத்து உதவுவார்.

ஒருநாள் சிவனடியார் ஒருவர், கடுமையான பசி, தாங்க முடியவில்லை என்று வந்தார். அந்த நேரம் இல்லத்தில் அன்னம் மட்டுமே தயாராகி இருந்து கறி ஏதும் ஆகாமல் இருந்த நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் புனிதவதியார் கவலை அடைந்தார். சற்றுமுன் தம்

கணவன் இரண்டு மாங்கனிகளை கொடுத்தனுப்பியிருந்தது நினைவுக்கு வந்தது. உடனே பெருமகிழ்ச்சியுடன் அக்கனிகளில் ஒன்றை வைத்து அன்னத்தையும் பரிமாறி அடியாரின் பசியை ஆற்றி அனுப்பிவைத்தார்.

சிறிது நேரத்தில் கணவன், பரமத்தன் வீடு திரும்பினான். புனிதவதியார் அவனுக்கு அமுதுபடைத்தார். அவ்வேளையில் பரமதத்தன், தான் கொடுத்தனுப்பிய மாங்கனியைக் கொண்டுவரும்படி கேட்க, அடியாருக்குப் படைத்தபின் மீதியிருந்த மற்றொரு கனியைக் கொண்டுவந்து கணவனுக்குப் படைத்தார் புனிதவதியார். அதை உண்ட பரமத்தன், 'கனி மிக நன்றாக இனிமையாக இருக்கிறதே. இன்னொன்றையும் கொண்டுவா' என்றான். அந்தக் கனியை அடியாருக்குப் படைத்தாகிவிட்டதே, என்ன செய்வது என்று கலங்கி, உற்றவிடத்து உதவும் பரமனுடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே அக்கடவுளின் திருவருளால் இன்னொரு மாங்கனி கையில் வந்தது. அதைக் கொண்டுபோய்கணவருக்குப் படைத்தார்.

அதை உண்ட பரமதத்தன், அதன் சுவை தேவாமிர்தத்தை விட சிறப்பாக இருந்ததால் "இது முன் நான் தந்த மாங்கனி போல் இல்லை. இது மூவுலங்களிலும் பெறுதற்கு அரியது, இதனை நீ எங்கே பெற்றாய்" என்றான். புனிதவதியார், உண்மையைச் சொல்லுவதா வேண்டாமா என்று பலவகையிலும் சிந்தித்துப் பின் கணவனிடம் அந்தக் கனி ஈசன் திருவருளால் கிடைத்தது என்று நடந்தவைகளை விளக்கினார். பரமதத்தன் அவர் சொன்னதை நம்பாமல், **'இது தான் தேசுடைய சடைப் பெருமான் திருவருளேல் இன்னமும் ஓர் ஆசில் கனி அவன் அருளால் அழைத்து அளிப்பாய்'** என மொழிந்தான்.

புனிதவதியார், மறுபடி இறைவனை வணங்கி 'இன்னுமொரு கனி தந்தருள்க, இல்லையேல் நான் உரைத்தது பொய்யுரையாகிவிடும்' என்று வேண்ட அவர் கைகளில் இன்னொரு மாங்கனி வந்து சேர்ந்தது. அக்கனியை கணவனிடம் கொடுக்க, அவன் அதை வியப்புடன் வாங்கினான். வாங்கிய பழம் அவன் கைகளிலிருந்து திடீரென்று மறைந்தது. அவன் அச்சத்துடன் மனம் தடுமாறி, அப்புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து, அவரைப் பிரிந்து வாழவேண்டும் என்று துணிந்து, தன்கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல், அவரோடு தொடர்பின்றி வாழலானான்.

பின்னர் சில காலம், கடல் கடந்து சென்று ஒரு தூரதேசத்தில் வணிகம் செய்து பொருள் ஈட்டிப் பின் பாண்டிய நாட்டில் ஒரு நகரை வந்தடைந்து மற்றொரு பெண்ணை மணந்து பெரும் செல்வந்தனாக வாழ்ந்தான். ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு புனிதவதி என்று தன் முதல் மனைவியின் பெயரைச் சூட்டினான்.

அவன் பாண்டிய நாட்டில் இருப்பதைக் கேள்வியுற்றதும், சுற்றத்தார்கள், புனிதவதியாருடன் பாண்டிய நாட்டை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் வருவதை அறிந்த பரமதத்தன், தன் மனைவியோடும், பிள்ளையோடும் எதிர்கொண்டுவந்து, புனிதவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். வந்திருந்த சுற்றத்தார்கள் வெகுண்டு, 'உன் மனைவியை நீ வணங்குவது என்ன' என்றார்கள். அதற்குப் பரமதத்தன் 'இவரிடத்திலே ஒரு பெரிய அற்புதத்தைக் கண்டேன். இவர் தெய்வப் பெண். மானிடப் பெண்ணல்ல என்று எண்ணித்தான், இவரைப் பிரிந்தேன். இவர் நான் தொழும் தெய்வம். எனவேதான், நான் பெற்ற இந்தக் குழந்தைக்கு இவர் பெயரைச் சூட்டினேன். அதனால் தான் இவருடைய திருவடியையும் வணங்கினேன். நீங்களும் இவரை வணங்குங்கள்' என்றான்.

புனிதவதியார் கணவன் சொல்லிய வார்த்தையை கேட்டு, பரமசிவனுடைய திருவடிகளை சிந்தித்து, 'சுவாமி அவனுடைய கொள்கை இதுவென்றால், இனி இவனுக்காக நான் கொண்ட அழகு தங்கிய உடம்பை நீக்கி, பேய் வடிவை அடியேனுக்குத் தந்தருளல் வேண்டும்' என்று

பிரார்த்தித்தார். அக்கணமே, அக்கடவுளுடைய திருவருளினாலே, தசை முழுதையும் உதறி, என்புடம்பாக, மண்ணுலகமும், விண்ணுலகமும்வணங்கும் பேய்வடிவமாயினார். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். தேவதுந்துபிகள் ஒலித்தன. அதுகண்ட சுற்றத்தார்களெல்லாம் வியந்து, அவரை வணங்கி நின்றார்கள்.

இந்த அற்புதத்தை சேக்கிழார் பெருமான் பாடுகிறார்.

ஈங்கு இவன் குறித்த கொள்கை இது இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி கழித்து இங்கு உன் பால்
ஆங்கு நின் தாள்கள் போற்றும் பேய் வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர் தாள் பரவி நின்றார்


மலர் மழை பொழிந்ததது எங்கும் வான துந்துபியின் நாதம்
உலககெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
குலவினர் கணங்கள் எல்லாம் குணலை இட்டன முன் நின்ற
தொலைவில் பல் சுற்றத்தாரும் தொழுது அஞ்சி அகன்று போனார்.

பின்னர் புனிதவதியார், தமக்குச் சிவபெருமானுடய திருவருளாலே கிடைத்த ஞானத்தைக்கொண்டு, அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடினார். பின்னர் திருக்கைலாயகிரி போக விரும்பிப் பயணித்து, அந்தத் திருக்கைலாயகிரியை நெருங்கிய போது, அங்கே காலினால் நடப்பது தகுதியன்று என்று எண்ணித் தலையினாலே நடந்து, மலையில் ஏறினார். அவரது கோலத்தையும், அவர் தலையினால் நடந்துவருவதையும் கண்ட உமாதேவியார் வியந்து, ஈசனை நோக்கி, 'சுவாமி! இங்கே தலையினால் நடந்து ஏறிவருகின்ற இவர் யார்?' என்று வினவ, பரமசிவன் 'இங்கே வருகின்றவள் **"நம்மைத் துதிக்கின்ற அம்மை"**, இந்தப் பெருமை பொருந்திய வடிவத்தையும் அவளே வேண்டிப் பெற்றாள்' என்றார்.

புனிதவதியார் சமீபத்தில் வந்தவுடனே உலகெல்லாம் உய்யும் பொருட்டு, அவரை நோக்கி, **'அம்மையே'** என்று அழைத்தார். அதுகேட்ட புனிதவதியார் 'அப்பா' என்று சொல்லிக் கொண்டு அவருடைய திருவடிகளிலே விழுந்து வணங்கி எழுந்தார். சுவாமி அவரை நோக்கி 'உணக்கு வேண்டும் வரம் யாது' என்று வினவ; புனிதவதியார் வணங்கி நின்று, 'சுவாமி! அடியேனுக்கு இறவாத பேரின்பமயாகிய அன்பு வேண்டும்; இனிப்பிறவாமை வேண்டும். பிறக்கினும் தேவரீரை ஒரு காலமும் மறவாமை வேண்டும்; இன்னும் தேவரீர் திருநடம் புரியும்போது தேவரீருடைய திருவடியின் கீழே சிவானந்தத்தை உடையேனாகி, தேவரீரைப் பாடிக் கொண்டு இருத்தல் வேண்டும்'. என்று விண்ணப்பம் செய்தார்.

சுவாமி அவரை நோக்கித் 'தென்திசையிலே ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத் தரிசித்து, பேரானந்தத்தோடு நம்மைப் பாடிக்கொண்டிரு' என்று அருளிச் செய்தார். அது கேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ்கரித்து அனுமதி பெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டுக்குத் தலையினால் நடந்து சென்று, சுவாமியுடைய திருநடனத்தைத் தரிசித்து, 'கொங்கைதிரங்கி' என்னும் மூத்த திருப்பதிகத்தையும், 'எட்டியிலவமீகை' என்னும் திருப்பதிகத்தையும் பாடினார். அவர் சுவாமியுடைய தூக்கிய திருவடியின் கீழே சிவானந்தத்தை அனுபவித்துக் கொண்டு எக்காலமும் இருக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்.



உ

விதியினை மாற்றுவது சாத்தியமே

(இராமநாதன் பழனியப்பன்
பொன். புதுப்பட்டி, தமிழ் நாடு)

விண்ணை நெருங்கும் வரை உயரும் பொழுது **'என் மதி'** என்றும், மண்ணில் விழும்பொழுது **'என் விதி'** என்றும் சொல்பவன் மனிதன்! அந்த விதிக்குத்தான் எத்தனை ஆற்றல்! வேதாந்தம் பேசாத வித்தகரான வள்ளுவரே **ஊழ்** என்ற ஒரு முழு அதிகாரத்தையே படைத்துள்ளாரே! வியப்புதான்! திருக்குறளுக்குப் பேருரை தந்த பேராசான் பரிமேலழகர் இவ்வதிகாரத்திற்கு அளித்துள்ள முன்னுரை

"இவ்வாற்றான், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறம் கூறினார்; இனிப் பொருளும்இன்பமும் கூறுவார், அவற்றின் முதற்காரணமாய் ஊழின் வலி கூறுகின்றார்.

அஃதாவது, இருவினைப் பயன், செய்வதனையே சென்றடைதற்கு, ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி, என்பன ஒருபொருட்கிளவி. இது பொருள் இன்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடைமையானும் அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது."

ஊழ் என்பது **தலைவிதி** என்று பொதுவாகப் புரிந்து கொள்ளப் பெறுகிறது. அந்தத் தனித்துவமான **ஊழ்** அதிகாரத்தில் உள்ள பத்தில் இருந்து இரண்டே குறட்பாக்கள்:

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது – குறள் 377

வரையறுத்துக் கொடுத்தவன் தந்த வாய்ப்பு அல்லாமல், கோடிப் பணம் சேர்த்தாலும் அதை அனுபவித்தல் அரிது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் – குறள் 380

விதியினைவிட வலிமையான மற்றொரு சக்தி வந்து நின்றாலும், அதற்கும் முன்னே வந்து நிற்கும் நம் ஊழ்! எனவே, ஊழினைவிட வலிமை மிக்கது வேறு எதுவும் இல்லை!

ஊழினைப் பற்றி ஒரு மனிதன் சொன்னவை இவை! இதோ, தெய்வமான இராமனும் அதைத்தானே சொல்கிறான்!

"பட்டாபிஷேகம் இராமனுக்கு அல்ல! மாறாக அவன் பதினான்கு ஆண்டுகள் வனம் செல்ல வேண்டும்! பட்டம் பரதனுக்கு!" என்ற ஆணையினை ஏற்று மரவுரி தாங்கித் தயாராகி விட்டான் இராமன். இச் செய்தி கேட்ட இலக்குவனோ கோபத்தில் கொதித்து எழுகிறான். அது கண்ட இராமன் அவனை அமைதிப் படுத்துகிறான்.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரத்தாள்
மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த!
விதியின் பிழை! நீ இதற்கு என்னை வெகுண்டனை?

–கம். இரா. அயோத்தி – நகர் நீங்கு – பாடல் 129

நதியிலே நீர் இல்லையானால் அது நதியின் குற்றமன்று;
மழை இன்மையால் அல்லவா?
அதுபோல,
இது, வரம் கேட்ட நம் தாயின் குற்றமன்று
வரம் கொடுத்த தந்தையின் குற்றமன்று;
நம் அன்னை கைகேயியின் குற்றமன்று;
அவர் மகன் பரதனின் குற்றமும் அன்று
இது விதி செய்த பிழை!
இதற்கு நீ கோபப்படுவது எதற்காக?

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்

என்றுதானே நிரபராதியான கோவலன் கொலையுண்டதற்கு, நெஞ்சையள்ளும் **சிலப்பதிகாரம்** பாடிய இளங்கோவடிகளும் காரணம் கூறுகிறார்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாக
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்!

– சிலம்பு – பதிகம் 55 – 60

இத்தகு வலிமைமிகு விதியினை விலக்கவே முடியாதா? "**முருகப் பெருமானால் முடியும்!**" என்கிறார் கந்தர் அநுபூதி பெற்ற அருணகிரியார், தம் **கந்தர் அலங்காரம்** என்ற அருள் நூலில்! ஓம்காரத்திற்குப் பொருள் சொல்லத் தெரியாது நின்ற நிலையில், முருகனின் திருக்கரத்தால் குட்டு வாங்கிய பிரம்மன் எழுதிய எழுத்துத்தானே அந்தத் தலை எழுத்து!

அதைப் பார்ப்பதற்கு முன்னர், இந்த விதி நம்மிடம் எப்படி வந்து சேர்கிறது என்பதைத் தெரிந்து கொள்வோமா? நாம் முற்பிறப்புகளில் செய்த நல்வினை, தீவினைகளின் விளைவாக இந்தப் பிறப்பில் நாம் அநுபவித்துக் கழிக்க வேண்டியவைதான், "இந்தப் பிறப்பிற்கான விதி!" நம்மைப் படைப்பவர் பிரம்மா. அவர்தான் இப்பிறப்பிற்கு நமக்கு உள்ள விதியினை, நாம் கருவுறும் பொழுதே நம் தலையில் எழுதி வைத்து அனுப்பி வைக்கிறாராம்.

அவ்வாறு நம் தலையில் பிரம்மன் எழுதிய அந்தத் தலை எழுத்தையே முருகன் அழித்து விடுவாராம்! இதென்ன விந்தை? பிரம்மன் என்ன பென்சிலாலா நம் தலையில் எழுதி இருப்பார், ரப்பரால்கூட அழித்து விடலாம் என்று சொல்ல?

அது போகட்டும்! அந்த முருகப் பெருமானின் பெரு அடியாரான அருணகிரியார் என்ன சொல்கிறார்?

சேல் பட்டு அழிந்தது செந்தூர் வயல் பொழில்; தேங்கடம்பின
மால் பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம்; மாமயிலோன்
வேல் பட்டு அழிந்தது வேலையும், சூரனும், வெற்பும்: அவன்
கால் பட்டு அழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கை எழுத்தே

– கந்தர் அலங்காரம் – 40

(சேல் – ஒரு வகை வாளிப்பான மீன்; மால்; – மணம்; வேல் – கடல்;
வெற்பு – க்ரௌஞ்ச மலை; அவன் – பிரம்மன்)

திருமுருகன் திருவடிகள் நம் தலையில் பட்டதும் அந்தப் பிரம்மன் எழுதிய தலை எழுத்தே அழிந்து விடுவாமானால் அந்தத் திருவடிக்கு எத்தனை மகிமை? அத்தகு திருவடிகளை உடையவனுக்கு எத்தனை மகத்துவம்? அதையும் மிக விளக்கமான படமாக்கிக் காட்டுகிறார் கந்தன் திருவருளைக் கடலளவு பெற்ற அருணகிரிநாதர்.

சேல் என்ற வாளிப்பான மீன்கள் துள்ளி விளையாடியதால் சேதமடைந்த வளமான வயல்கள்;

வயலோரங்களில் நிற்கும் கடம்ப மரங்களின் மலர்களாலான மாலையினை அணிந்த மால் மருகனிடம், தம் மனங்களைப் பறிகொடுத்து மயங்கி நிற்கும் இளமாதரின் திருக்கூட்டம்!

கடலுக்குள் ஓடி ஒளிந்த சூரனை முருகன் கை வேல் தேடியதில் வற்றிப் போன கடல்!

அங்கே மறைந்திருந்த சூரபத்மன்அந்த வீரவேலால் இரு கூறுகளாகப் பிளக்கப்பெற்று, ஒன்று சேவற்கொடியாகவும், மற்றொன்று மயில் வாகனமாகவும் மாற்றப்பெற்று நிற்கின்றன.

சூரபத்மனின் தம்பி தாரகாசூரன் தங்கி ஆட்சி புரிந்த க்ரௌஞ்ச மலை; முருகனின் தூதுவனாக அங்கே சென்ற வீரபாகுவை குகைக்குள் அடைத்து வைத்துவிட்டான் தாரகாசூரன். வீரபாகுவை விடுவிக்க, முருகனின் கைவேலால் தவிடுபொடியாக்கப்
பெற்ற அந்த கிரௌஞ்ச மலை;

இத்தனைக்கும்நடுவே அந்த வெற்றி வேலினைத் தம் திருக்கரங்களில் தாங்கி நிற்கும் தாளாளன் திருச் செந்தில் உறைத் திருமுருகன்!

அந்த வடிவேலனே இந்தப் பினாங்குத் திருத்தலத்திலும் **தண்ணீர்மலையான்** என்ற திருநாமம் கொண்டு, தம் திருக்கரங்களில் அந்த வெற்றி வேலுடன் வீற்றிருக்கிறான். அவன்திருத்தாள் மலர்களில் நாமும் நம் சென்னி பதித்து, நம் தலை எழுத்தினை நல் எழுத்தாக மாற்றி அருள வேண்டுவோமாக!



உ

சிவமயம்

திருவாசகம் - 'முக்திக்கு வழி, எளிய பக்தி நெறியே

(அன்பன் – கும. லெ. ஸ்ரீனிவாசன், சிங்கப்பூர்)

திருவாசகத்திற்கு உருகாதார், ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது மனிதநேய மாண்பாளர்களின் கருத்தாகும். அத்தகைய சீர்மை வாய்ந்த திருவாசகத்திற்கு பல சிறப்புகள் உண்டு. எளிய பக்தி நெறியே முக்திக்கு வழி என பறைசாற்றும் நூல்.

'உள்ளத்தில் அன்பு மீதூர' இறைவனைப்பற்றும் அடியவர்களுக்கு முக்திக்கு வழி காட்டும் நூல் திருவாசகம்.

மனிதன் மனிதனுக்கு சொன்ன நூல் திருக்குறள், மனிதன் இறைவனை புகழ்ந்து அவனைப் போற்றிய நுல் தேவாரம், ஆனால் இறைவனே தன் கைப்பட எழுதி மனித குலத்திற்கு தந்த நூல் திருவாசகம் என தனிச்சிறப்பு கொண்டது.

பிறபக்தி நூல்களிலிருந்து திருவாசகம் ஒரு வேறுபட்ட நூல். அது ஒரு இறையன்பரின் **'அனுபவப் பிழிவு'** என்கிறார் தமிழ் அறிஞர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள். பிறபக்தி நூல்கள் இறைவனது (சிவபெருமானது) திருவிளையாடல்களையும், அருட்செயல்களையும் ஆதாரமாகக் கொண்டு, அவன் புகழைப் பாடுபவை. ஆனால் திருவாசகம், மாணிக்கவாசகரின் சொந்த இறையனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே நம்மைப் போன்ற எளியவர்களுக்கும், **'நாயினும் கடைப்பட்டவராயினும்'**, இறைவன் அருள் பாலிப்பான் என்ற நம்பிக்கையைத் தரும் நூல்.

'இரும்பு மனத்தேனை, ஈர்த்து ஈர்த்து என்புருக்கி கரும்புதரு சுவை'யாக மாற்றக்கூடிய மந்திர சக்தி திருவாசகத்திற்கு உண்டு.

திருவாசகத் தேன் நம்முள் புகுந்து ஆக்கிரமிக்கும் போது, கட்டவிழ்ந்து திரியும் மனமும், ஐம்புலன்களும், ஆங்காரமும் கட்டுக்குள் வருவதை உணரலாம். மனம் அமைதி அடைந்து, அன்பு மீதூர, பக்தி வெள்ளத்தில் நம் பாவங்கள் அனைத்தும் கரைந்துபட்டுப் போகின்றன. **'ஆங்காரம் உள்ளடக்கி, ஐம்புலன்களை சுட்டறுக்கும்'** சக்தியும் திருவாசகத்திற்கு உண்டு.

திருவாசகம் ஒரு கற்பக விருக்ஷம். அதன் கீழிருக்கும் பக்தர்களுக்கு அவர்கள் விரும்பும் அனைத்தையும் அளிக்கவல்லது திருவாசகம். ஏனெனில் அது இறைவனால் மனித குலத்திற்கு அருளப்பட்ட பக்தி சாகரம். அள்ள அள்ளக் குறையாத அக்ஷய பாத்திரம்.

தமிழ் மூதாட்டி ஔவையார், திருவாசகத்தை நான்மறைக்கு ஒப்பாகப் பாடியருளியுள்ளார்.

'தேவர் குறளும், திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும், முனிமொழியும்
கோவை திருவாசகமும், திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்

என்பது ஔவையின் வாக்கு.

முற்காலத்தில், திருவாசகத்திற்கு பொருள் எழுதுவது மரபல்ல என்ற ஒரு கருத்து நிலவியதாகக் கூறுவார்கள். பொருள் காண முற்படும்பொழுது அறிவு வேலை செய்வதால், மனதில் பக்தி உணர்வுக்கு இடம் கிடைக்காமல் போக வாய்ப்புண்டு. பொருள் காண்பது என்பது அறிவு சம்பந்தப்பட்டது. அனுபவம் அல்லது உணர்தல் என்பது மனம் சம்பந்தப்பட்டது. பதவுரை, பொழிப்புரை என பொருள் காண விளையும் போது, மனம் உணர்வில் லயிக்க தவறிவிடக்கூடும். பக்தி என்பது உணர்வு சம்பந்தப்பட்டது. இதை மாணிக்கவாசகரே, சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார். செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் என்று சிவபுராணத்தில்பாடி இருக்கிறார் அல்லவா? பொருள் அறிந்து பாடும்போது தான் மனம் பாடும் பாடலோடு ஒன்றுகிறது என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது. ஆனாலும் திருவாசகத்தை பொருள் அறிந்து பாடுவதோடு மட்டுமல்லாமல் அதை உள்ளத்தில் உணர்ந்து பக்தி சிரத்தையோடு பாடவேண்டும்.

திருவாசகம், மாணிக்கவாசகப் பெருமானின் இறை அனுபவம் என்பதால் அது உணரப்பட வேண்டும். இந்த உன்னத இறை அனுபவம், திருவாசகம் ஓதும்போது, நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் என்கிறார் வள்ளல்பெருமான். மூன்று விஷயங்கள் ஒன்றாகச் சேரும்போது பக்தனுக்கு இந்த உணர்வு வரும் என்கிறார், 'பாடுகின்ற பக்தர்', 'பாடப்படுகின்ற திருவாசகம்', 'பாடுவதாகிய செயல்' இவை மூன்றும் ஒன்றேயாகச் சேரும்போது அந்த இறை அனுபவம் சித்திக்கும், தித்திக்கும்.

> 'வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
> நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
> தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
> ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே
> என்பது வள்ளல் பெருமான் வாக்கு'.

திருவாசகம் மனித குலத்துக்கு கிடைத்த முக்திக்கனி என உவமை பாராட்டி மகிழ்கிறார், நால்வர் மணிமாலை பாடிய சிவப்பிரகாச சுவமிகள்.

நாம், ஒரு தித்திக்கும் கனியை சுவைத்து சாப்பிட்டபின், அந்தக் கனியின் சுவையை பாராட்டுகிறோம். ஆனால் அந்தக்கனி நமக்கு கிடைப்பதற்கு முன் எத்தனையோ படிநிலைகளை அது கடந்து வந்திருக்கும். முதலில், ஒரு கனி நம்மிடம் வந்து சேர்வதற்கு எத்தனை படிகளை / நடைமுறைகளைத் தாண்டி அது நம்மிடம் வருகிறது என்று சிந்திப்போம். உதாரணமாக, ஒரு வாழைப்பழம் உருவாக, அது முன்னர் காயாக இருக்க வேண்டும், காய்க்கு முன்பு பூ வேண்டும், பூ எப்படித் தோன்றும்? வாழை மரம் முளைத்தால் தானே பூ தோன்றும். கிழங்காக ஊன்றும் வாழை முட்டி (வித்து) தான் மரமாகும். வித்தை நிலத்தில் ஊன்றி விட்டால் போதாது, அது வளர்வதற்கு ஏற்ற நீர்ப்பசனம் வேண்டும். நீர் எப்படி வருகிறது? கடல் நீரை மேகம் முகந்து, மழையாகப் பெய்து, ஆறு ஏரி, குளத்திற்குத் தண்ணீர் வருகிறது. கடலில் இருந்து மேகம் நீரை ஆவியாக மொண்டு, அது நீராக ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளில் தங்க, அது மதகைக் கடந்து, மடையில் பாய, நிலத்தில் ஊன்றிய வாழை வித்து, அந்த நீரைப்பருகி, பூவைத் தோற்றுவித்து காயாகி பின் கனிந்து, தித்திக்கும் கனியாகக் கிடைக்கிறது. சாதாரண நம் நாவின் சுவைக்கு வரும் கனிக்கே இவ்வளவு நடைமுறைகள் வேண்டுமானால், உள்ளச் சுவைக்கு காரணமான முக்தி எனும் அனுபவத்தைப் பெறுவதற்கு, இது போன்ற நடைமுறைகள் தேவையல்லவா? முக்திக் கனிக்கும், இத்தனை நடைமுறைகள் உள்ளன என்று திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருமானையும், திருவாசகத்தையும் போற்றுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

தித்திக்கும் கனி நமக்கு நேரடியாக கிடைப்பது போல் முக்திக்கனி கொடுத்தவர் மாணிக்கவாசகர் என்ற அந்த நால்வர் மணிமாலை பாடல் இதோ...

வலமமு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப உகந்தமா ணிக்க
வாசகன் எனுமொருமாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாவெனு மதகில் நடந்து கேட்போர்
செவியெனு மடையின் செவ்விதின் செல்லா
உளமெனு நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே'!

சிவபெருமானின் கருணை என்னும் கடலில் இருந்து, மாணிக்கவாசகன் எனும் மேகம், திருவாசகம் என்ற நீரைப் பொழிய, அது ஓதுகின்றவர் மனமென்னும் குளத்தில் புகுந்து, நாக்கு என்னும் மதகைக் கடந்து, கேட்போர் செவியெனும் மடையில் பாய்ந்து, அவர்கள் உள்ளம் என்னும் நிலத்தில் ஊன்றி, அங்கு வைத்திருக்கும் பக்தி எனும் வித்தில் பாய்ந்து, சிவமெனும் மென்முளை தோன்றி, கருணை மலர் பூக்க வைத்து முத்தி என்ற மெய்ப் பயனை தருகிறது என்று, அழகாக உவமை பாராட்டி பாடுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

'நமச்சிவாய வாழ்க' என நாளும் ஓதும் அடியவர்களுக்கு முக்திப் பேறு நல்கும் சிவபுராணம் தொடங்கி, **'முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயலும்'** நம்மைப் போன்ற எளியவர்களுக்கு **'பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள்'** நீங்குமாறு செய்யும் அச்சோப்பதிகம் வரை ஒவ்வொரு பாடலையும் உணர்ந்து பாடுங்கால், நம்மை சீர்படுத்தி சிவபுரம் (வீடுபேறு) சென்றடைய திருவாசகம் வழிவகுக்கும் என்பது திண்ணம்.

இந்த அற்புத் திருவாசகத்தை அடியவர்கள் நாளும் ஓதி நலம்பெற எல்லாம் வல்ல ஸ்ரீமங்களாம்பிகை உடனாய மார்க்கண்டேய சுவாமி திருவடிகளை வணங்கி இறைஞ்சுகின்றேன்.

எந்நேரமும் எங்களைக் காத்து, இயக்கிக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல பரம்பொருள் **தண்ணீர்மலை தண்டாயுதபாணிக்கு, அரோகரா!**



உ
சிவமயம்

தண்ணீர்மலையானுக்கு தரணி புகழ் குடமுழுக்கு

ஆக்கம் திருமதி. மீனாக்ஷி அண்ணாமலை, வேந்தன்பட்டி

செஞ்சுடர்போல் திருமேனி திகழ்கின்ற தேவனவன்
சந்திர வதனத்தான் தண்ணீர்மலை முருகன்
பினாங்கு வீதியிலே பெரியோர்கள் விருப்பத்தால்
தங்க முருகனுக்கு தலம் அமைத்தார் கோயில் வீட்டில்

கந்தர் சஷ்டியிலும் கார்த்திகைத் திருநாளிலும்
தைப்பூச நன்னாளிலும் தவறாமல் வழிபடுவர்
தேங்காய் உடைப்பதுவும் தேரோட்டம் நடத்துவதும்
பெருமையுடன் செய்திடுவார் பினாங்கு நகரத்தார்

தேரோடும் வீதியெல்லாம் சிதறுகாய் தான் உடைத்து
இள நீரால் தெருக்கழுவி இன்பமுடன் அழைத்திடுவார்
வெள்ளி ரதத்தில் வேல் முருகன் தான் வருவான்
சீனர்களும் வந்து திருவடியைத்தான் வணங்கி
காவடிகள் ஆடுவதும் கண்கொள்ளா காட்சியாகும்

பாற்குடமும் காவடியும் பச்சை மயில் வாகனமும்
பக்கமிரு மாதிருக்க பவனிவரும் பேரழகன்
தை பூசத் திருநாளில் திரு வீதி உலா வருவான்
கந்தன் அழகை காணாத கண்ணும் ஒரு கண்ணா என
கருத்தினிலே வந்து வந்து கலங்க வைக்கும் பேரழகன்

கார்த்திகைத் திருநாளில் கண் கவரும் வண்ணத்தில்
எண்ணெய் விளக்குகளை எண் திசையும் ஏற்றிடுவார்
சொக்கப்பனை கொளுத்தி சோதி மயமாக்கிடுவார்
மாவிளக்கு வைத்து மகிழ்வுடனே வழிபடுவார்

கூர் வடிவேல் கொண்டு குறை களைய வரு முருகன்
எல்லோர்க்கும் நலம் தந்து இன்பமுடன் வாழ வைப்பான்
கூடி மகிழ்கின்றார் குடமுழுக்கு நடத்துகின்றார்
நாமும் அதில் இணைந்து நல்லருளைப் பெற்றிடுவோம்



மனைவியர் இருவர் தத்துவங்களில் மயில்வாகனர்

டாக்டர் கும. சொ. இராமசாமி
அலோர்ஸ்டார்

விநாயகர் வணக்கம்

சிந்தை எல்லாம் நிறைந்த செல்வ பெருநிதியை
துன்பமெல்லாம் தீர்த்திடும் தண்ணீர்மலை விநாயகரை
சந்ததமும் காத்தருளும் கருணைப் பெருங்கடலை
சிறந்தாழ்த்தி கைகூப்பி ஏத்திடுவார்க் கில்லையிடர்.

இறைவன் திருமணங்கள் தெய்வத்தன்மை பொருந்தியது. அது நம்மைப் போன்றவர்கள், உயிரினங்கள் செய்யும் திருமணம் போன்றதல்ல. மனித சரீர சம்பந்தமில்லாமல் நடப்பவை.

முன் ஒரு காலத்தில் கைலாயத்தில் நிகழ்ந்தவற்றை நினைவு கூறுவோம். விஷ்ணுவுக்கும் லக்ஷ்மிக்கும் பிறந்த இருவர் அமிர்தவல்லி, சுந்தரவல்லி ஆவார்கள். இருவரும் முருகனை நோக்கி அவரை மணக்க (அடைய) தவம் இருந்தார்கள். அமிர்தவல்லி, "நீ சென்று தேவலோகத்தில் இந்திரன் மகளாகப் பிறந்து எமை அடைவாய்" என்றும், சுந்தரவல்லி நீ சென்று பூலோகத்தில் வேடர் குலத்தில் பிறந்து எமை அடைவாய் என்றும் அருளினார். தேவேந்திரன் இந்திரன் மகளாக பிறந்த அமுதவல்லி தெய்வானை என்ற பெயரில் ஐராவதம் என்ற யானையால் வளர்க்கப்பட்டு வந்தாள்.

சூரபத்மனின் அகங்காரத்தை, ஆணவத்தை வேல் கொண்டு அழித்து வெற்றி கொண்டு அவரை அழித்துவிடாமல் கருணை உள்ளத்துடன் சூரபத்மன் சேவலும் மயிலுமாய் நின்ற போது மயிலை தன் வாகனமாகவும் சேவலை சேவல் கொடியாகவும் ஏற்றுக் கொண்டார் முருகன், இது ஒரு பெரிய தத்துவம். இந்திரன் தன்னையும் தன் தேவர் குலத்தையும் காத்ததற்கும் நன்றிக் கடனாக முருகனுக்கு தேவானையை பரிசாக தந்தான்.

எல்லா தெய்வங்களும் ஆசீர்வதிக்க திருப்பரங்குன்றத்தில் திருமணம் நிகழ்ந்தது. தெய்வானை கிரியா சக்தி (செயலாற்றல்) முருகனின் இடது புறத்தில் அமர்ந்தாள், பரம் கொடுப்பவள். திருப்புகழில் "முத்தைத்தரு பத்தித் திருநகை அத்திக்கிரை சக்தி சரவண முக்திக்கொரு வித்துகுருபர எனவோதும்" என்ற பாடலில் அருணகிரிநாதருக்கு அடி எடுத்துக் கொடுத்த முருகன் தேவயானையின் சிறப்பைக் கூறுகிறார். வெண்முத்தை நிகர்த்த அழகான பல்வரிசையும் இளநகையும் அமைந்த அத்திக்கு தேவயானைக்கு இறைத் தலைவனே, சக்திவேல் ஆயுதத்தை ஏந்தும் சரவணனே, முக்தி மோட்ச வீட்டுக்கு ஒரு வித்து ஒப்பற்ற ஒரு விதையாக விளங்கும் குருபர எனவோதும் ஞானகுருவே என்று துதிக்கிறார்.

வள்ளிமலை சாரலிலே சிவ முனிவர் (திருமால்) யோகத்தில் அமர்ந்திருக்க, மான் வடிவில் வந்த மகாலெட்சுமியை நோக்கினார். திருமாலின் கண் வழியாக புகுந்த சுந்தரவல்லி மான் கருவை அடைந்தாள். மான் பெண் குழந்தையை ஈன்று வள்ளிக்கிழங்கு குழியில் போட்டது பிள்ளை வரம் வேண்டி தவம் இருந்த வேடர் தலைவன் நம்பிராஜன் குழந்தையை எடுத்து வள்ளி என்று பெயரிட்டு வளர்த்தான்.

கவிஞர் வாலி தனது 108 பாடல்கள் கொண்ட ஆறுமுக அந்தாதியில் சுவையாக கூறுகிறார்.

அம்மான் மகளும் மாமன் மகளும் அந்த மான் வயிற்றில் வந்த மகளும்
ஆன வள்ளியின் மணவாளனே என்று
"மாலன் மருமனாம் வள்ளிமணவாளனாம்
வேலன் வனப்பை விரித்தால் விசும்பாய் விரிந்திருக்கும்
காலன் ஒடுங்கிடக் காலால் உதைத்திட்ட கண்ணுதலான்
பாலன் பழனிப்பதி வாழ்வோன் பாதம் பணி நெஞ்சமே"!

வள்ளி நாச்சியாரைப் பார்க்க முருகன் வேடவனாக வருகிறார்.
"முருகன் காலில் கட்டிய கழனன் கச்சினன், மாலைத்தோளினன்
வரிவில் வாளியன் நீலக்குஞ்சியன் நெடியன் வேட்டுவக் கோலத்தைக் கொடு
குமரன் தோன்றினான்". (66 ஆவது பாடல்)
மொழி ஒன்று புகலாயாயின், முறுவலும் புரியாயாயின், மனமும் சற்றும்
உறுகாயாயின் விரக மிகக்கொள்வேன் பலியொன்று நின்பால் சூழும். பராமுகம் தவிர்த்தி என்றார்.

ஆண்கள் அணியும் மாலைக்குத் தார் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் இந்த மாலை தொழில் சுமந்தது என்றது அது பெண்களுக்கு உரியது. அதாவது வள்ளிக்குடையது மாலை அருளைக் கொடுக்கக்கூடிய சின்னம். மான் வந்ததா என்று பேச்சுக் கொடுக்கிறார் பேசவில்லை என்னைப் பார்த்து சிரிக்க கூடாதா என்கிறார் - சிரிக்கவில்லை நிமிர்ந்து என்னை நோக்கக் கூடாதா - நோக்கவில்லை இப்படி செய்யாவிட்டால் விரக தாகத்தால் என் உயிரை மாய்த்துக் கொள்வேன். பின்னால் நீ வருந்துவாய். இது காதல் பேச்சு போல் புறக்கதை. ஆனால் இல்லை இது ஜீவாத்மா வள்ளிக்கும் நமக்கும் பரமாத்மாவின் கருணையை குறிக்கிறது.

இவ்வளவு காலம் நீ வீணாய் கழித்து விட்டாய் ஆன்மீகத்தில் நுழையாது. இனிமேலாவது சிலா ரூபங்களாகிய விக்கிரங்களாக இருக்கிற என்னைப் பார்க்க மாட்டாயா பேச மாட்டாயா சிரிக்க மாட்டாயா உய்வதற்கு வழி ஒன்று காட்டு என்று கூறி மனதினால் உருக மாட்டாயா. இப்படியெல்லாம் செய்யாவிட்டால் உன் மேல் பழி வரும். பின்னால் செய்திருக்கலாமே என நீ வருந்துவாய். திடீரென்று நம்பிராஜன் வரவே வேடவரை வள்ளி போக சொல்லியும் போகாமல் வேங்கை மரமாக ஆனார் முருகன். அடிப்பாகமெல்லாம் வேத தத்துவங்கள் , நடுமரம் சிவ ஆகம தத்துவங்கள், கிளைகள் எல்லாம் 64 கலைகள். நம்பிராஜன் வந்த போது வேடவரை பிடித்துக் கொடுத்திருக்கலாம்.

ஆனால் ஆன்மீக பக்குவம் வந்து கொண்டிருக்கிற நேரம் என்பதால் அவள் அதைச் செய்யவில்லை. இந்த மரம் எனக்குத் தோன்றாத் துணையாக இருக்கிறது என்றாள். பின்னர் முருகன் கிழவேதியராக வருகிறார். தீர்த்த யாத்திரைக்கு வந்ததாகக் கூறகிறார். தீர்த்த யாத்திரை என்பது ஜீவாத்மா - பரமாத்மா உறவை பலப்படுத்துவது. அவரை வள்ளிக்குக் காவலாக இருக்க சொல்லுகிறார் நம்பிராஜன். இது ஆன்மா பக்குவப்பட குருவை அமைத்துக் கொடுப்பதற்கு நிகராகும். தாய், தந்தை, குரு, தெய்வம். குருவே தெய்வம் என்று சொன்னால் மிகை ஆகாது. இந்த தருணத்தில் அடியேனுடைய குருவும் அலோர்ஸ்டார் தண்ணீர்மலை பாதயாத்திரை குருவுமாகிய சத்குரு சரஹண பவானந்தரை நினைத்து முதற்கண் வணங்குகிறேன்.

இறைவனின் கருணையைக் குறிப்பது தீர்த்தம். வேதியர் பசிக்கு உணவளித்தாள், வள்ளி தாகம் என்றார் நீர் தந்து தாகம் தீர்த்தாள். பசி தீர்த்தாய், தாகம் தீர்த்தாய், மோகம் தீர்க்க மாட்டாயா என்று இருப்பது புறக்கதை. ஆனால் அதுவல்ல. சிலா ரூபங்களாக இருக்கிற எனக்கு நிவேதியம் செய்து வைத்தாய் நீர் கொண்டு பல அபிஷேகங்கள் செய்து வைத்தாய் உலகியல் வாழ்க்கையில்

ஆன்மீகத்தை அடைய தடையாக இருப்பது மோகம் (ஆசை) அவற்றை விட்டு விட்டால் முடிந்தது எல்லாம். இறைவனாகிய என்னுடன் மேலும் இணைந்து விடலாம் என்பதுதான் முக்கிய தத்துவம். அண்ணன் கணபதியை காதலுக்கு துணையாக வர வேண்ட யானையாக வருகிறார். கைத்தல நிறைகனி திருப்புகழ் பாடலில் “அத்துயரது கொடு சுப்பிரமணிபடும் அப்புன மதனிடை. இபமாகி அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கண மணமருள் பெருமாளே”.

யானையை வருவித்து அச்சப்படுத்தி தன் காதலில் வெற்றி பெறப் பார்ப்பது போல் இருக்கிறது புறக்கதை. ஆனால் அதுவல்ல உண்மை. தெய்வப் பற்றே இல்லாத ஒருவன், அதை அடைய பல அறிவுரைகள், ஞானங்கள் போதித்தும் கூட, சில நேரங்களில் பலன் இருக்காது. முருகன் வந்ததை அவள் அறியவில்லை. பயந்து முருகனிடம் ஓடி வந்த போது முருகனைக் கண்டு கொள்கிறாள்.

நீங்கள் தான் வந்தது என்று முன்கூட்டியே சொல்லி இருக்கலாமே. முருகனைப் பார்த்த சந்தோஷத்தை விட இவ்வளவு நேரம் கடந்து தானே உணர்ந்தோம் என்ற கவலை தான் அதிகமாக இருந்தது. இந்நிலை தான் பாதயாத்திரைக்கு வராத ஒருவர் வந்து சந்தோஷம் அடைவதைவிட இவ்வளவு காலம் வராமல் இருந்து விட்டோமே என்ற கவலை பெரிதாக இருக்கும்.

திருத்தணியில் முருகனுக்கு வலது புறமாக இருப்பது இச்சா சக்தியாகிய வள்ளி நாச்சியார், இடது புறத்தில் தெய்வானை அம்மையார். ஜீவாத்மாவை பரமாத்மா உடன் இணைக்க அருள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இரு மனைவியர் தத்துவங்கள் இரண்டு. முதல் தத்துவம் உச்சநிலை இந்திரப்பதவி தேவேந்திரன் மகள் தேவயானை. தாழ்ந்த நிலை வேடுவப் பகுதி. வேடவர் குலத்தில் வந்த ஸ்ரீவள்ளி இருவரையும் ஒருசேர ஏற்றுக் கொள்கிறார். இரண்டாவது தத்துவம் ஜீவாத்மா – பரமாத்மா ஐக்கியம். வேடிக்கையாக சிலர் பேசுவதை கேட்டிருக்கிறோம். முருகனே இரண்டு கல்யாணம் என்றால், நான் கூட பண்ணிக்கலாம் என்று சொல்வது போல, இது தவறு.

முருகன் இறைவனை அடைய இரு வழிகள். தங்கள் முயற்சியாலேயே இந்திரன் துணை கொண்டு இறைவனை தேடிச் சென்று அடைவது தெய்வானை கல்யாணம். வள்ளி நாச்சியாரை இறை பக்தியுடன் தேடி வந்து அணைத்துக் கொண்டது வள்ளி கல்யாணம். முருகனின் வலது புறத்தில் இருப்பது வள்ளி. ஜீவாத்மா பல ஆலயங்கள் சென்றும் யாத்திரைகள் செய்தும் பல தீர்த்தங்கள் ஆடியும் விரதங்கள் இருந்தும் காத்திருந்து தவமிருந்து இறைவனை அடைவது முதல் வகை. அப்படியெல்லாம் பெரிதாக ஒன்றும் செய்யாமல் இருக்க பரமாத்மா ஜீவாத்மாவை தேடி வந்து ஆட்கொள்வது இரண்டாவது வகை.

சில நேரங்களில் என்னை சின்ன உதாரணமாக நினைத்துக் கொள்வேன். முன்பெல்லாம் தண்ணீர்மலை கோயிலுக்கு பூசம் நேரங்களில் வருகின்ற போது சிந்தை எல்லாம் இறைவன் மேல் இல்லாமல் வேடிக்கை பார்ப்பதில் தான் இருந்தது. ஆனால் இறைவன் அடியேனுக்கு இந்த அலோர்ஸ்டார் தண்ணீர்மலை பாதயாத்திரை தந்து என்னை ஆட்கொண்டு இறைவன் குருவைத் தவிர சிந்தனைகள் இல்லாமல் நடத்தி வருகிறார்.

அருணகிரியாரின் கந்தர் அலங்கார பாடல் 6இல் “பெரும்பைப் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை விரும்பும் குமரனை மெய்யன்பினால் மெல்ல மெல்ல உள்ள அரும்பும் தனிப் பரமானந்தத்தைத் தித்தித்தறிந்தவன்றே கரும்பும் துவர்த்து செந்தேனும் புளித்தற கைத்ததுவே”.

புனம் என்பது உலகம், ஏனல் என்பது தினைக் கொல்லை – ஞானப்பயிர் விளையும் இடம். பேதை வள்ளி நாச்சியார் ஆன ஜீவாத்மா கொங்கை – ஜீவாத்மாவின் பக்குவம். ஆன்மாக்களுடைய பக்குவ காலத்தை விரும்பி வந்து இறைவன் அருள் புரிவான். கரும்புத்தேன் – உலக இன்பங்கள்

மெய்யன்பினால் மெல்ல மெல்ல முருகனை நினைத்து பரமானந்தம் உண்டாகும். அந்தப் பகுதி இனிமை அறிந்தபின் உலக இன்பங்கள் துவர்த்து புளித்து கசந்து விடும்.

முருகன் துதி

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க – செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

நன்றி.



முருகப் பெருமானின் ஆறு பெரும் பக்தர்களின் தொண்டுகள்

அபிராமி
பாயான்பாரு, பினாங்கு.

பிரணவத்தின் பொருளாகவே தோன்றிய முருகப் பெருமானைப் போற்றி வணங்கிய பேரருளாளர்கள் காலம்தோறும் தோன்றி கந்தப்பெருமானின் புகழைப் பரப்பி வந்திருக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் செங்கல்வராய பிள்ளை; பாம்பன் குருதாச சுவாமிகள்; ஸ்ரீ வள்ளிமலைதிருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள்; திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் மற்றும் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர் - திருப்புகழை இயற்றியவர்

அருணகிரிநாதர், தெற்கிந்திய மாநிலமான தமிழ் நாட்டில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, முருகக் கடவுள் மீது பாடல்கள் எழுதி புகழ் பெற்ற அருளாளர். இவர் திருவண்ணாமலையில் பிறந்தார்.

அருணகிரிநாதர் எப்போதும் பெண்களுடன் பழகுபவர், அதனால், அவர் நோய் மற்றும் வறுமையால் பீடிக்கப்பட்டார். குற்ற உணர்வு மற்றும் அவமானம் காரணமாக அருணாச்சல கோவில் கோபுரத்தில் இருந்து குதித்து தனது துயர வாழ்க்கையை முடிக்க முடிவு செய்தார். அப்போது முருகப்பெருமான் அவர் முன் தோன்றி, இவரைக் காப்பாற்றியது மட்டுமின்றி, திருப்புகழ் பாடல்களைப் படைக்க, முதல் வரியாக "முத்தைதரு பத்தித் திருநகை" என்ற வரிகளை தானே அருளினார்.

அருணகிரிநாதர் தமிழ் மொழி, வட மொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்றவர். இவர் ஆயிரக்கணக்கான பல்வேறு இசைச் சந்தங்களில் பாடினார். கருத்தாழமும், சொல்லழகும், இசைத்தாளச் செறிவும் நிறைந்தது இவர் பாடல்கள். இவர் எழுதிய திருப்புகழில் 1307 இசைப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் 1088க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன என்று கணித்திருக்கிறார்கள்.

இவருடைய நூல்களை தேவாரம், திருவாசகம் போல் மந்திர நூலாகவும், நாள்தோறும் இறைவனைப் போற்றிப்பாடும் நூலாகவும் பக்தி வழி பின்பற்றுவோர் கொள்ளுகின்றனர். தமிழ் கடவுள் முருகப் பெருமானின் அருளை முழுமையாகப் பெற்ற அருணகிரிநாதரின் அருந்தமிழை அறிந்து, உணர்ந்து, தோய்ந்து நாமும் முருகன் அருளைப் பெறலாம்.



அருணகிரிநாதர்

செங்கல்வராய பிள்ளை- திருப்புகழை மீட்டவர்

திருப்புகழைத் தேடி தொகுத்து பதிப்பித்த சிவஞானச் செல்வர், வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளையின் இளைய மகன் வ.ச. செங்கல்வராய பிள்ளை, தமிழறிஞர்; நுட்பமான ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டவர், சிவபக்தர். அருணகிரிநாதரின் திருப்புகழைத் தேடி எடுத்து பதிப்பித்தவர், துதிப்பாடல்கள் அதிகமாக எழுதியிருக்கிறார். 'திருத்தணிகை பிள்ளைத் தமிழ்', 'தணிகை மூப்பூ' இரண்டும் திருத்தணிகை முருகனைப் பற்றியவை.

'அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்', 'முருகரும் தமிழும்', 'திருமந்திர ஆராய்ச்சியும் ஒப்புமைப் பகுதியும்', 'திருக்கோவையார் உரைநடை' ஆகிய நான்கு நூல்களும் செங்கல்வராய பிள்ளையின் திறனாய்வுப் புத்தகங்கள். கடைசி வரை படித்துக் கொண்டும், எழுதிக் கொண்டும்தான் தமிழ் வளர்த்திருக்கிறார் இந்தத் தமிழறிஞர் வ.சு. செங்கல்வராய பிள்ளை.



செங்கல்வராய பிள்ளை

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (1849-1929) - புகழ்பெற்ற முருக பக்தர்

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் தமிழ்நாட்டில் இராமேசுவரம் என்ற ஊரில் பிறந்து வடமொழி, தமிழ்மொழி இரண்டிலும் புலமை பெற்று, ஆறுமுகனை வழிபட்டு வந்த ஒரு தமிழ்த்துறவி ஆவார். திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் வழியில் சித்திரக்கவிகள் எழுதியுள்ளார். தனது வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும், சைவ நெறியாகிய குகப்ரம்ம நெறிக்கும், தம் பாடல்களாலும், சாத்திரங்களாலும் தொண்டாற்றினார்.


முருகனின் வழிபாடாக இவர் இயற்றிய பாடல்கள் 6666. இவை ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய சண்முக கவசம் புகழ்பெற்றது.

சிறுவயதில் கந்தர் சஷ்டி கவசம் இவரை மிகவும் ஈர்த்த நூலாகும். இதுவே இவர் பின்னாளில் சண்முக கவசம் இயற்ற தூண்டுதலாக இருந்தது. 1923ஆம் ஆண்டு சென்னை, தம்பு செட்டி வீதியில் சென்று கொண்டிருந்த போது, குதிரை வண்டிச் சக்கரம் இடது கணைக்கால் மீது ஏறியதால் கால் எலும்பு முறிந்து, சுவாமிகள் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து நடந்த போது பாம்பன் சுவாமிகளின் வயது 73, ஆங்கிலேய மருத்துவர்களால் குணமடைவது கடினம் என்று கூறி கைவிடப்பட்டார். அங்கு தொடர்ந்து சண்முகக் கவசம்

பாடிவந்தமையால் மயில் வாகனத்தில் வந்த முருகன் அருளால் கால் எலும்பு ஒன்று சேர்ந்தது. அந்த நாள் 'மயூர சேவன விழா' என ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. சென்னை மருத்துவமனையில் 'மன்ரோ வார்டில்' பாம்பன் சுவாமிகளின் திருவுருவப் படம் மாட்டப்பட்டு நோயாளிகளால் வழிபடப்படுகிறது.

அனைத்து முக்கிய புண்ணிய தீர்த்தங்களுக்கும் நடந்து சென்று முருக பக்தியைப் பரப்பிய பெருமை பாம்பன் குமரகுருதாச சுவாமிகளைச் சேரும்.



பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்

ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் (1870-1950) - திருப்புகழைப் பரப்பியவர்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்த இந்த சிறுவன் மைசூரில் சமையல் வேலை செய்து வந்தார். தீராத வயிற்றுவலியால் பழனிக்கு வந்தார். சில காலத்திற்குப் பிறகு, அவர் இந்த நோயிலிருந்து அதிசயமாக குணமடைந்தார், அதன் பிறகு அவர் அங்கேயே தங்கி முருகனை வழிபட்டார்.

ஸ்ரீ வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் பழநியாண்டவன் சந்தியில் திருப்புகழைக் கேட்டு பராசக்தியின் அருளால் ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகளின் மூலமாகத் திருப்புகழையே மகாமந்திரமாக ஏற்று, தவநிலை மேற்கொண்டு அரிய சக்திகளைப் பெற்று அருணகிரியாரின் திருப்புகழைப் பரப்பி தெய்வ நம்பிக்கையும் முருக பக்தியும் தழைக்கச் செய்யும் அருட்பணியை மேற்கொண்டிருந்தார்.

பழனியில் இருந்த சுவாமிகளை முருகப் பெருமானே திருவண்ணாமலைக்குப் போகச் சொன்னாராம். அருணகிரிநாதர் அவதரித்த அந்த இடத்தில் சுவாமிகளுக்கு இரமண முனிவருடன் தொடர்பு ஏற்படும் எனவும், அப்பொழுது தானும் அங்கு வந்து அவருக்கு தரிசனம் தருவதாகவும் கூறி இருந்தாராம். இரமண முனிவரின் உருவில் தண்டாயுதபாணி பெருமான் அவதரித்து இருந்ததை சுவாமிகள் கண்டார். அந்த இடத்தில் சுவாமிகள் திருப்புகழின் அனைத்துக் காண்டங்ளையும் கற்று அறிந்தார். கடவுளின் அருளினால் அதை முழுமையாக பாடக் கூடிய அளவில் தேர்ச்சி பெற்றார். 1928ஆம் ஆண்டில் திரிலோக மந்திரவாதி என்பவன் வள்ளி மலை சுவாமிகள் மீது ஏதோ சூனிய மந்திரம் வைத்து விட அவரால் பேச முடியாமல் போயிற்று. முருகனின் அருளினால் அவருக்கு வேல் வகுப்பு மனதில் பதிந்து இருந்ததினால்

அந்த 64 வரிகளையும் வேறு வகையில் 16 வரிகளாக மாற்றி உச்சரிக்க மந்திரவாதியின் மந்திரம் எடுபடாமல் போயிற்று.


மந்திரவாதியின் உடல் முழுவதும் நெருப்பு சுடுவது போல உணரத் துவங்க, அவன் சுவாமிகளிடம் ஓடி வந்து தான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டு இனி அப்படிப்பட்ட தவறை செய்ய மாட்டேன் என உறுதி தந்தான். அதன் மூலம் வேல் மாறலின் மகத்துவம் பற்றி புரிய வந்தது. இன்றும் கூட பலரும் வேல் மாறலை உச்சரித்தவண்ணம் பெரும் பயன் அடைகிறார்கள். பெரிய கல்வியாளர்களும், சமய நிறுவனங்களும் மட்டும் சாதித்ததை, கோவணத்துணியுடன் குகையில் வாழ்ந்த இந்த சுவாமி செய்தார்.



ஸ்ரீ வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் - யோகிகளில் சிறந்தவர்

இவர் தமிழ் நாடு, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டம் என்னும் ஊரில் சைவ வெள்ளாளர் குலத்திலே சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாம சுந்தரிக்கும் மகனாகப் பிறந்தார். ஐந்து வயது வரை பேசும் திறன் அற்று இருந்தார். பின்பு இவரின் பெற்றோர் திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்று வழிபடப் பேசும் திறன் வாய்க்கப் பெற்றார். அந்த வயதிலேயே கந்தர் கலி வெண்பா என்னும் பாடலைத் திருச்செந்தூர் முருகக் கடவுளைப் போற்றி பாடியுள்ளார். பின்னர் தருமபுரம் ஆதீனத்தில், மாசிலாமணி தேசிகர் என்பவரிடம் சீடராக இருந்தார். அங்கு சைவ சித்தாந்தம் பயின்றார்.



ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

திருச்செந்தூரில் அவர் இருந்தபோது, தன் குருவைக் காணும்போது தன்னால் சரியாகப் பேச இயலாத நிலை ஏற்படும் என்கிற அசரீரி ஒலியினைக் கேட்டார். அதனால் குருவைக்காணும் நோக்கத்தில் மதுரை நகருக்கு வந்தார். அச்சமயத்தில் மதுரையைத் திருமலை நாயக்கர் ஆண்டு வந்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க மதுரை மீனாட்சி அம்மனைப் போற்றி 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' என்னும் நூலை இயற்றினார்.

குமரகுருபரரை தேடி வந்தார் குரு மாசிலாமணி தேசிகர். குருவின் ஆணைப்படி, காசிக்குச் சென்று சைவ சமயத்தைப் பரப்பினார். அங்குள்ள கேதாரேஸ்வரர் கோவிலைப் புதுப்பித்தார். மேலும், காசியில் மடத்தை நிறுவி இறக்கும்வரை அங்கு தங்கியிருந்தார். இதன் கிளையொன்றைத் திருப்பனந்தாளிலும் நிறுவினார்.


திருமுருக கிருபானந்த வாரியார் - சிறந்த சொற்பொழிவாளர்

தமிழ் இலக்கியம் மற்றும் இந்து சமய ஆன்மிகச் சொற்பொழிவில் தனக்கென தனிப் பெயரை ஏற்படுத்திக் கொண்ட மிகச் சிறந்த சொற்பொழிவாளர் கிருபானந்த வாரியார். 1906 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதியில் பிறந்தவர் கிருபானந்த வாரியார். இவருக்கு, இசையாலும், புராணச் சொற்பொழிவாலும் இறைவன் புகழ்பாடி வந்த இவர் தந்தை மல்லையதாசர், முருகப் பெருமானின் பல நாமங்களில் ஒன்றான 'கிருபானந்த வாரி' பெயரைச் சூட்டினார்.

'கிருபை' என்றால் கருணை என்றும் 'ஆனந்தம்' என்றால் இன்பம் என்றும் 'வாரி' என்றால் பெருங்கடல் என்றும் பொருள். இவர் பெயருக்கேற்ப கருணையே உருவாக, பிறரை தன் சொற்பொழிவால் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் பெருங்கடலாகத் திகழ்ந்தார்.

எட்டு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்ற இவர் தேவாரம், திருப்புகழ், திருவருட்பா, கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான நூல்களில் பத்தாயிரம் பாடலுக்கு மேல் மனப்பாடம் செய்து விட்டார். கற்றறிந்த புலவருக்கே கடினமாக இருக்கும் அஷ்டநாக பந்தம் மயில், வேல், சிவலிங்கம், இரதம் முதலான பந்தங்கள், சித்திரக் கவிகள் முதலியவைகளை இயற்றினார். சிறுபிள்ளைகள் கூட இவருடைய சொற்பொழிவு என்றால் கேட்க விரும்புவார்கள். அவ்வளவு எளிமையாக இருக்கும். சொற்பொழிவில் அதிகமான நகைச்சுவைகள் அர்த்தத்துடன் இருக்கும். இவருடைய சொற்பொழிவுகளுக்கிடையே குட்டிக் கதைகள் வரும். நகைச்சுவையையும், நடைமுறைச் செய்திகளையும், நயம் படச் சொல்வதும் வாரியாருக்குடைய சிறப்பியல்புகளாகும்.

இவர் திருப்பணி செய்ய உதவிபுரிந்த கோயில்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காது. வயலூர் முருகன் கோவில், மோகனூர் அருணகிரி அறச்சாலை, வடலூர், காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயச் சுற்றுச்சுவர், சமயபுரம் கோயில், வள்ளிமலை சரவணப் பொய்கை, இராஜகோபுரம் போன்ற பல கோயில்கள் இவரது திருப்பணிகளைப் பெற்றிருக்கின்றன. இந்தப் பதிவை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி. பினாங்கு தண்ணீர்மலையானின் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்.



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்



சண்முக கவசத்தின் சிறப்புகள்

ஆக்கம் சி.ராம.பழனியப்பன்
பினாங்கு (தேவகோட்டை)

முத்தமிழ்க் கடவுள் முத்தையனுக்கு எத்தனை எத்தனை பாடல்கள். அத்தனையும் சத்தானவை. முத்தான அப்பாடல்களில் அடியேன் அறிந்தவரை முருக பக்தர்களைக் கவர்ந்து முன்னிற்பவை

1. கந்த சஷ்டி கவசம்
2. கந்தர் அனுபூதி
3. கந்தர் கலி வெண்பா
4. திருப்புகழ்
5. திருமுருகாற்றுப்படை
6. சண்முக கவசம்
7. ஸ்கந்த குரு கவசம்

முருகன் புகழ் பாடல்கள் இன்னும் எண்ணிலடங்கா. ஒவ்வொன்றும் பல்வேறு பலன்களை பக்தர்களுக்கு அருளும் பொக்கிஷங்கள். தண்ணீர் மலையானின் குட முழுக்கு மலருக்கு கட்டுரை சமர்ப்பிக்க அழைப்பு வந்ததும், என் மனதில் சண்முக கவசமே மீண்டும் மீண்டும் தோன்றியது. அதில் அப்படி என்ன உள்ளது? பார்ப்போம் வாருங்கள். பாம்பன் சுவாமிகள் என்று அழைக்கப்பெறும் குமரகுருதாச சுவாமிகள் இராமேஸ்வரத்தை சேர்ந்தவர். இவரால் அனுபவ பூர்வமாக இயற்றப்பட்டது சண்முகக் கவசம்.

முதலில் என் 'முருகனை அழைத்துக்கொண்டு வா' எனச் சொல்லி 'பகை கடிதல்' மூலம் மயிலிடம் வேண்டி பாடுகிறார். (10 பாடல்கள்) அடுத்து 'குமாரஸ்தவம்' முருகனைப் போற்றி பாடுகிறார் (44 போற்றி). பின் சண்முக கவசம் அகர வரிசையில் முப்பது பாடல்களை பாடி, முருகனிடம் ஒன்றி வேண்டி பலன் பெறுகிறார். முப்பது செய்யுள்களைக் கொண்ட இக்கவசம் ஒவ்வொரு பாடலிலும் முதல் எழுத்தாக உயிர் எழுத்து மற்றும் மெய்யெழுத்துக்களைக் கொண்டுள்ளது (உயிர் எழுத்து 12 மற்றும் மெய்யெழுத்து 18) தமிழ் மொழியில் 'அ' என்ற உயிரெழுத்து முதல் எழுத்தாக விளங்குவதால், முதல் பாடல் அண்டமாய் எனத் துவங்குகிறது.

எண்சாண் உடம்பில் சிரசே பிரதானம் என்பதால் "சரவணத்தான் என் சிரசைக் காக்க" என்று பாடியுள்ளார். அடுத்து வரும் எட்டு பாடல்களிலும் உடல் உறுப்புகளைக் காக்க வேண்டி பாடுகிறார். பின்னர் மூன்று பாடல்களில் பேய், பூதம், சூனியம், மந்திரம், தந்திரம், ஆயுதங்கள், பகைவர்கள், அரக்கர்களிடமிருந்து காக்க வேண்டுகிறார். சண்முக கவசத்தின் சிறப்பானது என்னவென்றால், காட்டில் திரியும் சிங்கம்புலி போன்றவை, வீட்டில் திரியும் தேள், பல்லி, பூரான், வண்டு போன்றவை மட்டுமல்லாமல் தண்ணீரில் வாழும் மீன் வகை, திருக்கை வகை போன்றவற்றால் ஏற்படும் துன்பங்களும் நீங்க பாடுகிறார் (மூன்று பாடல்கள்).

அடுத்த ஐந்து பாடல்களிலும் எல்லா விதமான நோய்களிலிருந்தும் காக்க வேண்டுகிறார். எமனிடமிருந்தும், வேல் காக்க வேண்டுமென வேண்டுகிறார். நிலம், மரம், மலை, நெருப்பு, கடல், நதிகள், குளம் போன்ற நீர் நிலைகளிலும், நிலம், நீர், வானம் போன்றவற்றில் பிரயாணம் செய்யும் பொழுதும் விபத்துகள் நேராமல் காக்க வேண்டுகிறார்.

இயற்கை சீற்றம் எத்திசையில் இருந்து வந்தாலும் அறுகோண சக்கரமுடைய ஆறுமுகன் வேல்காக்க வேண்டுகிறார். நடக்கும் பொழுதும், அமரும் பொழுதும், பேசும் பொழுதும், படுத்திருக்கும் பொழுதும், தூங்கும் பொழுதும், உணவு உண்ணும் பொழுதும், கலவியல் போதும் நெஞ்சு அடைப்பு வராமல், வேலும் மயிலும் காக்க வேண்டி பாடுகிறார்.

வாழ்க்கையின் எல்லா பருவங்களிலிலும், எல்லா திக்குகளிலும், காலை, மாலை, நடுநிசி எல்லாப் போழ்திலும் இடைவிடாது காக்க வேண்டுமென வேண்டுகிறார். இறுதியாக முருகனை செட்டி என அழைத்து, தன்னை தாசன் எனக் கூறி, தனியாக இருந்தாலும், தொண்டர்கள், கூட்டம் இதில் எங்கிருந்தாலும் சரவண பவனார் காக்க வேண்டுமெனக் கூறி முடித்துள்ளார்.

ஓம் சரவண பவ' 'ஓம் முருகா' !



கவின்மிகு கந்த சஷ்டி விழா

ராம. நா. நா. தேனப்பன்
பினாங்கு

பினாங்கு தண்ணீர்மலை என்றவுடன் அனைவரின் நினைவிற்கும் வருவது சீரோடும் சிறப்போடும் கோலாகலமாக மூன்று நாட்கள் நடைபெறும் தைப்பூசம். அது தவிர்த்து மற்றுமொரு விழா ஆண்டுதோறும் பக்திபூர்வமாக விமரிசையாக நடைபெறுகின்றது. பினாங்கு நாட்டுக்கோட்டை செட்டியார் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில்.... கந்த சஷ்டி விழாதான் அது.

கந்த சஷ்டி

கந்த சஷ்டி என்பது **முருகக் கடவுள் சூரனை** அழித்த பெருமையை சைவசமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழா, சஷ்டி என்றால் ஆறு என்று பொருள்படும். சஷ்டி விரதம் ஐப்பசி மாதம் தீபாவளிக்குப்பின் வளர்பிறை பிரதமை முதல் ஆரம்பித்து, ஆறாம் நாளான சஷ்டி திதி வரையான ஆறு தினங்களும் நோற்கப்படும் முருகப்பெருமானுடைய சிறப்பான விரதமாகும். காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம், தற்பெருமை என்கின்ற ஆறு வகை தீய குணங்களை ஒரு நாளைக்கு ஒன்றாக வெல்லப் பழகுவதே சஷ்டி நோன்பு நோற்பதன் குறிக்கோள்.

முருகன் சூரனை ஆட்கொண்டு பெருவாழ்வு தந்தருள்கிறார்

சூரசம்ஹாரத்தின் முடிவில் முருகன் **மா** மரமாக நின்ற சூரனை தன் சக்தியாகிய **வேலினால்** பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாற சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக் கொண்டார் என்பது கந்தபுராணத்தில் ஒரு நிகழ்வு.

கந்தபுராணத்தில் வரும் **சூரபத்மன், சிங்கமுகன், தாராசூரன்** ஆகியோர் முறையே ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. அந்த அசுர சக்திகளையெல்லாம் அழித்து ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபிடியில் இருந்து விடுதலை அளிப்பதோடு ஆணவமலத்தின் பலத்தைக் குறைத்து அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூரசம்ஹாரம்.

கந்த சஷ்டி கவசம்

கடவுளிடம் பக்தி செலுத்துவதற்கு பல வழிகளை நமக்கு முன்னோர்கள் காட்டி இருக்கிறார்கள். இறைவனை நினைத்தல், அவரைப் பற்றிக் கேட்டல், அவர் நாமத்தை சொல்லல் என்னும் மூன்றும் நாம் செய்யக் கூடியவை. இம்மூன்றிலும் மிக எளிதானது இறைவன் நாமத்தைச் சொல்வதும் அவர் புகழ்பாடுவதும் தான்.

முருகனுக்குரிய விரதங்கள் மூன்று. அவை வெள்ளிக்கிழமை (வாரம்) விரதம், கார்த்திகை (நட்சத்திரம்) விரதம், கந்த சஷ்டி (திதி) விரதம், வடிவேலனை வழிபடும் விரதங்களில் மிகவும் சிறந்தது இந்த கந்த சஷ்டி விரதமாகும். தமிழ் நாட்டின் தனிப் பெருங்கடவுள் முருகன். முருகனைப் பற்றி பாராயணம் செய்வதற்கு பல நூல்கள் உண்டு. அவற்றில் சிறந்த மூன்று திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்த சஷ்டி கவசம் இவற்றில் திருமுருகாற்றுப்படை

இலக்கிய நயம் உடையது. எளிதில் பொருள் விளங்காதது. கந்தர் கலி வெண்பா சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பியது. புரிந்து கொள்ள சாஸ்திரம் கற்ற ஒருவரை நாட வேண்டிவரும். அனைவராலும் நன்றாகப் பொருள் தெரிந்து எளிதில் பாராயணம் பண்ணுவதற்கு உரிய நூல் கந்த சஷ்டி கவசம் ஒன்றுதான்..

காக்க என இறைவனை வேண்டிக்கொள்ளும் பாடல்களைக் கவசம் என்பர். கந்த சஷ்டி கவசம் என்பது தேவராய சுவாமிகளால் முருகப் பெருமான் மீது இயற்றப்பட்ட பாடலாகும். ஆறுபடை வீடுகளுக்கும் தனித்தனியே கந்த சஷ்டி கவச பாடலை பாடியுள்ளார். அவற்றுள், திருச்செந்தூர் சஷ்டி கவசமே மிகவும் பிரபலம். இந்த பாடல் மொத்தம் 244 வரிகளைக் கொண்டுள்ளது. இது திருமுருகனின் தெய்வீகத் தமிழ்ப்பாடல் அனைவரையும் பரவசப்படுத்தி மனநிம்மதி தரும் மந்திர மறை நூல்.

பக்தர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, விளக்கேற்றி, பூசை வழிபாடு செய்து, பகற்பொழுதில் உண்ணாநோன்பு விரதம் மேற்கொள்வர். இரவில் பால், பழம் மட்டும் அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர். உண்ணாவிரதத்தின் போது மற்ற எண்ணங்களிலிருந்து விலகி, ஆன்மீக சிந்தனையுடன் மட்டுமே மனதைத் தூய்மைப்படுத்தி, முருகனின் சிந்தனையிலேயே விரதம் இருப்பது உணவைத் தவிர்ப்பதை விட முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பக்தி சிரத்தையுடன் முருகனை நினைந்துருகி வழிபட்டு, தியானத்திலும், பஜனை செய்வதிலும், கந்தரனுபூதி, கந்தசஷ்டி கவசம், கந்தலங்காரம் ஓதுவதிலும், கந்தபுராணம் கேட்பதிலும் தம்மை ஈடுபடுத்தி முருகனருள் வேண்டி நிற்பர். ஆறாம் நாள் சூரசம்ஹாரம் அன்று விரதம் நிறைவடைந்த நிலையில் கோவிலில் வழங்கப்படும் பால், பழம், வாழைத்தண்டு, மதுவர்க்கம் ஆகியவற்றை உண்டு விரதத்தை பூர்த்தி செய்வர். மறுநாள் திருக்கல்யாணம்.

பினாங்கு நாட்டுக்கோட்டை செட்டியார் ஸ்ரீ தண்ணீர்மலை தண்டாயுதபாணி கோவில் கந்த சஷ்டி விழா, பிரசித்தி பெற்ற திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கந்தசஷ்டி விழா ஆரம்பிக்கும் நாளன்று துவங்கும். அங்கு முடிவுறும் நாளன்று பூர்த்தியடையும்.

ஆரம்ப தினத்தன்று தண்ணீர்மலை முனீஸ்வரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனை செய்து பின்னர் தண்ணீர்மலை தண்டாயுதபாணிக்கு சங்காபிஷேகம் செய்து சஷ்டி விழாவை ஆரம்பிப்பார்கள். ஆறு நாட்களிலும் சங்காபிஷேகம் நடைபெறும். தினந்தோறும் காலை, உச்சிக்காலம், மாலை தீபாராதனைக்குப்பிறகு கந்தபுராணம் படிக்கப்படும்.

மூலவர் முதல் நாள் மாலை பூஜையில் **பாலசுப்பிரமணியனாக** வந்து அருள்புரிவார். மறு நாள் **சிங்காரவேலனாக** காட்சிதந்து சிந்தை கவர்வார். மூன்றாவது நாள் **தந்தைக்கு உபதேசம்** செய்து தகப்பன்சுவாமி ஆவார். **வேடனாக** மாறி பக்தர்கள் வேதனை தீர்ப்பார் நான்காவது நாளில். அதற்கடுத்த நாள் **விருத்தன்** கோலத்தில் வினை நீக்குவார். ஆறாவது நாள் போர்சினம் தணிந்து, குளிர்நிலவு முகம்காட்டி சேவல் கொடியுடன் **வெள்ளி அங்கி**யணிந்து புன்னகை பூத்து நிற்பார். தவக்கோலம் போக்கி, தரணியில் இல்லறத்தின் மாட்சியையும் மகிமையையும் இனிதே தன் பக்தர்களுக்கு உணர்த்த மணவறையில் வலப்புறம் வள்ளி, இடப்புறம் தெய்வானை இருவருடன் மாப்பிள்ளையாக **திருக்கல்யாணக் கோலம்** காட்டி ஏழாவது நாள் சஷ்டி விழாவை இனிதே பூர்த்தி செய்வார்.

ஏழாவது நாள் காலையில் கந்தபுராணம் படித்து முடித்து தீபாராதனை பார்த்து கந்தபுராணம் படித்தவருக்கு பரிவட்டம் கட்டி கந்த புராண புத்தகத்தை மங்கல வாத்தியம் முழங்க பக்தர்கள் உடன்வர கோவில் வெளிப் பிரகாரம், உட்பிரகாரம் வந்து தண்ணீர்மலையான் பாதத்தில் சமர்ப்பிப்பார்கள். அதன்பிறகு சுவையான திருக்கல்யாண சாப்பாடு பரிமாறப்படும்.

இறைவனை அணுகிப் பிரார்த்துக்கும்பொழுது உலகமெலாம் உய்ய வேண்டும் என்று வேண்டுபவர்கள் வெகு சிலரே. எனக்கு செல்வத்தைக் கொடு, நோய் நொடியில்லா நீண்ட ஆயுளைக்கொடு என்று கோரிக்கை வைப்பவர்கள்தான் அதிகம்.

அடியேன் வதனம் அழகுவேல் காக்க எனத்துவங்கி தலை முதல் பாதம் வரை உள்ள அங்கம் ஒவ்வொன்றையும் காக்கும்படி வேலனிடம் பிரார்த்திப்பது கவசத்தின் சிறப்பு. எல்லாவற்றிற்குமே அவரது துணை நாடி நின்றாலும்

"எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்".

என்று விண்ணப்பித்துக் கொண்டு அறுபடை வீடுறை அழகனை முழுமனதோடு நம்புவோம், வாழ்வு வளமாகும்.


ஏழு நாட்களிலும் தண்டாயுதபாணி எழில் தோற்றம் தரும் காட்சிகள் மனதை விட்டு அகலா முருகனை எண்ணி, ஏங்கி, வணங்கி வருவோர்க்கெல்லாம் வாழ்க்கையில் வளம் பல தந்து அருட்காட்சி தரும் அலங்கார சோடனைகள். நேர்த்தி என்ன நேர்த்தி தண்ணீர்மலை தண்டாயுதபாணி அழகு வண்ண மூர்த்தி, கந்த சஷ்டியின்போது கண் குளிரப் பார்க்கலாம் கந்தரலங்காரம்.




ஸ்ரீ முனீஸ்வரர்



விநாயகர்



கந்த புராணம்



பாலசுப்பிரமணியன்



சிங்காரவேலன்



தந்தைக்குபதேசம்



வேடன்



விருத்தன்



சஷ்டி வெள்ளி அங்கி



திருக்கல்யாணம்
தென்றல் வந்து வீசும் தண்ணீர்மலைக் கோவில் தண்டாயுதபாணி
தாள் பணியுங்கள்! காலமறிந்து கருணை புரிவார்!



திருப்புகழில் மகாபாரதக் காட்சிகள்

ஆக்கம் சிவத்திரு நா. சுப்பிரமணியன்
உலகம்பட்டி

திருப்புகழ் என்பது அருணகிரி நாதர், முருகன் மேல் பாடிய பாடல்களைக் கொண்ட நூல் என்பது நாம் அனைவரும் அறிந்ததே . இவர் பாடிய திருப்புகழ் பாடல்கள் பதினாறாயிரத்துக்கும் மேல் இருக்கும் என்பது அறிஞர்கள் கருத்து. ஆனால் தற்போது அச்சிடப்பட்டுள்ளவை மொத்தம் 1311 பாடல்கள் மட்டும்தான். திருப்புகழ் மட்டுமல்லாமல், இவர், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் என பல நூல்களையும் அருளியிருக்கிறார். எல்லாமே ஒப்புவமை இல்லாத சந்தப் பாக்கள்.

எல்லாமே முருகன் புகழ் பாடுவதை மையமாகக் கொண்ட நூல்கள்தான் என்றாலும், எல்லாப் பாடல்களிலுமே, சிவனைப் பாடி, உமையம்மையைப் பாடி இவர்கள் அருளிய குமரனே என்றும் கணபதியைப் பாடி அவருக்கு இளையோனே என்றும், வள்ளி தெய்வானையைப் பாடி அவர்களது மணவாளா என்றும் திருமாலைப் பாடி அவரது மருகோனே என்றும் பலவிதங்களில் முருகனைப் போற்றிப் பாடியிருக்கிறார். திருமால் புகழைப் பாடும்போது அவரது பல அவதாரங்களையும், இராமாயணக் காட்சிகளையும், மகாபாரதக் காட்சிகளையும் தமது சந்தக் கவியால் சித்தரித்து, நம் முன் நிறுத்தியிருக்கிறார்.

மகாபாரதம் என்பது பாரத தேசத்தின் மிக உயர்ந்த இதிகாசம். வேதங்களுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மிகப் புனிதமான நூலாக இது மதிக்கப்படுகிறது. இந்து மதத்தின் மற்றொரு முக்கிய நூலாகக் கருதப்படும் பகவத் கீதை இந்த இந்திகாசத்தின் ஒரு பகுதிதான்.

மிகப் பழமையான காலத்தில் இந்தியாவின் ஒரு பகுதியின் அரசகுலத்தைச் சேர்ந்த பாண்டு மற்றும் திருதராஷ்டிரன் என்னும் இரு சகோதரர்களின் பிள்ளைகளுக்கிடையே நடந்த பூசல்களையும் அதன் விளைவாக நடந்த மகாபாரதப் போரையும் மையமாக வைத்து உருவானதே இந்த மகாபாரதம் என்னும் இதிகாசம்.

பாண்டுவின் மகன்கள் தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவர். இவர்கள் பஞ்ச பாண்டவர்கள் எனப்படுவர். அறத்தின் வழி நடப்பவர்கள் திருமாலாகிய, மாமாயன் கண்ணன் இவர்களுடைய தாய் மாமா. இவர்களின் பெரியப்பா, திருதராஷ்டிரரின் மகன்கள் நூறுபேர். மூத்தவன் துரியோதனன். இவர்கள் துரியோதனாதியர் எனப்படுவர். எல்லாருமே கொடியவர்கள், சதிகாரர்கள்.

மகாபாரத்தை எழுதியவர்

மகாபாரத்தை வியாசர் முனிவர் சொல்ல, விநாயகப் பெருமான் எழுதினார் என்பது சரித்திரம். இதை "சீர்சிறக்கும் மேனி" எனத் தொடங்கும் பழமுதிர் சோலைத் திருப்புகழில், பாரதத்தை மேரு மலையின் வெளிப்புறத்தில் நன்கு விளங்கும்படிதமது தந்தத்தையே ஒடித்து எழுதிய யானை முகத்தவரும், சூரியனைப் போன்ற நிறத்தை உடைய கணபதியும், சிறிய மூஞ்சூறு வாகனத்தவரும் ஆகிய விநாயகருக்குத் தம்பியே என்று பாடியிருக்கிறார். அப்பாடல் பகுதி இதோ...

பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொடித்த நாளில் வரைஇ வரைஇ பவர்
பானிறக்க ணேசர் குவா குவா கனர் ... இளையோனே

இதே கருத்தை ஒருபதும் இருபதும் எனத் தொடங்கும் ஸ்ரீசைலம் திருப்புகழிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்

பரிவுட னழுகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை ...பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதிய கணபதி...யிளையோனே

இந்தப் பாடலில் பழமொழி எழுதிய கணபதி என்னும் சொற்றொடர், பாரதம் என்னும் பழமையான புராணத்தை எழுதிய கணபதி என்று பொருள்படும்.

பாண்டவர்கள் நாட்டை இழந்தது

பாண்டவர்கள் ஆண்டுவந்த இந்திரப் பிரஸ்தம் மிகவும் செழிப்பும் வளப்பமும் நிறைந்த நாடாக இருந்தது. அதை வஞ்சகமாக கைப்பற்ற எண்ணிய துரியோதனன், பாண்டவர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்து, விருந்து முடிந்ததும் அவர்களை சூது விளையாட்டுக்கு வற்புறுத்தி அழைத்து, விளையாட்டில், அவனைப் போலவே வஞ்சக எண்ணம் கொண்ட தன் மாமன் சகுனி என்பவனது மந்திர சக்தியால் பகடைக் காய்களை புரட்டிப்போட்டு, பாண்டவர்களைத் தோல்விடையச் செய்து, அவர்களது நாடு செல்வம் அனைத்தையும் கைபற்றிக்கொண்டான்.

பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் புரிந்து பின்னர், மேலும் ஒருவருடம் அஞ்ஞாத வாசம் புரிந்து மீண்டும் வந்தால் நாட்டைத் திருப்பிக் கொடுப்பதாக ஒப்பந்தம், ஆனால் 13 வருடங்கள் கழித்து பாண்டவர்கள் தம் மாமன் கண்ணனைத் தூதனுப்பி நாட்டைத் திருப்பிக்கேட்டபோது, அவன் கொடுக்க மறுத்ததனால் போர் மூண்டது. போரில் அருச்சுனனுக்கு அவனது மாமன், கண்ணபிரானே, தேர் ஓட்டியாக வந்தார்.

இந்தப் பகுதியை, அருணகிரி நாதர், சஞ்சல சரித என்று தொடங்கும் கருவூர் திருப்புகழில், பாடியிருக்கிறார்.

பஞ்சவர் கொடிய வினைநூற்றுவர்
வென்றிட சகுனி கவறாற்பொருள்
பங்குடையவனி பதிதோற்றிட ... அயலேபோய்ப்

பண்டையில் விதியை நினையாப்பனி
ரண்டுடை வருஷ முறையாப்பல
பண்புடன் மறைவின் முறையாற்றிரு... வருளாலே

வஞ்சனை நமுவி நிரைமீட்சியில்
முந்துத முடைய மனைவாழ்க்கையின்
வந்தபி னுரிமை யதுகேட்டிட...இசையாநாள்

மண்கொள விசையன் விடுதேர்ப்பரி
யுந்தினன் மருக வயலூர்க்குக
கண்ண பிரான் தூது சென்றது

பாண்டவர்கள் சூது விளையாட்டின் ஒப்பந்தப்படி, 13 வருடங்கள் கழித்து வந்து, தம் மாமன் கண்ணபிரானைத் தூது அனுப்பி நாட்டைத் திருப்பிக்கேட்டபோது 'ஆண்மையோடு தாக்குவேன், ஆனால் அரசுரிமையத் தரமட்டேன்' என்று துரியோதனன் சொல்ல, தூது தோல்வியில் முடிந்ததால் இருதரப்பினருக்கும் போர் மூண்டது. வலிய வம்பு பேசி போருக்கு வந்த துரியோதனனும் அவனுக்கு ஆதரவாக போரில் ஈடுபட்ட மற்ற மன்னர்களும் அவர்களது படைகளும் தூளாகித் தோற்றனர். இந்தச் செய்திகளைக் கீழ்கண்ட மோது மறலி என்று தொடங்கும் பொதுத் திருப்புகழில், அருணகிரி நாதர் பாடியிருக்கிறார்.

சூறை நிரைகொடவ ரேக மீட்டெதி
ராளு முரிமைதரு மாறு கேட்டொரு
தூது செலஅடுவ லாண்மை தாக்குவ...னெனமீள

வாது சமர்திருத ரான ராட்டிர
ராஜ குமரர்துரி யோத னாற்பிறர்
நிருபரொடு சேனை தூட்பட...வரிசாப

வாகை விஜயனடல் வாசி பூட்டிய
தேரை முடுகுநெடு மால்ப ராக்ரம
மாயன் மருகஅமர் நாடர் பார்த்திப...பெருமாளே.

கண்ணபிரான் போரைத் தொடங்கிவைத்தது

அதல சேடனாரட என்னும் பொதுத் திருப்புகழில், **'விஜயன் ஏறு தேர்மீது கனகவேத கோடூதி'** என்று, கண்ணன் தங்கமயமான வேத ஒலியைத் தரும் பஞ்ச சைன்யம் என்னும் சங்கை ஊதி போரைத் தொடக்கி வைத்ததாக குறிப்பிடுகிறார். மேலும், **ஏட்டின் விதிப்படி என்று தொடங்கும் - திருக்கடவூர் திருப்புகழில்** பாரதப் போரைத் தொடக்கி வைத்ததாக குறிப்பிடுகிறார். 'பாரதப் போரையே மேலே நடக்கும்படி துவக்கிவைத்த பெரிய வீரனாகிய திருமாலின் மருகனே', என்னும் பொருள்படும் ஒரு **பாரத மேற் புனைவித்த மகா விர மாயவன் மருகோனே** என்னும் சொற்றொடர் இந்தச் செய்தியை உறுதிப்படுத்துகிறது.

கண்ணபிரான் நெறிமுறையில் நின்றது

போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. முடிவில் குருஷேத்திரம் பாழ் நிலமாக ஆனது. பல நாட்டு மன்னர்களும், பல ஆயிரக்கணக்கான படைவீரர்களும் மட்டுமின்றி, பீஷ்மர், துரோணாச்சாரியார் போன்ற ஞானிகளும் யோகிகளும் மடிந்தனர். இத்தகைய அழிவை ஏற்படுத்திய போரை, கண்ணபிரானே தொடக்கிவைத்து முன்னின்று நடத்தியது தருமமா என்ற கேள்வி எழலாம். இதற்கு அருணகிரிநாதர் **கருமமான பிறப்பற** என்று தொடங்கும் காஞ்சீபுரம் திருப்புகழில், கண்ணபிரான் தம் தமக்கை மக்கள் தருமன் முதலான ஐவருக்கும் புகலாகி, பாதுகாப்பு அளிப்பவனாகி, (துரியோதனனிடம் தாம் சென்ற தூது தோல்வியடைந்து, போர் தவிர்க்க முடியாத ஒன்று ஆகிவிட்டபடியால்) தமது திருவுள்ளம் கோணாமல் நெறிமுறையில் நின்று போரை நடத்தினார் என்று விளக்கமளிக்கிறார்.

பட்டப் பகல் இரவாக

பதிமூன்றாம் நாள் போரில், அருச்சுனனின் மகன் அபிமன்யுவை, துரியோதனன் படையில் இருந்த ஜெயத்ரதன், என்பவன், அதர்மமான முறையில் கொன்றுவிட்டான். இதனை அறிந்த அருச்சுனன், மறுநாள் போரில், சூரியன் மறைவதற்கு முன் ஜெயத்ரதனைக்

கொன்றுவிடுவதாகவும் இல்லாவிடில் தானே தீயில் மூழ்கி உயிரை விடுவதாகவும் சூளுரைத்தான். மறு நாள் பதினான்காம் நாள் போரில் ஜெயத்ரன் அருச்சுனன் கண்ணில் படாமல் மறைந்திருந்தான். பொழுதுசாய்வதற்கு சில நாழிகை முன், அர்ச்சுனனுக்கு உதவும் பொருட்டு, கண்ணபிரான் தமது சக்ராயுதத்தால் சூரியனை தற்காலிகமாக மறைத்தார். இரவாகிவிட்டது, அருச்சுனன் சபதத்தில் தோற்றுவிட்டான் என்ற எண்ணிய ஜெயத்ரதன் வெற்றிகளிப்புடன் போர்க்களத்தில் வெளிப்பட்டான், அக்கணமே, கண்ணபிரான், சக்ராயுதத்தை விலக்கி, சூரியனை மீண்டும் தோன்றச் செய்தார். உடனேயே அருச்சுனன் ஒரு அம்பைச் செலுத்தி ஜெயர்த்ரதனைக் கொன்று தன் சபதத்தை நிறைவேற்றினான்

இந்தக் கதையை "**முத்தைத் தரு**" என்று தொடங்கும் தமது முதல் திருப்புகழ் பாடலில், அருணகிரியார், '**பட்டப்பகல் வட்டத்திகிரியில்** இரவாக' என்று பாடியிருக்கிறார்.

அருணகிரிநாதர், மகாபாரதம் மட்டுமல்லாமல். இராமனின் பெருமை பேசும் இராமாயணம், மற்றும் சிவபெருமானின் திருவிளையாடல்களைச் சித்தரிக்கும் திருவிளையாடல் புராணக் கதைகளையும், திருப்புகழைப் படிப்பவர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், தமக்கே உரிய சந்தக் கட்டமைப்பிலான சொற்கட்டுகளை கூட்டி அமைத்திருப்பது, திருப்புகழை ஒரு தனித்தன்மை கொண்ட நூலாக ஆக்கியிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

திருப்புகழைப் கற்றுப் பாடி சைவம் வைணவம் கௌமாரம் என்று வேறுபாடு இல்லாமல் அவனே ஏகன் அவனே அனேகன் என்று இறைவனை ஒருமித்த மனத்துடன் வழிபட்டு உய்வோம்.

ஓங்குக அருணகிரிநாதர் புகழ்!

நன்றி!



‘அடியார் தம் சிந்தனையுள் தேனூறி நின்று ’

தேன்மொழி நாகப்பன், பினாங்கு

அன்பும் அறமும் நிறைந்த அடியார் பெருங்கூட்டம் தவ வாழ்வில் தாம் பெற்ற இறை அனுபவங்களைத் தங்கள் பாடல்களில் விதைத்துச் சென்றுள்ளனர். பிறந்த பிறப்பினை அறுத்துப் பொய்யான உடம்பு வீழ, மெய்யான இறைவனடி சேரும் மாண்பினை உரைத்து வழி காட்டி உள்ளனர். வினைப்பயனால் மீண்டும் வந்து இப்பூவுலகில் பிறவா வரம் வேண்டி நின்றனர். அவர்தம் சிந்தனையுள் தேனாக ஊறி நின்ற இறையடி அவர்தம் பாடல்கள் வழியாகச் சிறிது சிந்திப்போம்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தமது திருக்குறளில் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் இறைவனை வாலறிவன் என்றும் அவனுடைய அடிமலர்களை நற்றாள் என்றும் மாணடி என்றும் குறிப்பிடுகிறார். தனக்கு உவமை இல்லாத இறைவன் விருப்பு வெறுப்பற்றவன் என்றும், அவனுடைய திருவடிமலரினை வணங்குபவரால் மட்டுமே இருள்சேர் இருவினையும் அகற்றிப் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் இறைவன் பிறப்பிறப்பற்றவன் என்பதைக் ‘தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி’ என்று எளிய தமிழில் மிக அழகாகக் குறிப்பிடுகிறார். ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும்சோதியாம்.

ஆண்டவனை ‘அப்பனே, எனக்கமுதனே, ஆனந்தமே, எம் உள்ளம் நெகிழ்ந்து உருகிப் பெருக்கெடுக்கும் தேன் ஒப்பனே’ என்றும் குறிப்பிடுகின்றார். திருவாசகத்தில் பற்பல இடங்களில் இறைவனை எண்ணுவதும், பாடுவதும், போற்றுவதும், வணங்குவதும் இனிமை பயக்கும் என்பதைத் தெளிவுறுத்துகிறார். ‘தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த வான் வந்த வார்கழலே பாடுதும் காண் அம்மானாய்’ என்று பாடுகின்றார். திருமாலும் நான்முகனும், நான்மறையும் வானவரும் அறிய முடியாத சங்கரன் அடியார்க்கு மிகவும் எளியன் என்பதைக் குறிக்கும் வகையில் ‘சிட்டான சிட்டன்’ என்று கொஞ்சு மொழியால் வெளிப்படுத்துகிறார்.

தம்மைப் பக்திக் கடலுள் பதித்த பரஞ்சோதியாம் இறைவன் திருவடியை நினைக்கும் தோறும் ஏற்படும் உணர்வுகளை அழகாகத் தமது பாடல்களில் சுட்டிக் காட்டுகிறார். அப்பொன்னடிகளை இறைவன் தன்தலைமேல் வைத்தலுமே துணையாக சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழித்து அடைந்ததாகக் காட்டுகிறார். இறைச்சிந்தனை ஒன்றிலேயே திளைத்து ஆனந்தநிலை அடைந்ததாகக் காட்டுகிறார். ‘இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்’ என்றும்; ‘எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்பிரான் அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ’ என்றும் பாடிப் பரவசமடைகிறார் மணிவாசகப் பெருமான். மேலும் இரும்பு போன்ற கடிதான என்னுடைய மனதினை உன்பால் ஈர்த்து, ஈர்த்து என் என்பினை உருக்கிக் கரும்பினும் இனிய உன் கழல் இணைகளை எனக்குக் காட்டியருளினாய் என்று உருகுகிறார்.

அருணகிரியார் தமது திருப்புகழிலே ‘இறைவா எனக்கு நீ மட்டுமே தந்தை தாய் என்றே தவித்து நான் இருக்க, நீ உன்னுடைய பாத கமலங்களை என்தலைமேல் வைத்து

ஆதரிக்கவில்லை என்றால் இந்த உலகம் நகைக்குமையா; எனவே என்னை விரைந்து வந்து ஆட்கொண்டருள்வாய்' என்று வேண்டுகோள் விடுக்கிறார். சிதம்பரத்திலே அருளிய திருப்புகழிலே 'சீவனொடுக்கம், பூதவொடுக்கம் தேறவுதிக்கும் பரஞான தீபவிளக்கம் காண எனக்குன் சீதளபத்மம் தருவாயே' என்று திருமுருகனிடம் விண்ணப்பம் வைக்கிறார்.

திருமூலரோ தமது திருமந்திரத்தில்

'அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே

என்று ஈசன் அருள்பெறும் நெறியைக் காட்டுகிறார் மேலும் 'சிவனொடுக்கும் தெய்வம் தேடினும் இல்லை அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை' என்று உறுதியாகக் கூறுகிறார்.

வடலூர் வள்ளலாரோ தமது திருவருட்பாவில் இறைவன் எப்படிப் பட்ட தெள்ளமுதன் என்பதை,

'தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாய்க் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொரு தீம்பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்த சுவைக்கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதே
அனித்தம் அறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல் அணிந்தருளே.

என்று பாடுகிறார். மா, பலா, வாழை எனும் முக்கனிகளின் சாற்றினைச் சேர்த்து அத்துடன் சர்க்கரை, கற்கண்டு, மிக உயர்ந்த தேன், பசும்பால் மற்றும் தேங்காய்பால் கூட்டி; மேலும் சுவைமிகுந்த பருப்பும், நெய்யும் கலந்து ஒன்றாகக் காய்ச்சி வற்றவிட்டு இளஞ்சூட்டினில் இறக்கி எடுத்த இனிப்பான சுவைக் கட்டியினைக் காட்டிலும் இனித்திடும் தெள்ளமுதன் என்று இறைவனை வர்ணிக்கின்றார் வள்ளற்பெருமான். குற்றமற்ற தில்லைச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிகின்ற சிவபெருமானுடைய அடிமலர்க்குத் தன்னுடைய அழகு பொருந்திய சொன்மாலையை அணிந்து அருளுமாறு வேண்டுகோள் விடுக்கிறார்.

இவ்வாறு எண்ணிறந்த அடியார் பெருமக்கள் உள்நின்று நெக்குருகிப் போற்றிபுகழ்ந்து தம் சிந்தனையுள் ஊற்றாகப் பெருக்கெடுத்துப் பாடிய பரம்பொருளை நாமும் பாடிப் பரவி மேன்மையுறுவோமாக.

தென்னாடுடய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!



நகரத்தாரும், ஆன்மீகமும்

சொர்ணலட்சுமி சோமசுந்தரம்
ஷண்முகநாதபுரம்

கோவில் நிர்வாகம் என்பது நகரத்தார் கோவில்களில் சிறப்பாக நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. சுழற்சி முறையில் நிர்வாகிகள் குழு அமைத்தல், நேர்மையான சேவை, துல்லியமாக கணக்கு வழக்கு வைத்திருப்பது, வருமானம் வரும் வகையில் கோவிலுக்காக முதலீடுகள் செய்வது, விழாக்களை சிறப்பாக நடத்துவது, அன்னதான சேவை, கல்விச் சேவை, திருமண உதவி, நலிந்தோருக்கு உதவி என கோவில் சார்ந்த மற்றும் சமுதாயச் சேவைகளையும் கோவில் நிர்வாகம் நடத்தி வருகிறது.

வீடுகள் மற்றும் கோவில்களில் இராமாயணம் படித்தல், திருவாசகம் முற்றோதல் போன்றவை சிறப்பாகப் பின்பற்றப்படுகிறது. செல்லும் இடமெல்லாம் மடங்கள் அமைத்து, கன்னியாகுமரி முதல் இமயம் வரை ஆன்மீகப் பயணம் செல்லும் அனைவருக்கும் தங்கும் வசதி, உணவு மற்றும் வாழிகாட்டுதல் போன்ற சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறார்கள்.

பட்டினத்தார், காரைக்கால் அம்மையார், பாடுவார் முத்தப்ப செட்டியார், வயிநாகரம் குடும்பத்தார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்றோர் இவ்வினத்தின் குறிப்பிடத்தக்க ஆன்மீகவாதிகள். இவ்வினத்தில் பிறந்த கண்ணதாசனின் ‘அர்த்தமுள்ள இந்துமதம்’ நல் ஆன்மீக சிந்தனைகளை எடுத்துரைக்கிறது.

இறைவன் திருவருளால் நம் குழந்தைகளும் இவ்வழியில் நடக்கப் பழகி ஆன்மீக பணிகளைத் தொடர வேண்டுமென பிரார்த்தனை செய்வோம்.

தண்ணீர்மலை தண்டாயுதபாணியின் கும்பாபிஷேகம் இறைவன் அருளால் உலகம் போற்ற நடைபெற வாழ்த்துகள்.

வாழ்க வளமுடன்.



தண்ணீர்மலையான் கருணை

குமட லெ. தண்ணிமலை
பினாங்கு (செம்பனூர்)

பாய்மரக் கப்பலேறி பினாங்கு நகர் வந்து,

திருக்கோவில் கொண்டு மலையடியில் சிலையானான் எங்கள் அப்பன்!

இரு நூற்றாண்டுகளை எட்டும் எங்கள் பினாங்கு தண்ணீர்மலையான்!

கருணையுடன் பக்தர்களை காக்கும் தென்னாட்டு தண்டபாணி!

ஏழை எளியவர்களின் துயர் தீர்த்து வைக்கும் மயில் வாகனன்!

சூரபன்மன் போன்ற தீய சக்திகளை அழிக்கும் போர் வேலன்!

நாம் நினைப்பதை எல்லாம் அள்ளித்தரும் ஆறிரு தோழன்!

இன்பம் கொடுப்பான், இருள் கெடுப்பான், எப்பொழுதும் துன்பம் துடைக்கும் பக்த சகாயன்!

வேலும் மயிலும் சேவலும் துணை என்று சொன்னால்

தீராத பிணிகளையும் தீர்க்க வல்லவன் முருகப்பெருமான்!

யார் உன்னை விட்டுச் சென்றாலும் நான் உன்னுடன் இருக்கிறேன்

என்ற நம்பிக்கை தரும் வடிவேலவன்!

கண்கண்ட தெய்வமே முருகா! கலியுக வரதனே!

அருள் தரும் முருகா, அருள் தரும் முருகா என்று கூறி

உனது திருவடிகளை தினந்தோறும் வணங்கி மகிழ்கிறோம்!

வேலும், மயிலும், சேவலும் துணை!



முத்து நகர் தண்ணீர்மலை முருகா

ஆக்கம் சி.ராம. பழனியப்பன்
பினாங்கு (தேவகோட்டை)

தண்ணீர்மலை வாழ்பவனே தமிழே முருகா
வண்ணமயில் வாகனனே வள்ளி மணவாளா
எண்ணமெல்லாம் எக்கணமும் நீதானே முருகா
திண்ணமாய் நின் மலர் பாதம் பற்றிடுவோம்
நெற்றிக்கண் சோதியாய் தாமரையில் ஆறானாய்
பற்றினாள் பார்வதி அன்னை கார்த்திகை மாதர் கூட்டிவர
ஒற்றினாள் ஒருவனாய் அழைத்தனள் முருகாவென
கற்றது தமிழே நீயானால் கவியும் நீதானே முருகா!

படிகாசு ஈந்த பரமசிவன் மைந்தா
படியேறி உனதருள் வேண்டி வருகின்றோம்
காவடியும் பால் குடமும் ஏந்தி வருவோம்
நாடிவந்த நகரத்தார் குலம் தழைக்க வேண்டும்
தேடிவந்த எம் குலம் செழித்து உயர வேண்டும்!

பத்துமலை பழனிமலை சுவாமிமலை
தண்ணீர்மலை தணிகைமலை வள்ளிமலை
சோலைமலை மருதமலை விராலிமலை
குன்றுதோறும் உறைவோனே குன்றக்குடியானே!

ஆர்ப்பரிக்கும் கடல் அலை ஓசையிலே அசுரனை ஆட்கொண்டு
தென்பரங்குன்றமர்ந்தாய் தேவயானையுடன்
நம்பீசன் மகள் வள்ளியை கடி மணம் முடித்து
பழமுதிர் சோலை அமர்ந்த பெருமாளே
தண்ணீர்மலையானே முருகா பினாங்கு தண்ணீர்மலையானே
விண்ணோரும் போற்றிடும் முருகா தண்ணீர்மலையானே
சுமைதனை நீக்கி நாளும் நல்லருள் புரிந்து
இமைபோல எமைக்காக்க வேண்டுமய்யா!

ஓடிக்கொண்டிருக்கும் வெள்ளத்தை அணைக்கட்டி நிறுத்துவதுபோல் துன்பங்கள் வரும்போது அதை எதிர்த்து பிரார்த்தனை செய்யவேண்டும். பிரார்த்தனை அமைதியையும் நன்மையையும் தரும்.

எதையெல்லாம் என்னுடையது என்னுடையது என்று பட்டியலை நீட்டிக்கொண்டு அதிகரித்துக்கொண்டு போகிறோமோ அவ்வளவு தூரம், ஆண்டவனுக்கும் நமக்கும் தூரம் அதிகமாகிறது. 'என்னுடையது' என்ற எண்ணம் குறையக் குறைய ஆண்டவனுக்கும் நமக்கும் இடைவெளி மிகக்குறைவாகிறது.

உன் காலில் குத்திய ஒவ்வொரு முள்ளும் நீ எப்போதோ தூவி வைத்ததே. அதில் மற்றவர்கள் பங்கு மிகக்குறைவு.

மனிதன் வெளியில் நின்று விளையாடுகிறான். தெய்வம் மறைந்து நின்று விளையாடுகிறது. தெய்வத்தை நம்புகிறவன் தோற்றாலும் ஜெயிக்கிறான். நம்பாதவன் ஜெயித்தாலும் தோற்கிறான்.

நீ அள்ளிப்போட்ட மண், எல்லாம் பொன்னாக விழுந்தால் அது உன் கைவண்ணமும் அல்ல, மண் வண்ணமும் அல்ல, கடவுளின் கருணை வெள்ளம்.

நீ கிருக்கியதெல்லாம் ஓவியமானால் குறுக்கே நின்று அதை திருத்தியவனுக்குப் பெயர்தான் பகவான்.

நீ ஏறுகிறாய் என்றால் இறைவன் உன்னை ஏற்றிவிட்டு வேடிக்கை பார்க்கிறான் என்று பொருள். நீ இறங்குகிறாய் என்றால் இறைவன் உன்னைச் சிந்திக்க வைக்கிறான் என்று பொருள்.

இன்பத்தில் துன்பம், துன்பத்தில் இன்பம் இறைவன் வைத்த நியதி.

'அடி உதவுவது போல, அண்ணன் தம்பி உதவ மாட்டான்'!
'அடி' என்பது பகவானின் பாதம்! உடன் பிறந்த அண்ணன்
தம்பி உதவாவிட்டாலும், பகவானின் பாதம்
பற்றியவர்களுக்கு அருளும், பொருளும் கிடைக்கும்.



பன்னிரு திருமுறைகளில் தமிழ்க் கடவுள் முருகன்

(சிவசேகரி முத்துக்குமார்
செக்காலை, காரைக்குடி,
இருப்பு அமெரிக்கா)

முன்னுரை

In "Deivathin Kural" (The Voice of God), Kanchi Mahaperiyava discusses the nature of various deities and the concept of Advaita, which is the non-dual realization that all forms of divinity are manifestations of the same ultimate reality, Parabrahmam. Specific references for lord Murugan being viewed in this light can be found in Volume 3 of "Deivathin Kural." Here is a specific reference in Tamil:

Specific Reference from "Deivathin Kural" (Volume 3)
Volume and Page Number : Volume 3, Pages 228 - 229

Actual Text in Tamil (Excerpt, - 20 Lines);

அனைத்து தெய்வங்களும் ஒரே பரம்பொருள் என்பதை புரிந்து கொண்டு அவற்றை வழிபட வேண்டும். முருகன், விஷ்ணு, சிவன் என்று நாமங்கள் பலவாக இருக்கலாம். ஆனால், இவர்கள் எல்லோருமே பரம்பொருள் என்ற ஒரே தெய்வத்தின் வேறுபட்ட முகங்கள்.

முருகனே சிவனாகவும், விஷ்ணுவாகவும், லலிதாம்பாளாகவும் பாவிக்கப்படுகிறார். இதுதான் அத்வைதம். முருகப் பெருமான் அருள் புரியும் போது, அந்த அருள் சாக்ஷாத் சிவனின் அருளே என்று புரிந்துகொள்ள வேண்டும்.

சிவபெருமானைப் பற்றிச் சொல்லும்போது நம்முடைய இஷ்ட தெய்வமாக முருகப் பெருமான் இருக்கிறான் என்றால் அப்படி மனதில் வைத்துக் கொண்டு அவரைப்பற்றிப் பேசலாம். அப்படி அவரே சிவம். அவரே விஷ்ணு. அவரே லலிதாம்பாள். எல்லாம் அந்த பரம்பொருள் சிவமே.

பரம்பொருள் என்றால் அதுவே பரப்ரஹ்மம். நாம் சிவன் என்றாலும், முருகன் என்றாலும், விஷ்ணு என்றாலும், இந்த லோகத்தில் நமக்கு அவ்விதமாகத் தோன்றும் எல்லாம் பரப்ரஹ்மம். ஆதலால், நாம் எந்த மூர்த்தியை வேண்டியும் சுத்த சிந்தனையுடன் பூஜிப்பது பரமாத்மாவை வேண்டி பூஜிப்பதற்கு ஒப்பாகும்.

முருகப்பெருமானின் வடிவம் வேறு என்று நினைக்க வேண்டாம். அந்த வடிவம் நமக்கு அருள்புரிவது பரம்பொருள் என்பதற்கு நம்பிக்கை வேண்டும். தெய்வங்கள் பல உள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஒரே பரம்பொருள், பரப்ரஹ்மம், அதன் வெளிப்பாடுகள், பலவகையில் மூர்த்திகளை எடுத்துக்கொள்ளும்.

தந்தைக்கே உபதேசம் செய்த தமிழ்க் கடவுள் முருகனைப் பற்றி பன்னிரு திருமுறைகளில் எங்கெங்கு எல்லாம் வருகிறதோ அதைத் தொகுத்து ஒருசில பாடல்களை / வரிகளை அனைவரும் அறிவதற்காக வழங்கும் எளியேனது சிறிய முயற்சி. அன்பர்கள் அனுபவித்து உய்ய வேண்டுகிறேன்.

சம்பந்தப் பெருமான் அருளிய **முதலாம்** திருமுறையில்

அருகரொடு புத்தரவ ரறுயாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி யுடையானிடம் மலரார்
கருகுகுழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே.

பதிகம் 12 – தலம் திருமுதுகுன்றம்

நெருப்புரு வெள்விடை மேனிய ரேறுவர்நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் **மாமுருகன்...**

பதிகம் 117 – தலம் திருப்பிரமபுரம்

சம்பந்தப் பெருமான் அருளிய **இரண்டாம்** திருமுறையில்

காயச் செவ்விக் காமற் காய்ந்த கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே

பதிகம் 62 – தலம் திருமீயச்சூர்

வள்ளி முலைதோய் குமரன் தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்

பதிகம் 63 – தலம் திருஅரிசிற்கரைப்புத்தூர்

சம்பந்தப் பெருமான் அருளிய **மூன்றாம்** திருமுறையில்

ஊறினா ரோசையுள் ளொன்றினா ரொன்றிமால்
கூறினா ரமர்தருங் குமரவேள் தாதையூர்...

பதிகம் 35 – தலம் தென்திருக்குடித்திட்டை

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது **கந்தனையே** பிரமபுரத்தை யுகந்தனையே

பதிகம் 113 – தலம் திருக்கழுமலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய **நான்காம்** திருமுறையில்

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் **தம்மக னார்முகம்**
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே

பதிகம் 18 – விடந்தீர்த்த திருப்பதிகம்

செல்வியைப் பாகங்கொண்டார் **சேந்தனை மகனாக்கொண்டார்...**

பதிகம் 43 – திருக்காஞ்சித் திருமேற்றளி: திருநேரிசை

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய **ஐந்தாம்** திருமுறையில்

முன்னை யார்மயி லூர்தி **முருகவேள்**
தன்னை யாரெனில் தானோர் தலைமகன்
பதிகம் 16 – திருப்பேரெயில் திருக்குறுந்தொகை

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.
பதிகம் 19 – திருக்கடம்பூர் திருக்குறுந்தொகை

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய **ஆறாம்** திருமுறையில்

முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி...
பதிகம் 5 – திருவீரட்டானம் – போற்றித் திருத்தாண்டகம்

கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக் **குமரனும் விக்கின விநாயகனும்**
பூவாய பீடத்து மேல யனும் பூமி யளந்தானும் போற்றி சைப்ப...
பதிகம் 13 – திருப்புறம்பயம் – திருத்தாண்டகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய **ஏழாம்** திருமுறையில்

திங்கள் தங்கு சடையின்மேலோர் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி

அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார் கோற்றட்டியாளால்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே
பதிகம் 5 – திருஓணகாந்தன்தளி

... கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக் காத லாற்கடற் சூர்தடிந்திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ ஆரு ரானை மறக்கலு மாமே
பதிகம் 59 – தலம் திருவாரூர்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய **எட்டாம்** திருமுறையில்

அந்தரர் கோன்அயன் தன்பெருமான் ஆழியான் நாதன்நல் **வேலன்**தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற் கேயந்தபொற் சுண்ணம் இடித்துநாமே
பதிகம் 9 – திருப்பொற் சுண்ணம்

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற
பதிகம் 14 – திருவுந்தியார்

ஒன்பதாம் திருமுறையில்

...அனகனே! **குமர விநாயக** சனக! அம்பலத்து அமரசே கரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன் நுகருமா நுகரே
திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா

திருமகன் **முருகன்** தேவியேல் உமையாள் திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான் மலையுடை அரையர்தம் பாவை...
கருவூர்த்தேவர் திருச்சாட்டியக்குடி

திருமூல நாயனார் அருளிய **பத்தாம்** திருமுறையில்

எம்பெருமான் இறைவா முறையோ என்று
வம்பு அவிழ் வானோர் அசுரன் வலி சொல்ல
அம் பவள மேனி **அறுமுகன்** போய் அவர்
தம் பகை கொல் என்ற தற்பரன் தானே
அதோமுக தரிசனம் முருகன் திருவவதாரம்

பதினோராம் திருமுறையில் நக்கிரதேவ நாயனார் அருளிய திருமுருகாற்றுப்படையில்

'உலகம் உவப்ப' என்று தொடங்கி
பழமுதிர்ச் சோலை மலை கிழவோனே என்று முடிவுறும் வண்ணம்
317 வரிகளில் அறுபடை வீட்டு முருகன் மேல் அகவற்பாவாக அருளியுள்ளார்

சேக்கிழார் பெருமான் அருளிய **பன்னிரெண்டாம்** திருமுறையில்

முன்னே வந்துஎதிர்தோன்றும் **முருகனோ**? பெருகுஒளியால்
தன்நேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?...
பாடல் எண் 290 – தடுத்தாட்கொண்ட புராணம்

பொருஅரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கு இனிப்புதல்வர்ப் பேறே
அரியது என்று எவரும் கூற, அதன்படுகாத லாலே
முருகுஅலர் அலங்கல் **செவ்வேள் முருகவேள்** முன்றில்சென்று
பரவுதல் செய்து, நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்
பாடல் எண் 659 – கண்ணப்ப நாயனார்

இதுகாறும் நாம் சிந்தித்தது பன்னிரு திருமுறைகளில் **முருகனைப்**பற்றி வரும் பாடல்களில் சில.

இனி **தண்ணீர்மலையானைப்** பற்றி:

தண்ணீர்மலையான் கோயிலுக்குள் நாம் நுழையும் போதே ஒரு தெய்வீக அனுபவத்தை உணர முடியும். அதை உணர்ந்தவர்களுக்குத்தான் அவன் அருமை தெரியும். முருகன் அழகே அழகு!

பினாங்கு தண்ணீர்மலை கோயில் காலத்தால் பிற்பட்டதால் அருணகிரிநாதர் திருப்புகழில் இடம் பெற இயலாமல் போனது நம்மவர்க்கெல்லாம் ஒரு வருத்தம் தான். அவனது அருமை பெருமைகளைச் சொல்லிச் சொல்லி எனை வளர்த்த எனது அன்பு ஆயாள் அமரர் திருமதி. லெ. இராமாயி ஆச்சி அவர்களையும், எனது அருமைத் தாயார் திருமதி. மீனாட்சி ஆச்சியையும் இது

சமயம் எண்ணிப் பார்க்கிறேன். 'எனது இறுதிக்காலம் தண்ணிமலையான் வாசலிலேயே போக வேணும்' என ஆசைப் பட்டவர்கள், என் ஆயா!

தண்ணீர்மலையானின் பினாங்கு புண்ணிய பூமியில் பிறக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்ததாலேயே அவனது கும்பாபிஷேக மலரில் அவனை / முருகனைப் பற்றி நான் அறிந்த சிலவற்றை அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பேறு பெற்றதாக எண்ணுகிறேன். இப்பணியில் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த என் அன்புத் தந்தை திரு. சீனி. முத்தையா அவர்களுக்கும் என் நன்றி.

தண்ணீர்மலையானுக்கு அரோகரா!



வேலைத் தொழுவதே வேலை

செந்தமிழ்த் திலகம்
முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி
சிங்கப்பூர்

வேல் வழிபாடும் தொன்மையும் :

தமிழின் மாண்பையும் தமிழர் நாகரிகத்தின் தொன்மையையும் உணர்த்தும் பல்வேறு கூறுகளுள் ஒன்று திணைக் கோட்பாடு. ஐவகைத் திணைகளில் குறிஞ்சித் திணைக்குரிய கடவுள் முருகன். மலையும் மலை சார்ந்த இடமே குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சித் தெய்வமாக முருகனை வழிபடுவது தமிழர் கண்ட பக்தி நெறி. ஆகவேதான் ஒல்காப்புலமைத் தொல்காப்பியரும் "சேயோன் மேய மைவரை உலகம்" என்றார்.

முருகன் ஆலயங்கள் குன்றுகளிலே / மலைகளிலே அமைந்திருப்பது இக்காரணம் பற்றியேயாம். குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலில் வெறியாட்டு என்னும் வழிபாட்டுச் சடங்கு முக்கிய இடம் பெறுவதாகும். சங்க இலக்கியங்களில் வேலன் வெறியாட்டு நிகழ்வுகளில் வேல் முக்கியமான பூசைப் பொருளாகப் பயன்பட்டுள்ளது. எனவே வேல் வழிபாடு தொன்மை வாய்ந்த வழிபாட்டு முறை. இம்மரபு தமிழ்மொழி போலவும் முருகக் கடவுள் போலவும் தனிச்சிறப்புக் கொண்டது.

காலந்தோறும் வேல் வழிபாடு

சங்ககாலத்திற்குப் பின்னர் சங்கம் மருவிய காலத்திலும் மக்களிடையே வேல்வழிபாடு புழக்கத்தில் இருந்தது என்பதற்கு வேலைப் போற்றும் சிலப்பதிகார அடிகளைச் சான்றாகக் கூறலாம். சமயப்பொதுமை போற்றும் இளங்கோவடிகள் குன்றக்குரவையில் வேலைப் போற்றிப் பாடுவதோடு வேலன் வெறியாட்டு, முருகனின் ஆறுமுகங்கள், அவனது தோற்றப்பொலிவு, கருணைத்திறம் எனப் பல செய்திகளைக் கூறுகிறார். மேலும்

'குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவநின் அடியிணை தொழுதேம்.

என வள்ளி வழிபாட்டையும் முருகவழிபாட்டையும் பதிவுசெய்கிறார். இளங்கோவடிகள் காலத்துக்குப் பின் வேற்றினத்தவர் தமிழகத்தை ஆளவே வேற்றுச்சமயங்களின் செல்வாக்கினால் வேல்வழிபாடு மங்கியது.

அருணகிரிநாதரும் வேல்வழிபாடும் :

சைவ, வைணவ சமயங்களின் எழுச்சி ஏற்பட்டுச் சில நூற்றாண்டுகள் கழிந்தன. பதினான்காம் நூற்றாண்டில் அருணகிரிநாதர்தான் வேல்வழிபாட்டுக்குப் புத்துயிர் தந்தார். அவர் பாடிய வேல்விருத்தம், வேல்வகுப்பு போன்ற அருட்பாடல்கள் தவிரத் திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி போன்ற பக்திப்பனுவல்களிலும் வேலின் பெருமையையும் செவ்வேள்தம் திருக்கைவேலின் அருள்திறத்தையும் விதந்து பாடுகிறார்.

செவ்வேலும் சீர்த்தியும் :

செவ்வேள் கைத்திருக்கைவேலின் சீர்த்தி அளப்பரியது. கடல் போன்று ஆழமும் விரிவும் கொண்டது. தாயினும் இனிய தமிழ்முருகன் கைவேலுக்கு அருணகிரிநாதர் தரும் அடைமொழிகள் அழகியவை; அவை வேலின் அமைப்பையும் ஆற்றலையும் அருளையும் தெய்வீகத் தன்மையையும் உணர்த்துபவை வேலுக்கு அவர் வழங்கும் திருநாமங்கள் இறைநாமத்தை ஒத்தவை; ஏத்துதற்குரியவை.

திருப்புகழில் எண்ணற்ற அடைமொழிகளால் வேலை வருணிக்கிறார். 'அத்ரவேலாயுதம்', 'அழல்வேல்', 'இகல்வேல்', 'இலகுவேல்', 'எழில்வேல்', 'ஒரு தனிவேல்', 'குதர் வடிவேல்', 'குருதிவேல்', 'கோமளசத்தி', 'சண்டவேல்', 'சித்ர முனைவேல்', 'சிந்துவேல்', 'செங்கைவேல்', 'சோதி அயில்', 'தடிநிகர்அயில்', 'துங்கத்தனிவேல்', 'துங்கவடிவேல்', 'நிறைஅயில்', 'பானுசத்தி', 'பேர் பெரியவேல்', 'மந்திரவேல்', 'மாவேக நீடயில்', 'முனைவேல்', 'வெள்ளயில்', 'வெற்றிச்சத்தி', 'வெற்றி முனைவேல்', 'உக்ரசத்தித்தனிப்படை' எனப் பலவாறு ஏத்துகிறார். வேலைப்பாடும் ஆசை அடங்காதவராய்த் தலைப்புகழிலும் அதனை வெளிப்படுத்துகிறார். சான்றாக வேலைத் தியானிக்க (திருப்புகழ் 525) எனவும் வேலெடுத்த சமர்த்தை எனவும் வேலைப்பாடுக (திருப்புகழ் 1062) வேல்வாங்கு வகுப்பு (திருப்புகழ் 105) எனவும் பலவாறு பாடுகிறார்.

வேல்விருத்தம் புகழும் வேல்

வேல் விருத்தத்தின் பத்துப் பாடல்களிலும் அருணகிரியார் 'வடிவேல்', 'கொடியவேல்', 'தனியாண்மை கொண்ட நெடுவேல்', 'செம்பொன் திருக்கைவேல்', 'அருந்ததி புரந்த வைவேல்', 'புங்கவன் கைவேல்', 'வகைவகையினிற் சுழலும் வேல்', 'குறவர் தம் புதல்வி கணவன் அடல் கொண்ட வேல்', 'மூதண்டமும் புகழும் வேல்', 'சரவணக் குமரன் வேல்', 'அன்பொடு பாடி ஆடும் ப்ரதாபமும் தலைமையும் கொண்ட வைவேல்', 'கோலத் திருக்கைவேல்', 'தேசிகன் கோலத் திருக்கைவேல்', 'கனகாசல்த்தைக் கடைந்து முனையிட்டு கடுக்கின்ற துங்க நெடுவேல்', 'குகன் வாகைத் திருக்கைவேல்', 'உலகுதனில் ஒப்பில் புகழ்பெற்ற வைவேல்', 'குகன் செம்பொன் திருக்கைவேல்', 'துங்க நெடுவேல்', 'சமரமயில் வாகனன் அமரர் தொழு நாயகன் சண்முகன் தன் கைவேல்', 'நிசாசரர் உலோகம் எலாம் அழல் உலாவிய நிலாவு கொலைவேல்', 'வேழம் இளைஞன் வைகேல்' எனப் பலவாறு அடைமொழி கொடுத்துப் பாடுகிறார்.

வேலின் தத்துவ விளக்கம்

மற்றச்சமயத்தவர் பெரும்பாலோர் நம் கடவுளர்கள் ஆயுதம் ஏந்தியுள்ளதன் தத்துவம் / தாத்பரியம் அறியாமல் நம் கடவுளர்களையும் நம் சமயங்களையும் பகடிசெய்கின்றனர். நம் மக்களும் சமயத்துறையில் ஓரளவாவது அறிவு பெற்றிருந்தால் நம்மைக் கேலி செய்வோருக்குத் தக்க பதில் சொல்லமுடியும். வேல் வழிபாடு ஏன்? என்னும் வினாவுக்கு விடையளிக்கும் வகையில் வேலின் தத்துவப்பொருள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. வேலின் தத்துவப்பொருள் உணர்ந்தே நம் முன்னோர் தம் பிள்ளைகளுக்கு வேலாயுதம், வடிவேல் கதிர்வேல், ஞானவேல், வச்சிரவேல் குழந்தைவேல் எனப் பெயர் சூட்டி அழைத்து மகிழ்ந்தனர்.

இந்நாமங்களை உச்சரிப்பதன் மூலம் இறைவனை மறவாத சிந்தை உடையவர்களாய் விளங்கினர். மண்வெட்டி, கோடரி எனப் பல ஆயுதங்கள் உலகியலில் இருந்தாலும் அவற்றைப் பிள்ளைகளுக்குப் பெயராக வைப்பதில்லை. ஆனால் முருகன் கையில் உள்ள வேல் மக்களுக்குப் பெயராக விளங்குவதிலிருந்து முருகநாமத்துக்கு இணையானது வேலின் திருநாமம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இருவகைப் பகை

மனிதர்களுக்கு இருவிதமான பகைகள் உள்ளன. ஒன்று அகப்பகை; மற்றொன்று புறப்பகை. மனத்தளவில் உள்ள பகை அகப்பகையாகும். இது மனக்கட்டுப்பாடு இல்லாததால் நாமே உருவாக்கிக்கொள்வது. அழுக்காறு, அவா, வெகுளி போன்றவை காரணமாகத் தீய எண்ணங்களை வளர்த்துக்கொண்டு தீய செயல்களில் ஈடுபடுவது அகப்பகை ஆகும். சில சமயங்களில் நாம் நல்லது செய்ய நினைத்தாலும் நம் மனம் அதற்கு இடந்தராது. இதுவும் அகப்பகை சார்ந்ததே. எனவே அகப்பகை என்பதைச் சுருக்கமாகச் சொன்னால் நம் மனமே நமக்கு எதிரியாவது. புறப்பகை என்பது மற்றவர்களால் அல்லது புறச்சக்திகளால் ஏற்படுவது. இவ்விரு பகைகளையும் நாம் வெல்வதற்கு உதவுவது இறைவழிபாட்டின் அம்சமாக விளங்கும் வேல் வழிபாடாகும். வேல் என்னும் சொல், வெல் என்னும் வினைச் சொல்லின் அடியிலிருந்து பிறந்தது.

ஆகவே வேலை வழிபடுவது வெற்றிபெறுவதற்கு உரிய வழிபாடாகும். வேல்விருத்தம் படித்துத் தன்மீது போடப்பட்ட வழக்கிலிருந்து வெற்றி கண்ட நகரத்தார் ஒருவரை இக்கட்டுரையாளர் நன்கு அறிவார். இன்று மக்கள் உலகியல் தேவைகள் காரணமாகவும், தம் அனுபவத்தின் அடிப்படையிலும் வழிபாட்டு முறைகளைத் தேர்வுசெய்து கொள்கின்றனர். எனவே நம் சமயமும் வழிபாட்டுமுறைகளும் நம் மக்களிடையே எதிர்காலத்திலும் நிலைபெற்று இருக்கவேண்டுமானால் நாம் அறிவியலின் தத்துவப்பொருளை மக்கள்மத்தியில் பரப்பவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

வேல் வழிபாடு ஏன்?

முருகன் திருக்கரத்தில் உள்ள வேல் உயிர்கள் / மக்கள் தம்மிடம் உள்ள அகப்பகைகளை முதலில் வெல்லவேண்டும் என்பதை உணர்த்துகின்றது. வேல் என்னும் படைக்கலம், ஆணவமாகிய அகப்பகையை வெல்ல உதவும் சாதனம் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது. ஆணவத்தின் மொத்த உருவமான சூரபன்மனை வென்றதால் வேல் ஞானசக்தியாகக் கருதப்படுகிறது.

ஏன் ஆணவத்தை அழிக்கவேண்டும்? ஆணவம்தான் உயிர்களிடம் அறியாமையை உண்டாக்குகிறது. அந்த ஆணவத்தை அழிக்க அல்லது வெல்ல வேலால்தான் முடியும். வடமொழியில் வேல் என்பது சக்தி எனப் பொருள்படுகிறது. இங்கே 'சக்திதான் தடையிலா ஞானம்' என்னும் சிவஞான சித்தியாரின் வாக்கினை எண்ணிப்பார்க்க வேண்டும். சக்தி என்பது இச்சை, செயல், அறிவு என மூன்று வகைப்படும். இச்சாசக்தி வள்ளியையும் காரிய அல்லது கிரியாசக்தி தெய்வானையையும் ஞானசக்தி வேலையும் குறிப்பதாகும்.

ஞானம் வாய்க்காவிட்டால் ஆணவமாகிய இருளில் ஆழ்ந்து அவதிப்படவேண்டும். ஞானத்தால் பெறும் பயன்களைச் சமயச்சான்றோர்கள் பலவாறாக வலியுறுத்திவந்துள்ளனர். சான்றாக அப்பர் பெருமான் திருவன்னியூர்த் தேவாரப் பதிகத்தில்

> 'ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
> தானம் காட்டுவர் தம்மடைந் தோர்க்கெலாம்'

என்று பாடியுள்ளார். அஞ்ஞான இருளைப்போக்கும் அதே சமயத்தில்தான் மெய்ஞ்ஞானமும் பிறக்கும். அஞ்ஞான அகல்வும் மெய்ஞ்ஞான வருகையும் உடன் (ஒரே போதில்) நிகழ்வன. சிவஞானசித்தியார் சுபக்கச் செய்யுள் கூறுவதை இவண் நினைக்கலாம்.

'............ அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம் உயர் மெய்ஞ்ஞானத்தால்
ஆனத்தா லதுபோவது அலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞான மறப்பந்தம் அறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞானம் என்பர்'

கந்தபுராணத்தில் வீரவாகுவுக்கும் பானுகோபனுக்கும் நடைபெற்ற போரில் மாயை என்னும் அம்பினால் வீரவாகுவையும் அவனுடைய வீரர்களையும் கட்டி ஏழு கடலுக்கும் அப்பால் உள்ள நன்னீர்க்கடலில் போட்டான் பானுகோபன். இந்நிகழ்ச்சியை முருகனிடம் நாரதர் சென்று சொல்ல முருகன் வேலை ஏவினான். வேல் வந்ததும் மாயை அகன்றது. கட்டப்பட்டிருந்த வீரவாகு முதலானோர் உணர்ச்சி பெற்று எழுந்தனர். வேல் மாயையை அகற்றி நல்லுணர்வைத் தரும் என்பதற்குச் சான்றாக வீரவாகுவின் கீழ்க்காணும் கூற்று அமைகிறது.

'அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைக ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்'

இப்பாடலில் கவலை என்பது ஆணவத்தின் காரியம். கவலை நீத்தேம் என்று சொல்கையில் வினையும் மாயையும் அகன்றன என்பது குறிப்பால் பெறப்படும். எனவே வேலால் இம்மூன்றையும் வெல்லமுடியும் என்பது பொருள்.

வேல் ஆணவத்தைப் போக்கி இன்பம் தரும் என்கிறார் குமரகுருபரர். 'அச்சம் அகற்றும் அயில்வேல்' என்பது அவர் வாக்காகும். கலக்கத்தை ஒழிப்பதும் வேலின் வேலை என்கிறது திருப்போரூர்ச் சந்நிதிமுறைப் பிள்ளைத்தமிழ். இந்நூலின் தாலப்பருவப்பாடல்

'இலங்கு மமரர் கலங்காமல் எழில்வா னுலகம் குடியேறத்
தகைமைச் சுடர்நெட் டிலைவேல் தடக்கை எடுத்தாய் தாலேலோ'

என்று வேலின் ஆற்றலைக் கூறுகிறது.

வேல்மாறல் மஹாமந்திரம் கூறும் வேலின் ஆற்றல்

வேல் துன்பத்தைப் போக்கும் ஆற்றல்மிக்கது என்பதை வேல்மாறல்,

'பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக்குகையை இடித்து வழிகாணும்'

எனக் கூறுகின்றது. ஒருவருடைய துன்பம் மட்டுமின்றிப் பல ஆயிரம் பேரின் துன்பத்தைப் போக்கிய சிறப்புகொண்டது.

வேல் இன்பந்தரும் என்பதற்குத் தேவர் தலைவனின் விலங்கை ஒழித்த புராண வரலாறு சான்றாகிறது. இதனைக் கீழ்வரும் அடிகள் கூறுகின்றன.

'பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்
பதத்திட நிகளத்து முளை தெறிக்க அரமாகும்'.

காத்தற்கடவுளான திருமாலும் தேவேந்திரனும் வேலாயுதப் பெருமானாம் முருகனின் துணையால் இன்பம் எய்தியதை

'பூமேவு நாபனும் நாமுகத் தோனும் புரந்தரனும்
தாமேவு வாழ்வும் அதிகார மும் பெறத் தார்புனைந்த
கோமேவு வேல்கொண்ட உணரை மாய்த்த குமரெனங்கோன்
தூமேவு தாண்மலர் போரூரி லென்முடி சூட்டினேனே'

என்ற பாடல் கூறுகிறது.

வேல் பசி நீக்கும் ஆற்றல் கொண்டது. வேல்மாறல் மஹா மந்திரத்தில் வேல் பேய்களின் பசியைப்போக்கும் என்ற குறிப்பு காணப்படுகிறது.

'பசித்தலகை முசித்தழுது முறைப்படு தலொழித்தவுண
ருரத்து திர நிணத்தசைகள் புசிக்கவரு ணேரும்'

பேய்களின் பசியையே நீக்கும்போது தன்னை வழிபடும் மக்களின் பசியைத் தீர்க்காதா என்று நம் மனம் இயல்பாகக் கேள்வி எழுப்பும். பசியைப்போக்கு என்று கேட்கும் அளவுக்கு முருகன் காலம் நீட்டிக்கமாட்டான்; அவனது திருக்கைவேல் உடனே விரைந்துவந்து தானே பசியை அகல்விக்கும் என்று குறிப்பாகப் பொருள் உணர்கிறோம். மக்களின் பசி என்பது வயிற்றுப் பசியை மட்டும் குறிக்கவில்லை. உயிர்கள் ஆன்மாவைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஞானப்பசியையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

வழித்துணையாகும் வேல்

வாழ்க்கை என்னும் பயணத்தில் நிலையற்ற உறவுகளை நாம் நமக்குத்துணை என்று எண்ணி மயங்குகிறோம். நிலையில்லா உலகின் போக்கைக் கண்டு அஞ்சுகிறோம். விழிக்குத்துணையாக முருகனின் திருப்பாதங்களையும் மொழிக்குத்துணையாக முருக நாமங்களையும் பற்றிக்கொள்ளும்படி அருணகிரியார் பல பாடல்களில் பாடியுள்ளார்.

ஆயினும் நமக்கு உண்மையில் துணையாக வருவது எது என்பதனை நாம் அறியவில்லை. கீழ்வரும் பாடல் நமக்கு உண்மைத்துணை எது எனக் கூறுகிறது.

'சூலம் பிடித்தெம் பாசம் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே'

வேல்மாறல் மஹாமந்திரமும்,


'தனித்துவழி நடக்குமென திடத்தும் ஒருவலத்து
மிருபுறத்தும் அருகடுத்து இரவுபகல் துணையதாகும்'

எனத் தனித்து வழி நடக்கும் அன்பர்களுக்கு முருகவேளின் கைவேல் உண்மைத்துணையாகும் என்கிறது.

முடிவுரை

வேலைத் துணையாகக் கொண்டு பாய்மரக்கப்பல்களில் பயணித்துப் பல துன்பங்களைச் சந்தித்து வெளிநாடுகளில் கொண்டுவிற்கச் சென்ற நகரத்தார் பெருமக்கள் ஆரம்ப காலத்தில் வேல்வழிபாட்டின் மகத்துவம் அறிந்து வேலை வைத்தே வழிபட்டனர். 'செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்பது அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த முருகபக்தியைத் தெரிவிக்கிறது. தம் தொழிலில் முருகனையும் பங்குதாரராக்கி அவனுக்கும் லாபத்தில் ஒரு பங்கை மகமை எழுதும் வழக்கம் கொண்டுள்ள நகரத்தார் முருகன் ஆலயங்களைக் கட்டிக் குறிப்பாகக் கௌமார சமயத்தையும் சிறப்பாக சைவ சமயத்தையும் வளர்த்து வருகிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது 'வேலை வணங்குவதே வேலை' என்னும் அவர்களின் கொள்கையும், வேலும் மயிலும் நமக்குத்துணை என்னும் ஆழ்ந்த நம்பிக்கையுமே ஆகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

முற்றும்



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

என். எஸ். நாராயணன்
சிங்கப்பூர்

அவனி முழுதும் வியாபித்திருந்தும், மறை நிறை இறையான அவன் செயலால், உலகை உய்விக்கத் திருக்கூட்ட ஞானிகள் பிறக்கவே செய்கிறார்கள். அவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டு 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிறந்தவர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

சிந்தையெல்லாம் சிவமே சிறைந்திருக்க, சிவப் பணி செய்த அடியார்களின் பெருமையைப் போற்றும் பெரியபுராண புனித வரலாற்றை நாம் படித்திருக்கலாம். ஆனால், பெரிய புராணத்தில் இடம் பெறாவிட்டாலும், 64ஆவது நாயன்மாராக ஏற்றுக் கொள்ளப்பட்ட பெரும் சிறப்புக்குரியவர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

தமிழகம் மட்டுமல்லாமல், தமிழர்கள் வாழும் உலக நாடுகள் அனைத்திலும் அவர் அருள் மணம் கமழும் ஆன்மீகத் தென்றலைத் தவழவிட்டவர். கடவுள் மறுப்புக் கொள்கை நாடெங்கும் பரவிய காலகட்டத்தில், ஓய்வறியாப் பயணம் மேற்கொண்டு, தமிழின் இனிமையும் பக்திச் சுவையும் சேர்ந்த தம் சொற்பொழிவுகளால் ஆன்மீக நெறிகளை போதித்தார் வாரியார் சுவாமிகள். எத்தனை ஆயிரம் பக்திச் சொற்பொழிவுகள்... எத்தனை எத்தனை ஆலய புணரமைப்புப் பணிகள்!... சுவாமிகள் வாழ்வெல்லாம் இறைச்சேவை இசைச் சேவைதான்!

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், வேலூர் மாவட்டம் காட்பாடிக்கருகே, பாலாற்றங்கரையில் அமைந்த காங்கேய நல்லூரில், 1906ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ஆம் நாளில், அதிகாலை மணி மணி 4.37க்கு, சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தார். அவரின் தந்தையார் சிவத்திரு மல்லையதாசர் பாகவதர். தாயார் மாதுஸ்ரீ கனகவல்லி அம்மையார். அவர்களின் குடும்பத்தில் குழந்தைகள் பதினொருவர்.

திருமுருக கிருபானந்த வாரியார் நாலாவது குழந்தையாகப் பெற்றோருக்குப் பிறந்தார். அவருக்கு முன்பிறந்தவர்கள் ஜீவாட்சி அம்மாள் (கணவர் பெயர் துரைசாமி), கமலாட்சி (106 வயது வரை வாழ்ந்தவர்), மறைஞானசிவம் (மனைவியர் இருவரை இழந்து, துறவி போல பிறகு வாழ்ந்தவர். தம் மறைவு நாளையே துல்லிதமாகக் குறித்த சிறந்த ஜோதிட வல்லுநர்). குமாரவிளாகம் என்னுமிடத்தில் குடிலமைத்து வாழ்ந்தவர்.

நாலாவது பிள்ளையாக அவதரித்தார் வாரியார் சுவாமிகள். தம் 19ஆம் வயதில் தாய்மாமன் மகளான அமிர்தலெட்சுமியை மணந்தார். அவர்களுக்கு குழந்தைப் பேறு இல்லை. வாரியார் சுவாமிக்குப் பிறகு பிறந்தவர் அம்மணி அம்மாள் என்னும் உமா மகேஸ்வரி. ஆறாமவர், ஸ்ரீசைலவாசன். அவர் மனைவியார் சுந்தராம்பாள். ஏழாமவர், திருமாமணாளசிவம். அவருக்குப் பின்னர் சச்சிதானந்தசிவம், அதன் பிறகு மயூரநாதசிவம், கேதாஸ்வரி. கடைசித் தம்பி சிவத்தினி திருப்புகழ்மணி. (வாரியாரின் கடைக்குட்டித் தம்பி திருப்புகழ்மணியின் மகனான புகழனார்தாம், வாரியாரின் குடும்பத்தினர் பற்றி அறியாதவர்களுக்கு, பல அரிய செய்திகளைப் பெருந்தன்மையாகச் சொன்னார்)!

திருமுருக கிருபானந்த வாரியாரின் பெயர், மிகத் தூயத் தமிழ்ப்பெயராகும். கிருபை என்றால் கருணை. ஆனந்தம் என்றால் அதி மகிழ்ச்சி. வாரி எனின் கடல் எனப் பொருள். எனவே,

கருணையும் மகிழ்ச்சியும் மிக்க அரும் பெருங்கடல் என்பதே பெயரின் பொருள். எத்தனை பொருத்தமாக அந்தப் பெயரை அவருக்குச் சூட்டினார் அவரின் தந்தையார்?

வாரியார் சுவாமிகளின் குடும்பம் ஆதிநாளில் வறுமை வயப்பட்டிருந்தது. அவர்களின் உடன்பிறந்தவர்கள் எவருக்கும் பாடசாலைப் படிப்புக் கிட்டவில்லை. பதினோரு பிள்ளைகளுக்கும், தந்தையார் மல்லையதாசர் அவர்களே குருவாய் இருந்து எழுத்தறிவுக் கல்வியைக் கற்பித்தார். கல்வி, இசை, இலக்கியம், இலக்கணம் எனக் கற்றதன் பயனால், மூன்றாம் வயதில் கல்வி தொடங்கிய வாரியார் அவர்கள், இறை அருளினால், பத்தாம் வயதிலேயே பத்தாயிரம் பாடல்கள் மனனம் செய்தார். ஒப்புவித்தார்! சுவாமிகள், தம் எட்டாம் வயதிலேயே கவிபாடும் திறமும் பெற்றார்!

கற்றறிந்த மேன்னிலை புலவர்களுக்கே, அந்நாளில் கற்கக் கடினமாயிருந்த அஷ்டநாக பந்தம், மயில், வேல், சிவலிங்கம், இரதம் முதலான பந்தங்கள், சித்திரக் கவிகள் எனப் பலவற்றை சுவாமிகள் கற்றுணர்ந்தோதினார்

தந்தையார் மல்லையதாசர், ஒருநாள் ஆற்ற வேண்டிய சொற்பொழிவுக்குச் செல்ல முடியாது போயிற்று. அதனால் சொற்பொழிவுக்கு வேறு ஏற்பாடு செய்திராத ஏற்பாட்டாளர்கள், வாரியாரை அணுகி சொற்பொழிவாற்ற இயலுமா எனக் கேட்டனர்.

பத்தொன்பதே வயதான வாரியார் சுவாமியும் தயக்கமின்றிச் சென்று, அன்று திரண்டிருந்த பொதுமக்கள் கூட்டத்தில் எந்தவித சஞ்சலமுமின்றி பேசலானார். பின்வரும் காலத்தில், சமயச் சொற்பொழிகள் ஆற்றுவதில் மிகச் சிறந்த ஆன்மீகவாதி வாரியார் சுவாமிகள் என்பதற்கு அந்த நிகழ்ச்சி அச்சாரமாய் விளங்கிற்று!

ஆறு தீப்பொறிகளாய் சிவபெருமானின் முக்கண்ணிலிருந்து கங்கை நீரில் விழுந்ததால், முருகப் பெருமானுக்கு காங்கேயன் என்னும் திருப்பெயர் ஏற்பட்டதை அறிவோம். அந்த ஊரில் முருகப் பெருமான் தோன்றியதால், ஊருக்குக் காங்கேய நல்லூர் என்னும் பெயர் ஏற்பட்டது. அந்த நல்லூரின் ஆசிபெற்று அங்குப் பிறந்ததால், வாரியார் சுவாமிக்கும் நல்லாசி கிட்டிற்று. அந்த ஊரே மிகப் பிரபல முருகன் ஆலயத்தைப் பெற்றதாக ஊரார் பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

சுமார் 500 ஆண்டு பழமையான அவ்வூர் திருக்கோயிலைப் பராமரிக்கும் பணி மல்லையதாசர் பாகவதரின் குடும்பத்தின் பொறுப்பாக அமைந்தது. அதன் பயனாக, அவர் 1929ஆம் ஆண்டு, ஆலயத் திருப்பணிகளைத் தொடங்கினார். ஆலயப் புதுப்பிப்புப் பணி, 1931ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. திருக்குட நன்னீராட்டு விழாவும் செவ்வனே நடைபெற்றது.

தம்மை ஈன்ற மல்லையதாசர் 1951ஆம் ஆண்டு, பூவுலகு உயிர் துறந்து இறையின் திருவடி நாடியதும், ஆலயத்தை பராமரிக்கும் பொறுப்பேற்றார் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

தாம் ஓய்வின்றி உழைத்த கடும் உழைப்பின் மூலம் கிடைத்த செல்வத்தின் பெரும் பகுதியை, ஏராளமான கோவிலின் பராமரிப்புக்குச் செலவிட்டார் வாரியார் சுவாமிகள்.

தம் வாழ்நாளின் சுமார் 57 ஆண்டுகள், ஆலயப் பராமரிப்பைக் கண்ணும் கருத்துமாய் கவனித்துக்கொண்ட திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், 1958 ஆம் ஆண்டும், 1990ஆம் ஆண்டும் காங்கேயநல்லூர் ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டுத் திருவிழாவை மிகுந்த சிரத்தையுடன் சிறப்பாக நிறைவேற்றினார்.

ஆலயத்தினுள் மட்டும், சுவாமிகள் தம் திருப்பணியைச் சுருக்கிக் கொள்ளவில்லை. அவர் உலககெல்லாம் மிகவும் பிரசித்தி பெற்ற, பிரபலமான ஆன்மீகத் துறையின் மிகச் சிறந்த சொற்பொழிவாளர். அந்தக் காலக்கட்டத்தில், இறை மறுப்பு வேரூன்றி, அரசியலாக மாறிக்கொண்டிருந்த வேளையில், எங்கெல்லாம் ஆன்மீக உரைக்கு அழைப்பு வந்ததோ, தவறாது அங்ககெல்லாம் சென்று உரையாற்றினார் சுவாமிகள்.

கிருபானந்த வாரியார் சுவாமிகள், எந்நிலையிலும் தம் சாந்தமான உரை பாணியைக் கைவிட்டதில்லை. சொல்ல வேண்டிய நயமான கருத்துகளை, எந்த வித உள் நோக்கமும் இன்றி, தெளிந்த நீர் போலப் பேசி, நகைச்சுவை குறையாது வந்திருப்பவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து, தம் இனிய பாடல்கள் வழி கருத்துகளைத் தெரிவிப்பார்.

சமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேசும் வாரியார் சுவாமிகள் தமக்கு வழங்கப்பட்ட **'சொல்லின் செல்வர்'** பட்டம் குறித்துப் பேசினார். திரண்டிருந்த மக்கள் குலுங்கிச் சிரிக்கும்படி, 'நான் ஏதாவது **சொல்லின்,** அங்கு வரும் பார்வையாளர்கள் எழுந்து **செல்வர்'** என்றார்.

கிருபானந்த வாரியார் அவர்களுக்கு 'திருமுருக' பட்டப் பெயர் முதலாவது ஆதீனத்தால் வழங்கப்பட்டதென சுவாமியாரின் சகோதரர் மகனாம் புகழனார் தெரிவித்தார். குகத்தியில் 'முருக திரு' என்னும் சிறப்பும் தரப்பட்டது.

அந்த நற்பயன் விளைவாகவே, சமயச் சேவையுடன், கல்விப் பசி, மருத்துவச் சேவைத் தேவை, பசியெனும் பிணி ஆகியவற்றைப் போக்கும் பணியினை, வாரியார் அவர்கள் தாமாகவே ஏற்றுக்கொண்டு செயல்பட்டார்கள். அந்த புனிதத்தொண்டில், ஜாதி, மதம், இனம் என்னும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. இறையருளிய மனித இனத்தவர் என்னும் புனிதப் பார்வை ஒன்றே வாரியார் சுவாமிகள் உள்ளத்தில் நிறைந்திருந்தது, உறைந்தது!

கோயில்களுக்கு மட்டுமல்லாது, தமிழகமெங்கும் இருந்த எண்ணற்ற, ஆதரவற்ற குழந்தைகள் ஆசிரமங்கள், முதியோர் இல்லங்களுக்கு, மாதாமாதம் சுவாமிகளே பணம் அனுப்புவார். அதையும் தாமே செய்வார். அவரே, தம் கையால் பணப் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்புவார்.

தேவையுடையோருக்கு அள்ளிக்கொடுப்பதில் அவருக்கு அதிகப் பிரியம். தாம் எடுத்த இப்பிறவியில், மணம் புரிந்தும், சந்நியாசியாகவே வாழ்ந்தார். அடுத்த வேளை உணவை எடுத்து வைத்துக்கொள்வது கூட ஆன்மீக அடியாருக்கு இழுக்கான செயல் எனத் திண்ணமாகத் தோன்றிற்று.

1993ஆம் ஆண்டு வாரியார் சுவாமிகள், லண்டன் சென்றிருந்தார். பயண விமானம் லண்டன் நகரில் தரையிறங்கியதுமே, வாரியார் சுவாமிகளின் உடல்நிலை மோசமடைந்தது. அதனால் உடனேயே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சில நாட்கள் கழித்து, லண்டனிலிருந்து வாரியார் சுவாமிகள், தாயகம் திரும்பினார். விமானத்தில் தாயகம் வந்துகொண்டிருக்கும்போதே மூச்சு முட்டத் தொடங்கிற்று. அப்போது கூட அவர், 'காலன் என்னைக் கொண்டு செல்ல முடியாது. பன்னிரண்டு அடி தள்ளியேதான் இருப்பான்' என்னும் இயல்பான நகைச்சுவை உணர்வு குறையாது கூறினார்.

பம்பாயில் விமானம் தரை இறங்கிற்று அங்கிருந்து தமிழ்நாட்டுக்குப் புறப்பட்ட விமானத்திற்கு மாறி, தமிழகம் பயணித்தார் வாரியார் சுவாமிகள். திருப்பதி திருத்தலம் தாண்டிய தருணம், 'திருத்தணி அருகில் நாம் வந்து விட்டோமோ' எனக் கேட்டார்கள் சுவாமி.

திருத்தணி ஆலயம் அருகேதான் ஐய்யனின் சுவாசம் நின்றது. உலக வாழ்வை உயரிய நிலையில் நிறுத்திக்கொண்டு, முருகப் பெருமானுடன் ஐக்கியமானார், அவருக்காகவே சேவையாற்றிய இறையருள் நிறை திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்! 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் தேதியன்று (ஆயில்யம்), தம் 87ஆம் வயதில் இறைபாதம் சேர்ந்தார் சுவாமிகள்.

கிருபானந்த வாரியாரின் சொந்த ஊரான வேலூரின் காங்கேயநல்லூருக்கு அவர் உடல் எடுத்துச் செல்லப்பட்டு, காங்கேய நல்லூரில் உள்ள முருகன் கோவில் எதிரே 'சரவண பொய்கை குளம்' என்ற, ஏற்கனவே கிருபானந்த வாரியார் உருவாக்கிய மண்டபத்தில் உயரமான மேடை அமைத்து அதில் உட்கார்ந்த நிலையில் வாரியார் திருவுருவம் வைக்கப்பட்டது. அது தற்போது 'திருமுருக கிருபானந்த வாரியார் திருக்கோயில்' ஆகியிருக்கிறது. அதே ஆலயத்தில் சுவாமியின் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

காங்கேயநல்லூரில் அவர் வாழ்ந்த வீடு, இன்று நினைவு இல்லமாக இருக்கிறது. அன்னாரின் சமயச் சேவையைப் போற்றும் வகையில், இந்திய அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமியின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை, 2006 ஆம் ஆண்டில் வெளியிட்டுச் சிறப்பு செய்திருக்கிறது.

சிந்தனை, சொல், செயல் என்று அனைத்தையும் முருகப் பெருமானுக்கே அர்ப்பணித்து வாழ்ந்த வாரியார் சுவாமிகள் இன்று மறைந்தும், அவர் விட்டுச்சென்ற பக்தி மணக்கும் வாழ்வியல் முறைகளாலும், இறையருளிய இலக்கியங்களாலும், சொற்பொழிவுகளாலும், பொன்மொழிகளாலும் இன்றும், மறையாய், நிறையாய், இறையாய் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.

அன்பே சிவம்

(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 1993ஆம் ஆணடுப் பயணம் சிங்கப்பூர் வழி இடம்பெற்றது. அப்போது, சுவாமிகள், இவன் பணியாற்றிக் கொண்டிருந்த தமிழ் வானொலியான ஒலிவழி நான்கிற்கு வருகை மேற்கொண்டார். சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த சுவாமிகளின் பாதங்களைத் தொட்டு வணங்கும் மிகப் பெரிய பாக்கியம் இவனுக்குக் கிட்டிற்று. சுவாமிகள் இவனுக்கு ஆசி கூறி, பிரசாதமாகக் கையில் ஒரு பச்சை திராட்சைப் பழத்தைத் தந்தருளினார்! சுவாமிகளை நேரில் பார்க்க மாட்டோமா என எண்ணற்றோர் எண்ணித் தவித்துக் கொண்டிருக்கையில், இறையே தோன்றியது போல சுவாமிகள் அருளியதை எப்பிறவியிலும் இவன் மறக்கமாட்டான்!)



உ

அருட்பெருஞ்ஜோதி! தனிப் பெரும் கருணை!
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!

இறைமையை வணங்குவோம்!

எழுத்தாக்கம் : அழகம்மை சுவாமிநாதன்
கல்லல்

இந்த பிரபஞ்சத்தை படைத்து காத்து அருள் செய்து கொண்டிருக்கும் இறைவனை என்றும் மனதில் நிறைத்து வாழும் போது அந்த வாழ்க்கை அபரிமிதமாக இருக்கும்; அமோகமாக இருக்கும்; ஆனந்தமாக இருக்கும். ஆண்டவனின் அன்பே சார்ந்த கரங்களில் விரியும் வாழ்க்கை அழகானது.

கடவுளால் நம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை வழங்கப்பட்டிருக்கிறதே தவிர அது நாம் சம்பாதித்தது அல்ல. வாழ்க்கை நமக்கு வெகுமதியாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுதல் அவசியம். மனிதன் உட்பட அத்தனை ஜீவராசிகளும் சௌகரியமாக வாழ இந்த பிரபஞ்சம் இடம் அளிக்கிறது; வாழ வைக்கிறது; ஆனாலும் இந்த மனிதனுக்கு எதற்கெடுத்தாலும் சலிப்பு...

மனிதன் அவனது தன்மையை சரியாக வைத்துக் கொள்ளத் தெரியாததால் பிரபஞ்சத்தை குறை சொல்லி வாழ்கின்றான். ஏ! மனிதனே உன் உள்ளம் சரியானால் உலக மக்கள் உள்ளம் அனைத்தும் சரியாகிவிடும். குற்றமற்ற உள்ளம் உடையவன் இறைவனை தனக்குள்ளும் வெளியிலும் காண்பான்.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கர்மவினையாலும், மற்றவர்கள் தங்களை புரிந்து கொள்ளாததினாலும், பிறர் தவறு செய்வதாலும், கடவுள் நம்மீது இரக்கம் காட்டாததினாலும் தான் கஷ்டப்படுகிறோம் என்று நினைத்துக் கொள்கின்றோம். அது முற்றிலும் தவறு. 'தன்னைத்தான் திருத்திக் கொள்வதே ஆன்மீகம்' என்பது ரமண மகரிஷி அவர்களது வாக்கு.

"Correcting one self is correcting the whole world"

அதாவது ஒருவனது சிரமங்களுக்கெல்லாம் காரணம் அவனே. காரணங்கள் எதுவும் வெளியில் இல்லை. நம் மனதிற்குள் தான் இருக்கிறது. அதாவது அகங்காரம் இருக்கிறது. இந்த அகங்காரத்தின் படைகள் தான் காமம், குரோதம், மதம், மாச்சரியம், லோபம், வெறுப்பு, விருப்பு, அச்சம், பற்று, பொறாமை, கடும் சொல், கோபம் போன்றவை. இவையெல்லாம் நம்முள் இருப்பதால்தான் நமக்கு நிம்மதியே இருப்பதில்லை. எதைத் தொட்டாலும் துலங்குவதில்லை. வாழ்க்கையிலும் முன்னேற முடிவதில்லை. இதற்கான தீர்வு...?

> சிந்தனை செய் மனமே; சிவகாமி மகனை சண்முகனை சிந்தனை
> செய் மனமே; செய்தால் தீவினை அகன்றிடுமே ...... என்ன செய்யனும்?

ஞானப் பரம்பொருளான முருகனை முருகக் கடவுளை அவன் திருவடிகளைப் பணிந்து வணங்கி வணங்கி சரணாகதி செய்து மனம், மொழி, மெய்யால் அவனை நினைத்து வாழ நம் சிந்தை தெளிவு பெறும்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே நெடுங்காலமே. – அப்பர் பெருமான்

நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் தெய்வத்தை நன்றி உணர்வோடு நினையாமல் வீணே தான் காலத்தை கழித்துக் கொண்டிருக்கின்றோம் நாம்.

பக்தி தான் வாழ்க்கையில் மிக முக்கியம். பக்தியோடு வாழ்கிறேன் என்று சிலர் சொன்னாலும் அதில் உண்மை இருப்பதில்லை. படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில் என வாழ்வது பக்தியா? சிந்திக்க வேண்டும். என்ன சிந்திக்க வேண்டும்? நம் மனத்தை நாம் உற்று நோக்கி அதன் தன்மை எப்படி இருக்கிறது என சிந்திக்க வேண்டும்.

தூய்மையான மனம் அமைதியாக இருக்கும். மனதில் குப்பைகள் ஆகிய துர்குணங்கள் இருந்தால் என்றுமே நிம்மதி இருக்காது. இறைவனை உண்மையான பக்தியோடு வழிபடும் போது மட்டுமே நமக்கு அவனது அருள் கிட்டும். மனதின் தன்மையும் மேம்படும்.

இந்த வாழ்க்கையில் நாம் பெற வேண்டியது இறைவனின் அருளே. கந்த சஷ்டி பெருவிழாவில் ஆறாம் நாளில் சூரசம்ஹாரம் என்ற நிகழ்வு நடக்கும். அதாவது முருகப் பெருமான் தனது வேலால் சூரபத்மனின் தலையை கொய்து அவனை வெற்றி கொள்வார்.

அது எதை உணர்த்துகிறது என்றால், அதாவது நம் மனத்தில் இருக்கும் அகங்காரம் எனும் அசுரனை முருகப் பெருமானின் திருவருளைப் பெற்று அகற்றும்போது சீவன் சிவனாகிறது என்பதைத் தான். சீவனும் சிவனும் கலக்கும்போது அதைத்தான் திருக்கல்யாணம் என்கிறோம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!


முருகப்பெருமான் குருவாக வந்து நமக்கு அருள் செய்யும்போது நமக்கு ஜீவன் முக்தி கிடைக்கிறது. ஜீவன் முக்தி என்றால் மரணம் அல்ல. அகங்காரம் அதாவது 'யான்', 'தான்', 'நான்' என்பதெல்லாம் நீங்கப் பெற்று தெய்வத்தன்மை உடையவர்களாக ஆனபின் இறைவனே நமக்குள் இருந்து இயங்குவார். நமது உடல் வெறும் ஊடகமாக மட்டுமே செயல்படும். அப்படிப்பட்ட மேன்மை அடைதலே இந்த பிறப்பின் பயன்.

மனிதன் தெய்வமாகி செயல்படும் போது எல்லா நன்மைகளும் வீட்டிற்கு, சமுதாயத்திற்கு, நாட்டிற்கு, உலகத்திற்கு உண்டாகும். அமைதியும் அன்புமாக எல்லாம் நடக்கும். முரண்பாடுகள் அற்ற அன்பான உலகமாக இந்த உலகம் காட்சியளிக்கும்.

நம் மனதில் உள்ள அசுரனை நீக்கி, அதாவது நம் கீழ்மைப் பண்புகளை விடுத்து வாழும்போது மட்டுமே எங்கும் நிம்மதி, எதிலும் நிம்மதி. இறைவனை துணை கொண்டால் மட்டுமே இது சாத்தியம்.

நன்றி உணர்வோடு இறைவனை வணங்கி அவன் அருளால் நாம் நம்மைச் செதுக்கி சீர்படுத்தி அன்பும் கருணையுமாய் வாழ்வோம்.

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்..



தண்ணீர்மலை முருகன் தமிழ்மாலை

டாக்டர் வ. ஜெயபாலன் வள்ளியப்பன், ஈப்போ

தண்டாயுதம் ஏந்தித் தண்ணீர்மலை வாழப்
பண்டாரக் கோலமுடன் வந்தான் – அந்த
வண்டாடும் பூங்குழலி வள்ளியம்மை தனைமறந்து
கொண்டாடும் பினாங்கு நகர் நின்றான்!

வெண்ணீரில் வினைதீரும் வேலனவன் சன்னிதியில்
கண்ணீர் பெருகி நின்ற கணமே – அந்தத்
தண்ணீர்மலைக் குமரன் தேடிவந்து தாங்கிடுவான்
பன்னீரால் நனையுமவர் மனமே!

எண்ணியது கைகூடும் செயலெல்லாம் செயமாகும்
சென்னியிலே சேந்தனையே வைத்தால் – முன்
பண்ணிய பாவமெல்லாம் பறந்தோடி நலமாகும்
மண்ணளந்த மால்மருகன் நினைத்தால்!

காவடிகள் ஆடிவரும் கந்தனையே தேடி வரும்
பாவடிக்குள் பைந்தமிழாய் வருவான் – அவன்
சேவடியைப் பணிவோரின் ஓரடிக்கு ஓடிவந்து
தாவடிக்குத் துணைநின்று அருள்வான்!

சிந்தையிலே தந்திமுருகன் தம்பியினை நினைத்தாலே
முந்தை வினை வந்தவினை ஏது? – இனிப்
பிந்திவரும் வினையாவும் சந்திரனாய் தேயுமந்த
கந்தனடி பற்றி நிற்கும் போது!

ஆணவத்தைக் கால்மிதித்துக் காவடியைத் தோள் சுமந்து
தானதத்தக் தாளமிட்டு ஆடும் – அந்தக்
கோவணத்து ஆண்டிமுகம் காணவரும் கோடிசனம்
நாவினிக்க நாதன் புகழ் பாடும்!

செட்டிமக்கள் கட்டிவைத்த சொக்கட்டான் கட்டிடத்தை
இட்டமுடன் கோவில் எனக் கொண்டான் – அவர்
திட்டமிட்டு இட்ட பணி செய்வதற்குச் சேவகனாய்
எட்டுக்குடி விட்டு அவன் வந்தான்!

தங்கச் சிலையழகன் தண்ணீர்மலை வேலன்
வங்கக்கடல் தன்னைத் தாண்டி – நல்ல
சங்கத் தமிழோங்கும் எங்கள் மலைநாட்டில்
தங்கி யருள் செய்யவந்த ஆண்டி!

சின்னவனின் பாட்டிதனைச்சிரித்தபடி கேட்டிருக்கும்
கண்மணியே தண்டமிழின் தாசா – உனை
மன்னவனாய் மனதிருத்தி தன்னலம் மறந்தவருக்கு
விண்ணுயர வாழ்வு தரும் நேசா!

தண்ணிமலை ஆண்டவனே! தனவணிகர் தவப்பயனே
திண்ணியதோர் நெஞ்சமதைத்தருவாய் – நான்
எண்ணியது நல்லவையாய் நாளும் இருந்திடவே
மண்ணிலென்னை வாழவைத்து அருள்வாய்!



பர்மாவில் நகரத்தார் திருப்பணி

டாக்டர் சி. சிவஞானம்
புக்கிட் மெர்தாஜம்

பர்மாவிற்கு மியன்மார் என்ற பெயர் 1989இல் தான் அப்போது நடந்த இராணுவ ஆட்சியால் சூடப்பட்டது. அதற்கு அவர்கள் கொடுத்த காரணம் பர்மன் இனத்தவர் தவிர மற்ற இனத்தவர்களும் அந்நாட்டில் உள்ளார்கள் என்பதே. இதற்கு முன்பு 1885 முதல் 1989 வரை பர்மா என்ற பெயரே இருந்து வந்தது. தலைநகரான இரங்கூன் என்ற பெயரும் யங்கூன் என்று 1989 இல் தான் மாற்றம் கண்டது.

கல்கத்தாவில் வியாபாரம் செய்து வந்த நகரத்தார்கள் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்னும் முதுமொழிக்கிணங்க, அங்கிருந்து பாய்மரக் கப்பல்களில் பர்மாவுக்குப் போயினர்.

1939 முதல் இரண்டாம் உலகப்போர் ஆசியாவிற்குப் பரவிய 1941 ஆம் ஆண்டுவரை நகரத்தார் வேறு எந்த நாட்டையும் விட பர்மாவில்தான் கூடுதலாக முதலீடு செய்தனர். இதற்குத் தக்கவாறு அந்நாட்டில் தான் நகரத்தார் கோயில்களின் எண்ணிக்கையும் மிகுதியாக இருந்தது. 62 ஊர்களில் முருகன் கோயில்களையும் ஒரு பெருமாள் கோயிலையும் நடத்தி வந்தனர்.

முதலில் மோல்மீனில் குடியேறினர். நாளடைவில் பர்மா நாடெங்கும் சின்னஞ்சிறு ஊர்களிலும் பரவி தங்கள் கொடுக்கல் வாங்கல் தொழிலை அந்நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்த வகையில் செய்து வந்தனர். பெரும்பாலான நிலங்கள் நகரத்தார்களின் உதவியால் வேளாண்மைக்குக் கொண்டுவரப்பட்டன. ஒரு சமயத்தில் பர்மாவின் மொத்த வேளாண்மை நிலங்களில் நான்கில் ஒரு பாகம் நகரத்தார்கள் வசம் இருந்தது.

பர்மாவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் 1923இல் தோன்றிது. பர்மாவில் தொழில் செய்யும் எல்லா நாட்டுக்கோட்டை செட்டியார்களும் உறுப்பினராயினர். ஏறத்தாழ 150 ஊர்களில் 1250 கடைகள்வரை இருந்தன.

சிவ தலங்களிலெல்லாம் தலைமைத் தலமாக விளங்கும் காசி விசுவநாதர் கோயிலில் திருவனந்தல், உச்சிகாலம், அர்த்தசாமம் ஆகிய முக்கிய வழிபாடுகள் நடைபெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்து அதற்குத் தேவையான பணத்தை வழங்கியவர்கள் பர்மா நகரத்தார்களே ஆவார்கள். இதற்காக ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி என்ற சபையை 1934இல் இரங்கூனில் அமைத்தனர். 1962 வரை இச்சபை இயங்கியது. பிறகு அதன் சொத்துக்களும் பொறுப்புகளும் காரைக்குடியில் தலைமை அலுவலகம் வைத்து இயங்கும் குழுவுக்கு மாற்றப் பெற்றன.

நகரத்தார் கோயில்கள் 62 எனினும், நகரத்தார் தொழில் செய்த பல சிற்றூர்களில் கோயில்கள் இல்லை. எனவே சில கோயில்கள் பல ஊர்களில் வாழ்ந்த நகரத்தார்களுக்குப் பொதுவாக அமைக்கப்பட்டன. சான்றாக பாக்கோ மாவட்டத்து நவுலியப்பன் என்ற ஊரில் இருந்த கோயில் தோபி, பைஞ்சுலோ, சருட்டக்கா, சூச்சின் என்ற ஊர் நகரத்தார்களுக்கும் பொதுவானது. தமிழர், பர்மியர் ஆகிய அனைவருக்கும் திருக்கார்த்திகையன்று அன்னம் பாலிக்கப்பட்டது.

தண்டாயுதபாணியின் திருவுருவத்துக்கு மாசி மகத்தன்று இந்நகர் வீதிகள் வழியாக உலா நடைபெற்றது.
கம்பையில் உள்ள முருகன் கோயிலுக்கு திருக்கார்த்திகை நாளன்று வருகைபுரிந்த அனைவருக்கும் நகரத்தார்கள் அறுசுவை உணவு படைத்தனர்.

சூம்பியோ என்னும் ஊரில் நகரத்தார்கள் பௌத்த துறவிகளான பொங்கிகள், பர்மிய அலுவலர்கள் ஆகியோருடைய உதவியுடன் நவம்பர் மாதத்தில் மூன்று நாட்களுக்குப் புத்தர் பெருமானுக்கு ஒருபெரிய விழாவைக் கொண்டாடினர். அன்று இரவு, சூம்பியோ
பெருமக்களுக்கு நகரத்தார் ஒரு விருந்து வைத்து, பர்மிய மொழியில் நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தினர்.

ஈந்தட்டா என்ற ஊரில் பர்மியர்களுடைய முக்கிய திருவிழாக்களை நடத்தும் பொறுப்பையும் அவற்றுக்கு உரிய செலவுகளையும் நகரத்தார் ஏற்றுக் கொண்டனர்.

இரங்கூன்

இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் தர்ம பரிபாலன சபை என்ற அமைப்பு 1935இல் ஏற்பட்டது. இதன் பொறுப்பில் இருந்த நிறுவனங்கள் பின்வருமாறு

1. மொகல் தெரு 112 – 122 எண்களில் உள்ள ஆறறை தண்டாயுதபாணி கோயில்

2. பசுமந்தான் தண்டாயுதபாணி கோயில்

3. இரங்கூனினிலிருந்து 10 கிமீ. தொலைவிலுள்ள கம்பையில் ஒரு மடம்.

பர்மாவெங்கும் புகழ்பெற்ற தைப்பூச விழாவின்று இரங்கூனிலிருந்து பசுமந்தானுக்கும் பிறகு பசுமந்தானிலிருந்து இரங்கூனுக்குமாக நடைபெறும் சுவாமி புறப்பாட்டைக் காண ஆயிரக்கான மக்கள் கூடுகின்றனர்.

ஆறறைக் கோயில் 1890இல் (சியன் துர்னெல் 1860இல் என்கிறார்) கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆறு அறைகள் (வீடுகள்) கொண்ட ஒரு தொகுப்பான பெரிய கட்டிடமாக இருப்பதால் இவ்வாறு பெயர் பெற்றது. ஒவ்வொரு அறையிலும் ஏறத்தாழ 30 கடைகள் இருந்தன. இந்த மூன்று மாடிக் கட்டிடத்தின் தரைமட்டத்தில் கடைகள் இருந்தன. முதல் மாடியில் கோயில் இருக்கிறது. இது நகரத்தார் தொழில் செய்யும் பகுதியில் இருப்பதால், பொது மக்கள் இங்கு வருவது அரிது. பர்மா நாடெங்கும் தொழில் செய்த நகரத்தார்கள் இங்கே கூட்டம் நடத்தித்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க எத்தனையோ முடிவுகளைச் செய்திருக்கிறார்கள் என்பது இந்தக் கோயிலின் தனிச் சிறப்பு.

திதி முதலிய முன்னோர் வழிபாட்டு நிகழ்ச்சிகளை நகரத்தார்கள் இக்கோயிலில் நடத்தியிருக்கிறார்கள். நகரத்தார்கள் சிறப்பாகக் கடைபிடிக்கும் பிள்ளையார் நோன்பு, இங்குதான் கொண்டாடப்படுகிறது.

பசுமந்தான் தண்டாயுதபாணி கோயில் 1900ஆம் ஆண்டு அளவில் இராஜ கோபுரத்துடன் கட்டி முடிக்கப்பட்டது. அதன் அருகே கட்டப்பட்ட விசாலமான பெரிய மடம், கார்த்திகை, தைப்பூச நாட்களில் வரும் ஏராளமான பேர் ஒரே சமயம் உணவு உண்ணுவதற்கு ஏற்ற உணவு மண்டபத்துடன் கலை நிகழ்ச்சிகளும் கதாகாலட்சேபங்களும் நடத்துவதற்கு ஏற்ற மன்றத்துடனும் கூடியது.

நகரத்தார்கள் தர்மபரிபாலன சபை, தமிழ்நாட்டிலிருந்து சைவ சமய அறிஞர் பலரை வரவழைத்து உரைகள் நிகழ்த்த ஏற்பாடு செய்திருக்கிறது.

பகவாந்தாஸ் மாளிகையில் மார்வாரிகள் நடத்திவரும் அநுமான் கோயில், குஜராத்திகள் நடத்திவரும் சமணர் கோயில் மற்றும் சூல பகோடா, சுவேடகான் பகோடா போன்ற பௌத்தர் கோயில்களுக்கும் நகரத்தார்கள் நன்கொடைகளை வழங்கியுள்ளனர்.

திருவானைக்கா சிதம்பரம் செட்டியார் தம் பெயரால் இரங்கூனில் ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். இக் குடும்பத்தார் 51வது வீதியில் ஒரு பெருமாள் கோயில் கட்டினர். அவர்கள் அக்கோயில் நிர்வாகத்தை செட்டியார் அறையில் (59/61 மொகல் வீதி) கடை வைத்திருந்த பள்ளத்தூர் சித. ப.சி.ராம. கடையினரிடம் ஒப்புவித்தனர்.

மோல்மீன்

மோல்மீன் என்பது பர்மியத் துறைமுக நகரம். அரிசி, தேக்குமர ஏற்றுமதிகளால் புகழ் பெற்றது. பர்மாவில் நகரத்தார் முதலில் தொழில் செய்த ஊர் இதுவே. ஆற்றோரமாக அமைந்த ஸ்டிராண்டு சாலைக்கு இணையாக அமைந்த லோயர் மெயின் ரோடில், 214ஆம் இலக்கம் கொண்டது நகரத்தார் கோயில். இங்கு சுப்பிரமணியரின் வேல் ஊன்றப்பட்டிருக்கிறது. சுப்பிரமணியர் போல உருவம் தெரியுமாப்போல, இந்த வேலுக்கு உடை உடுத்தப்படுகிறது. தங்கக் கவசம் அணிவிக்கப்பெற்று இந்த உருவம் தைப்பூசம் முதலிய திருவிழா நாட்களில் வெள்ளி ரதத்தில் மோல்மீன் நகரின் முக்கிய வீதிகள் வழியாக எடுத்தச் செல்லப்பட்டு மோல்மீனிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள டியாங்க்கோவை அடையும். திருவிழாக் காலத்துக்கு சுவாமி அங்கேயே தங்கியிருக்கும்.

மோல்மீனிலிருந்து 20 கி.மீ. தொலைவில் சௌதலம் என்ற ஊர் இருக்கிறது. நகரத்தார்கள் இவ்வூர்ப் பெயரைச் சிவதலம் ஆக்கியுள்ளனர். சிவதலத்து மலைமீது சுப்பிரமணியர் கோயிலும் கட்டியுள்ளனர். மலையின் அடிவாரத்தில் நகரத்தார் மடம் இருக்கிறது. சாதி மத வேறுபாடின்றி, திருவிழா நாட்களில் அனைவருக்கும் உணவு படைக்கப்படும்.

மோல்மீனிலிருந்து 70 கி.மீ. தொலைவில் மோல்மீன் ஆறு கடலுடன் கலக்கும் தெற்குமதி என்ற இடத்திற்கு மோல்மீன் நகரத்தார்கள் அமாவாசை, பௌர்ணமி, புத்தாண்டுப் பிறப்பு போன்ற நாட்களில் சென்று கடல் நீராடி வந்தனர்.

பர்மாவில் நகரத்தார் கோயில்கள் யாவும் திராவிடக் கட்டிடக் கலைப்படி கட்டப்பட்டன. சில கோயிலைக் கட்டுவதற்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தச்சர், கொல்லர், ஸ்தபதி ஆகியோர் கோயில் வேலை முடிந்த பிறகு நகரத்தார்களின் கடைகளில் கணக்குப்பிள்ளைகள் ஆயினர்.

பர்மாவில் நகரத்தார்களின் கோயில்கள், மடங்கள் உள்ள ஊர்களாவன

1. இரங்கூன்
2. பசுமந்தான்
3. கீமந்தான்
4. லேசுவ
5. மோபி
6. தக்கி
7. அவுக்கான்
8. தொவுஞ்சை
9. லேப்பட்டான்
10. மீன்லா
11. அவுப்போ
12. சூப்பிங்க்கான்
13. சீக்கோன்
14. நந்தலின்

15. பவுண்டை
16. தேக்கோன்
17. புறோம்
18. ஈனாஞ்சான்
19. தயட்மியோ
20. ஈந்தட்டா
21. நத்தஞ்சான்
22. பாசியன்
23. மைனாங்
24. உவாக்கமா
25. மியாங்மியா
26. சூமங்கை
27. அய்மென்
28. பியாப்பம்
29. சைலா
30. டேரியா
31. தொந்தை
32. போக்கலை
33. மோல்மேன்சூன்
34. சைப்பி
35. சோசான்
36. மூப்பின்
37. எவுண்டம்
38. மவுஞ்சவுட்டான்
39. தோங்குவா
40. கட்டப்பினா
41. கய்யான்
42. டாப்பின்
43. பக்கோ
44. தன்னப்பின்
45. சைட்டோ
46. சைக்கோ
47. தத்துவம்
48. சுவைச்சான்
49. மோல்மீன்
50. டய்யூ
51. நவுலியப்பன்
52. பென்விக்கோன்
53. பியூ
54. டாங்கோ
55. பின்மெனா
56. மீஞ்சான்
57. மாந்தளை
58. மணியுவா
59. மீன்பு

ஒவ்வோர் ஊரிலும் ஆண்டுதோறும் ஒரு திருவிழா சிறப்பாக நடைபெற்று வந்தது. அவற்றுள் தைப்பூசம், பங்குனி உத்திரம், சித்திரா பௌர்ணமி முதலிய உற்சவங்கள் மிகச் சிறப்பானவை. பல ஊர்களில் திருவிழாவையொட்டி சுவாமி பவனி வருதல் நன்றாக நடைபெற்று வந்தது.

இந்தக் கட்டுரையை எழுத உதவி செய்த நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் பின்வருமாறு

1. திரு. சோமலே யின் அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள்
2. பேராசிரியர் முனைவர் சியன் துர்னெல் லின் "The Chettiars in Burma" & "Fiery Dragons : Banks, Moneylenders and Microfinance in Burma".
3. மைக்கல் அடாசின் "The role of South Indian Chettiars in British Burma".
4. திவ்யா இராமசாமியின் blog "Fading Chetty Heritage Heritage - Myanmar".
5. கூகுல் தேடல்கள்



ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் படிப்பதன் நன்மைகள்

சி. என். நாச்சியப்பன்
சிங்கப்பூர்

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் என்பது அன்னையின் ஆயிரம் பெயர்கள். லலிதா சகஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்யும்போது லலிதாம்பிகையின் பெருமைகள் மட்டுமல்ல, ஆன்மீகம் பற்றிய விழிப்புணர்வு மந்திரங்கள், தந்திரங்கள், பிரபஞ்சத்தின் படைப்பு ரகசியங்கள் என்று முழுமையான ஞானம் உருவாகும். சரஸ்வதியின் குருவான ஹயக்ரீவர் அகத்திய மகரிஷிக்கு லலிதா சகஸ்ரநாமத்தின் பெருமைகளை பின்வருமாறு கூறுகிறார்.

தேவியின் ஆயிரம் நாமங்களை உமக்குக் கூறினேன். இவை ரகசியங்களுள் ரகசியமானது. இதைப் போன்ற துதி ஒன்றுமில்லை. இது நோய்களைப் போக்கும், செல்வத்தை அளிக்கும், அபமிருத்யுவைப் போக்கும் (அப மிருத்யு என்றால் அகால மரணம்), நீண்ட ஆயுள் தரும், பிள்ளைப் பேறு இல்லாதவர்களுக்கு பிள்ளைச் செல்வம் தரும்.

கங்கை முதலிய புண்ணிய நதிகளில் முறைப்படி பலதடவை நீராடுதல், காசியில் கோடி லிங்கப் பிரதிஷ்டை செய்தல், க்ரஹன காலத்தில் கங்கைக் கரையில் அசுவமேத யாகம் செய்தல், பஞ்ச காலங்களில் நீர் வசதியற்ற இடங்களில் கிணறு வெட்டுதல், தொடர்ந்து அன்னதானம் செய்தல், இவை எல்லாவற்றையும் விட மிகுந்த புண்ணியமானது லலிதா சகஸ்ரநாமப் பாராயணம்.

இது பாவத்தை நீக்கும். பாவத்தை நீக்க இதனைவிட்டு வேறு உபாயம் தேடுபவன் பயனில்லாதவன். பௌர்ணமியன்று சந்திர பிம்பத்தில் தேவியை தியானம் செய்து வழிபட்டு இதனைப் படிக்க நோய்கள் நீங்கும், பூத பிசாசு உபாதைகள் விலகும், இதனைப் பாராயணம் செய்யும் பக்தனின் நாவில் சரஸ்வதி தேவி நர்த்தனம் ஆடுவாள், வாக்கு பலிதம் உண்டாகும், கல்லாதவைகள் தானாக பக்தனுக்கு தெரிய வரும், எதிரிகளை பேச முடியாது வாக்ஸ்தம்பம் செய்துவிடுவாள், அரசனே எதிர்த்தாலும் அன்னையின் பக்தனிடம் தோல்வி அடைவான், இதனைப் பாராயணம் செய்பவன் பார்வை பட்டாலே தோஷங்கள் விலகிவிடும்.

ஸ்ரீ சக்கிரத்தில் பிந்துவிலுள்ள லோக மாதாவை அடைய பயன்படும் ஸ்ரீவித்யை போன்று மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பிகையைப் போன்று தேவதையோ, லலிதா சகஸ்ரநாமம் போன்று ஸ்தோத்திரமோ உலகில் இல்லை.

பூர்வ ஜென்ம புண்ணியத்தால் மட்டுமே இதனைப் பாராயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். **கடைசிப் பிறவியாக இருந்தால் மட்டுமே ஸ்ரீவித்யா ஜெபமும், சகஸ்ரநாம பாராயணமும் செய்ய முடியும்.** தேவியின் அருளின்றி யாரும் இதனைப் பெறமுடியாது என்றெல்லாம் பலவாறாக பலச்ருதி என்ற பகுதியில் ஹயக்ரீவர் அகத்தியருக்கு உபதேசிக்கிறார்.

லலிதா சகஸ்ரநாமத்தில் இன்னொரு சிறப்பு, இதைப் பாராயணம் செய்யும்போது நமது சமயத்தின் அனைத்து கடவுளையும் வழிபட்ட புண்ணியம் நமக்கு சேரும். எனவே லலிதா சகஸ்ரநாமத்தின் பொருள் அறிந்து பாராயணம் செய்ய முயலுங்கள். எதை அடைய விரும்புகிறீர்களோ அது தானாய் வந்து சேரும்.

அகத்திய முனிவருக்கு லலிதா சகஸ்ர நாமத்தின் பெருமையைப் பற்றி எடுத்துக் கூறினார் ஹயக்ரீவர். இதைக்கேட்ட அகத்தியர் பெரிதும் மகிழ்ந்து, 'லலிதா சகஸ்ரநாமத்தை எந்த தலத்திற்கு சென்று கூறினால் அன்னையின் அருள் முழுமையாக கிடைக்கும்?' எனக் கேட்க அதற்கு ஹயக்ரீவர் 'பூலோகத்தில் அன்னை மனோன்மணியாக வீற்றிருக்கும் திருமியச்சூர் சென்று அங்கு சகஸ்ரநாமத்தை கூறி அன்னையை வழிபடவும்' என்றார்.

அகத்தியர் உடனே தன் மனைவி லோபமுத்திரையுடன் திருமியச்சூர் சென்று லலிதாம்பிகையை தரிசித்து, லலிதா சகஸ்ரநாமம் சொன்னார். அம்பாள் மகிழ்ந்து அத்தம்பதிகளுக்கு நவரத்தினங்களாக தரிசனம் தந்தாள்.

கண் மூடி கண் திறப்பதற்குள் லோக மாதா அண்ட சராசரங்களையும் படைத்தும், காத்தும், அழிக்கும் வல்லமை படைத்தவள். தன் பக்தனுக்கு விளையாட்டாக நன்மைகள் செய்பவள்.

பக்தனின் தேவையை அறிந்து, அவன் கேட்காமலேயே தானாக வந்து உதவி செய்பவள். அபிராமி அந்தாதி பாடிய பட்டருக்கு உதவி செய்ய, தன் இடது காது அணிகலன்களை வானத்தில் வீசி அமாவாசையை பௌர்ணமி ஆக்கி, ராஜ தண்டனையிலிருந்து காத்தாள்.

பாஸ்கராயர் என்பர் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்திற்கு விளக்க உரை எழுதியவர். எந்தவித சந்தேகங்களுக்கு அவளுடைய விளக்கமே முடிவாக வைத்துக் கொள்ளப்படுகிறது. தனது இறுதி காலத்தை திருமீயச்சூரில் லலிதா அம்பிகையை தினம் வணங்கி வந்தார். குடும்பம் வறுமையில் வாடியது. லலிதா சகஸ்ரநாமத்தில் அபர்ணா என்ற நாமம் ஒருவரது கடன்களை அடைத்து, செல்வத்தை கொடுக்க வல்லது. அதை அவர் உச்சரிக்கும் போது, ஒருபெண் அவருடைய கடன்களை அடைத்து, வீட்டில் செல்வத்தை உண்டு பண்ணினாள்.

இதே பாஸ்கராயர் காசியில் இளம் வயதில் வேதம் கற்ற காலங்களில், தேவியின் கோடிக்கணக்கான நாமங்களைச் சொல்ல, அவரின் எதிரிகளிடமிருந்து காத்தாள்.

மற்ற எல்லா தெய்வங்களையும் விட லோக மாதா தாயின் கருணையோடு, மிக எளிதாக தன் பக்தனுக்கு மோட்சம் கிடைக்க வழி செய்கின்றாள்.

லோக மாதா புகழ் போற்றி! போற்றி!



மலையானே மலையானே தண்ணீர் மலையானே

டாக்டர். குமரப்பன் அழகப்பன்

மலையானே மலையானே தண்ணீர் மலையானே
வருவானே வருவானே வேண்டியதும் வருவானே

நீர் சூழ்ந்த பினாங்கு நகராளும் மன்னவா
பால் சுமந்து வருவோர்க்கு பேரருள் தந்தவா
பார் எல்லாம் உனயன்றி யாராழ்வார் வேலவா
கால் நடையாய் வரும் எங்களுக்கு காட்சிதர வாவா

நலம் வாழ வழிகாட்ட நீ வரவேண்டும்
தூய எண்ணம் தினம் உதிக்க நீ அருள வேண்டும்
மாய உலகத்தில் சீர்கேடின்றி வாழ வேண்டும்

வளம் பெருக வழி நெடுக சுப்பிரமணியய்யா
மலையேறி மகிழ்ந்துவாரோம் உனை கானதான்யா
நிலம் தந்து நீர் இரட்சிப்பாய்யய்யா
உனையன்றி யார்வருவார் துணைநீயேயய்யா

பசுமரத்தாணி போல் நெஞ்சில் எப்பொழுதும் உன்நாமம்
வரும் துயரம் அதைதீர்க்க அடைந்தேன் உன்பதாம்
தண்டபாணி என அழைக்க நீ வர வேண்டும்
சீரும் சிறப்பும் உன்னால் வந்து சேரும்!



Hinduism
Caste Reforms

Angappan Regupathi
Jitra, Kedah, Malaysia

We take pride in being born into this Hindu faith that has been passed on from time immemorial; a faith that has faced and overcome many challenges in the past. However, the challenges were possibly confined to the land of origin, India, and arose primarily from the limited engagements with external influences and ideas then. Now, however, in our global border-less world, the challenges are more prominent and crucial. Detractors argue that the unjust Casteism is a, if not the, key feature of Hinduism, and so Hinduism must be defeated.This brief article discusses Casteism and related issues and proposes some reform resolutions.

Casteism stratifies humans into lower-upper classes and enables those of upper castes to oppress those of lower castes, culminating in the most abhorrent practice of untouchability against the lowest caste or "out-caste". There are three primary scriptural sources of Caste in Hinduism. The Manusmriti (written between 200 BCE and 200 CE) and the Bhagavad-Gita (composed between 400 BCE and 400 CE) are estimated to have been authored at roughly around the same time. Whereas, the Purusha Suktham, a set of hyms in the Rig Veda (written between 1500 to 1200 BCE), was authored a thousand years earlier.

The Purusha Suktham metaphorically compares the four Varnas (Castes) to four different body parts of the Cosmic Being (Isvara, or God). Brahmins, Kshatriyas, Vaishyas, and Shudras are, said to be, respectively, the head (or mouth, signifying intellect), arms (signalling strength and protection), thighs (denoting productivity and sustenance), and feet (indicating support and services) of the Cosmic Being. Critics argue that this is Caste classification, i.e., head, being the upper part allegedly implies superiority, whereas feet, being lower implies inferiority, and so, is Casteism. Nonetheless, compassionate and enlightened Hindu gurus explain that the references to these body parts merely reflect the different qualities of each caste, with no quality or caste being superior or inferior, as all the qualities and castes are equally necessary for societal well-being.

The Manusmriti, however, classifies these four Varnas (Castes) from the highest to the lowest, in this order, Brahmin, Kshatriya, Vaishya, and Shudra, and assigns different tasks for each caste. Brahmins to perform rituals, teach and preserve scriptural knowledge. Kshatriyas to protect society, enforce law and order. Vaishyas to do commerce, trading, and farming.

Shudras to provide service and support all. Further, it introduces caste immobility and confines persons to the caste of their parents, thereby culminating in absolute Casteism.

In contrast, although the Bhagavad-Gita, considered to be the gist of the Vedas and the Upanishads (the primary scriptures of Hinduism), it does not proffer Casteism, it only talks about Caste. In Chapter 4, Verse 13, Krishna says that He created the four-fold Varnas (Castes), but He states that the castes are created based on a person's inherent gunas (natural tendencies, qualities, or aptitudes) and activities (work). In Chapter 18, Verse 41, He explains further that a person's caste is based on the person's work, which in turn is based on the person's gunas. There is no mention whatsoever of caste being based on birth, and there is definitely no mention of a caste being superior or inferior to another. Nevertheless, in Chapter 3, Verse 35, Krishna says that it is better to do one's own duty, even if it is imperfectly done, rather than doing another's duty, even if it is perfectly done. Many vilifiers pounce on this to argue that this bars caste mobility. However, the empathetic and wise gurus remind that the duty here is based on the person's own gunas (natural aptitude) and not determined by the parents' caste, and therefore, caste mobility

is not restricted. This means that a person could migrate from one's birth caste to another, based on her or his aptitude. The verse actually addresses only seekers of spiritual elevation. It is not an injunction to the public to not switch duties! It teaches that if one wishes for liberation, one ought to be focused on just doing one's duty, and not be swayed by the lack of worldly rewards the duty may bring.

